30515

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சைவசமயத் திருமுறைப்
பாராயணத்திரட்டு

ஒழுக்கமாய் வாழ விரும்பும்
சிறுவர், சிறுமியர்,
பெரியோர் அனைவராலும்
காலை மாலை நேரங்களில் வீட்டிற்
பாராயணஞ் செய்யத் தகுந்த நூல்.
ஆலயங்களிற் காலை மாலை பூசை
நேரங்களில் தோத்திரஞ் செய்யவும்
பிரார்த்தனைக் காலங்களில் இன்னிசையுடன்
பாடவும் ஏற்ற திருப்பாடல்களை உடையது.
இத்திருப்பாடல்கள் தெய்வமணம் கமழ்பவை,
திருவருள் பொதிந்தவை.
பக்தியுடன் ஓதுவார்தம்மைப்
பரமன் திருவடி சேரச் செய்பவை.

மகாதேவ ஆச்சிரமம்
தவத்திரு வடிவேல் சுவாமிகள்
வேண்டுகோளுக்கிணங்கத்
தாளையான் அச்சகத்தார்களால்
தொகுத்துப் பதிப்பிக்கப்பெற்று இலவசமாய்
அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.
1975

முதற்பதிப்பு — 1975

விஷய அட்டவணை

விஷயம்		பக்கம்
(1)	சற்குரு வணக்கம்	(I)
(2)	அநுபூதிபெற வழி	(II)
(3)	முகவுரை	(III)
(4)	அணிந்துரை	(V)
(5)	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	1
(6)	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்	8
(7)	சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்	18
(8)	மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்	22
(9)	திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா	33
(10)	சேந்தனூர் அருளிய திருப்பல்லாண்டு	39
(11)	திருப்புராணம்	41
(12)	திருப்புகழ்	50
(13)	கந்தரலங்காரம்	54
(14)	கந்தரநுபூதி	63
(15)	தாயுமான சுவாமிகள் பாடல்	77
(16)	திருமந்திரம்	87
(17)	பட்டினத்தடிகள் பாடல்	95
(18)	பரஞானத்தின் பயன்	102
(19)	ஔவை குறள்	103

சற்குரு வணக்கம்.

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானும்
அந்தமிலா வின்பநமக் காவானும் — எந்தமுயிர்
தானுகு வானுஞ் சரணுகு வானுமருட்
கோனுகு வானுங் குரு. (1)

அழியா அவித்தை அழிந்தொழிய ஞான
விழியா லெரிக்கும் விமலன் — மொழியதனை
நெஞ்சே நினைந்துருக நீங்காக் குருபரன்றன்
கஞ்சமலர்த் தாளே கதி. (2)

தூய குருவருளே தோன்ருத் திருவருளில்
தோய வழிகாட்டுந் துன்பகல — நேயமுடன்
பாராது பார்த்துப் பழகியது தானுகில்
வாராது வன்பிறவி வாழ்வு. (3)

ஐயன் திருவடி ஐய மறுத்திடும்
ஐயன் திருவடி அன்பாய்க் காத்திடும்
ஐயன் திருவடி ஆனந்த மாக்கிடும்
ஐயன் திருவடி அளிக்குமருள் வீடே. (4)

பொச்சையா முடலங் காட்டிப்
பொறிபுலன் கரணங் காட்டி
இச்சையார் உயிருங் காட்டி
எழிற்றிரு வருளுங் காட்டி
அச்சமில் நிலையங் காட்டி
அகம்புறந் தானுய்க் காட்டிச்
சச்சிதா னந்தங் காட்டுஞ்
சற்குரு நாதா போற்றி. (5)

சற்குரு வாழ்க சந்நிதி வாழ்க
சிற்பரம் வாழ்க சிதானந்தம் வாழ்க
முத்தர்கள் வாழ்க முறைமுறை வாழ்க
பத்தர்கள் வாழ்க பரநெறி வாழ்கவே ! (6)

எங்கு மிருப்ப திறையருள் பூரணம்
அங்கு தங்கிட வானது மங்களம்
பொங்கி விளைந்தது பூரண மங்களம்
எங்குந் தங்குக வெய்துமங் களமே ! (7)

அநுபூதி பெறவழி

தேகமுதல் நானென்னல் துவிதவிர்த்தி
திகழ்சாட்சி நானென்னல் சாட்சிவிர்த்தி
ஏகபர நானென்னல் அகண்டவிர்த்தி
இம்மூன்று விருத்திகளில் இரண்டைத்தள்ளி
ஆகுமகண் டாகார விருத்திதன்னை
அநவரத மாதரவாய் அப்பியாசித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்கடீர்த்துச்
சொன்னவகண் டேகரச சொரூபமாவாய். (1)

வியாபக மான விளக்கத்தை யன்றி விடயமில்லை
வியாபக நாட்டம் நிலைக்கி னிலைக்கும் விளக்கமுந்தான்
வியாபக மான விளக்கம தாயிடின் மெய்யறிவாம்
வியாபக மான விளக்கம் நமதுரு வேறில்லையே. (2)

இந்நிலை போனிலை யெங்கணு மில்லை யிதுசத்தியம்
இந்நிலை யெல்லாக் கவலையும் போக்கிடற் கேற்றநிலை
இந்நிலை யெல்லாஞ் சுகமாய் விளங்கிடற் கேற்றநிலை
இந்நிலை வந்திடி லன்னிய மின்றி யிலகுமதே. (3)

உ

சிவமயம்

இலங்கை ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம்
ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமி அவர்கள் வழங்கிய

முகவுரை

சைவசமயத் திருமுறைப் பாராயணத் திரட்டு என்னும் இவ்வரிய நூலை நமது பார்வைக்கு திரு. சு. நாகலிங்கம், திரு. சி. அருணாசலம் ஆகிய இரு அன்பர்கள் அனுப்பியிருந்தார்கள்; அத்துடன் நமது அபிப்பிராயங்களையும் எழுதியனுப்புமாறு விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களுக்கு எனது உள்ளங்கனிந்த நன்றி.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், கந்தரநுபூதி மற்றுமுள்ள திருப்பாடல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அரியபாக்கள் இந்த நூலில் இடம்பெறுகின்றன.

மாணவர்களாலும் மற்றவர்களாலும் பொன்போலப் போற்றிப் பாராயணஞ்செய்யத் தகுந்தமுறையில் இப்பாக்கள் அமைந்திருக்கின்றன. இப்பாக்களைப் பக்தி சிரத்தையுடன் ஆலயங்களிலும் பூசையறைகளிலும் தினமும் ஓதிவரின் ஈசுவரகடாட்சம் அனைவர்க்கும் ஏற்படுமென்பது திண்ணம்.

இத்திருமுறைப் பாடல்களின் கருத்தைத் தமிழிற் பாண்டித்தியம் இல்லாதவர்களும் எளிதிற் கற்றுணர்வதற்குக் குறிப்புகளும் பதவுரைகளுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களைப் பண்ணுடன் படிப்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் மூலம் மாணவர்கள் பயிற்றப்படின் சைவ சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் அளப்பரும் நன்மை ஏற்படுமென்பது நமது துணிபு. இத்தகைய தொண்டு தெய்வீகத் தொண்டென்றே ஆசியர்களும் மற்றவர்களும் உணர வேண்டிய தொன்றாகும்.

சைவசமயமும் நமது சமுதாயமும் சீரிய முறையில் மேலோங்கி வளர்வதற்கு நாம் செய்யவேண்டிய கைங்கரியங்கள் பல. அவற்றுள் மேற்கூறிய தொண்டு தலைசிறந்தது. நமது பிள்ளைகளுக்கு ஊட்டும் ஆரம்பக்கல்வி சமயப் பண்பாட்டுடன் இணைந்ததாக இருக்கவேண்டும். அத்தகைய கல்வி முறை நல்லொழுக்கத்திற்கும் நல்வாழ்வுக்கும் அத்திவாரம் போன்றவொன்றாகும்.

அத்திவாரம் பலமில்லாவிட்டால் எங்ஙனம் மேற்கட்டிடம் தகர்ந்து இடிந்து விழுமோ, அங்ஙனமே ஆரம்பக்கல்வி சமயப்பண்பாட்டுடன் இணைந்தில்லாவிடின் மானிட வாழ்வும் பயனற்றதாகிவிடும். சமயப் பண்பாடில்லாத இலௌகிகக் கல்விமுறை சமுதாயத்துக்குச் சொல்லரிய தீமைகளையே விளைவிக்குமென்பது ஆன்றோர் துணிபு.

சிறுவயதில் பிள்ளைகளுக்குப் பக்தி நூல்களையும் நீதி நூல்களையும் பாடஞ் சொல்லிக் கொடுக்கவேண்டும். அவர்களைக் கொண்டு பாக்களை மனனஞ் செய்விக்க வேண்டும். படிக்குங்காலத்தில் பாக்களின் கருத்தைப் பிள்ளைகள் அறியாதிருந்தாலும் உரிய காலத்தில் அறிந்து பயனடைவார்கள். நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் உயர்ந்த இலட்சியமும் இறைநம்பிக்கையும் ஆலய வழிபாட்டின் மேன்மையும் பக்தி நூல்களாலும் நீதி நூல்களாலும் இலகுவில் ஏற்படும். அங்ஙனம் ஏற்படுவதினால் மனிதனது மனத்திலுள்ள மாசு நீங்கி தெய்வீகத்தன்மை மிளிரும்.

இளமையிற் கல்லாத சமயப் பண்பாடு வாலிபத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுமெனப் பெற்றோர்கள் நினைப்பது பேதமையிற் பேதமை.

"இளமையிற் கல்வி சிலையி லெழுத்து"

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா"

என்பன ஆன்றோர் வாக்கியங்கள். மனவமைதியில்லாத மானிட வாழ்வினால் ஏற்படும் பயன்யாது? மனவமைதிக்குச் சாதனம் புலனடக்கமும் பொறியடக்கமும். பஞ்சாட்சர செபம் முதலிய சாதனைகளால் இலகுவில் புலனடக்கம், பொறியடக்கம், மனவடக்கம் ஏற்படும். நமது ஆப்தர்களாற் பின்பற்றப்பட்ட வழியைப்பற்றிப் பின்வருஞ் செய்யுள் கூறுகிறது:-

உய்யவழி காண்பிக்கும் உண்மைப் புலனடக்கம்
மெய்யுணர்வு தானே மிகுந்து.

காகிதத்தாள்கள் பற்றுக்குறையாகவுள்ள காலம் இக்காலம். கிடைப்பதரிது. கிடைத்தாலும் விலையோ உச்சவரம்பை யெட்டியுள்ளது. அச்சுத் தொழிலாளரது சம்பளமும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் பிரதிப்பிரயோசனத்தையும் பணச்செலவையுஞ் சிறிதுங்கருதாது, தமிழுக்கும் சைவசமயத்திற்கும் தொண்டாற்றுஞ் சீரிய நோக்கத்தால், இந்த நூலை நல்ல காகிதத்தில் அழகிய முறையில் அச்சடித்து இலவசமாக அன்பர்களுக்கு மனங்கோணாது விநியோகஞ் செய்தமைக்குத் தானையான் அச்சகத்தார்களை உள்ளன்புடன் பாராட்டுகிறோம். அவர்களுடைய சேவை தெய்வீகத்தன்மை வாய்ந்ததென்றே கூறவேண்டும்.

இவ்வச்சகம் நன்ருய் வளர்ந்தோங்கி இத்தகைய கைங்கரியங்களை மேலும் மேலுஞ் செய்ய வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்திக்கிறேன். சீரடியரெல்லாம் சின்மயம் பெற்று இனிது வாழ்க!

கலைப்புலவர் வீதி,
(மணிக்கூடு வீதி)
யாழ்ப்பாணம்.
1—9—1975

இங்ஙனம்
இலங்கை ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம்
ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான்
சுவாமிகள்.

உ
சிவமயம்

மகாதேவ ஆச்சிரமத் தலைவர்

தவத்திரு வடிவேல்சுவாமி அவர்கள் வழங்கிய

அணிந்துரை

உலகில் மக்களாகப் பிறந்தார் துக்க நிவிர்த்தியையும் பரமானந்தப் பேற்றையும் பெற்று வாழ்வதற்குத் தெய்வீகத் தன்மை வாய்ந்த ஆன்ருேர்கள் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு படிகளை முறைப்படி வகுத்துதவினர். சோபான முறையைப் பின்பற்றி ஒழுகும் பண்புடையோர்க்குத் தகுந்த பிரகாரம் இந்த நூலிலுள்ள திருப்பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

பண்டைக் காலங்களில் மாணவர்கள் ஞானசாஸ்திரங்களைக் கற்கப் புகுமுன் தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளைப் பக்தி சிரத்தையுடன் ஓதிப் பாராயணஞ் செய்து வந்தனர். அங்ஙனம் பாராயணஞ் செய்து வந்த பண்பினுல் அவர்கள் பரிபக்குவமடைந்து உரியகாலத்தில் ஞானசாஸ்திரங்களை எளிதில் கற்றுணர்ந்து தெளிந்து சாதனையின் முதிர்ச்சியால் அநுபூதிஞானம் பெற்றனர். இந்த மரபு வரவரச் சிதைந்து கொண்டே வருகிறது. இது கவலைக்குரிய நிலையாகும்.

இந்த நிலையை நிவிர்த்தி செய்ய வேண்டுமென்னுங் கருத்தை மனதிற் கொண்டே தாளையான் ஆத்மார்த்த அந்தரங்கக் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஞானமூர்த்தி, ஸ்ரீ அருணுசலம் ஆகிய அன்பர்கள் இருவரையும் நாடினேன். அவர்கள் மனமகிழ்ந்து இந்த நூலைத் தொகுத்துத் தாளையான் அச்சகத்தில் பதிப்பித்து அன்பர்களுக்கும் ஆச்சிரமத்தில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசமாக விநியோகஞ் செய்தனர். அவர்கள் ஆற்றிய சேவையை உள்ளன்பு மீதூரப் பாராட்டுகிறேன். இந்த நூலை அச்சிடுகையில் பிழைதிருத்தம் பார்த்துதவிய புலவர்களுக்கு நமது நன்றி என்றும் உரியதாக!

மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

இங்ஙனம்
வடிவேல்சுவாமி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம்

திருவலிவலம் பண் — வியாழக்குறிஞ்சி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே (1)

குறிப்பு:- உமை பிடியதன் உருகொள—உமாதேவியார் பெண்யானையினது உருவத்தைக் கொள்ள.

வலிவலம் உறை இறை கரியது வடிகொடு — திருவலிவலம் என்னுந் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமான் ஆண்யானையினது உருவத்தைக் கொண்டு,

தனது அடி வழிபடும் அவர் இடர் கடி கணபதி வர அருளினன் — தம் திருப்பாதங்களை வழிபடும் அடியாரது துன்பங்களை நீக்குகின்றவராகிய விநாயகக் கடவுள் தோன்றும் வண்ணம் அருள் புரிந்தனன். கடிதல் — நீக்குதல்.

மிகுகொடைவடிவினர்—கொடுக்குந்தன்மை மிகுந்த வடிவத்தை உடையவர். பயில் — வாழ்கின்ற. (அங்கு வாழ்வோர் மிகுந்த ஈகையாளர்கள்).

வலிவலம் — திருவலிவலம் என்னுந் திருத்தலம். ''வலியான்'' என்னும் கரிக்குருவி பூசித்துப் பேறு பெற்றமையால் இப்பெயர்பெற்றது; இது மாடக்கோயில்; கோயிலைச்சுற்றி அகழி சூழ்ந்துள்ளது; இங்கு கணபதி சந்நிதி மிகச்சிறப்புள்ளது. இச்செய்யுள் கணபதி திருவவதார வரலாறும், அவரது பெருமையுங் கூறுகிறது.

பொது பண் — கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. (2)

குறிப்பு:- காதலாகி — பேரன்பு முதிர்ந்து. கசிந்து—நெக்குருகி, ஓதுவார் தமை — பாடும் அடியவர்களை நன்னெறி — முத்திநெறி; உய்ப்பது — அடையச் செய்வது. அது யாதெனில் வேதம் நான்கினும் மெய்ப்பொருளாய் விளங்கும் இறைவனது நாமமாகிய திருவைந்தெழுத்தே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால் (3)
நல்லார் நாம நமச்சி வாயவே.

குறிப்பு:- குணம் — நற்குணம். இயம்புவராயிடின் — (தினமும் திருவைந் தெழுத்தைச்) ஜெபஞ்செய்வாராயின்; தீங்கையும் நீங்குவர் — தீங்கினின்றும் விடுபடுவர். நல்லார் — சிவபெருமான்.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னும நமச்சி வாயவே. (4)

குறிப்பு:- ஏழ் நரகம் புக நாடினர் ஆயினும்—ஏழு நரகங்களை அடைதற் குரிய செயல்களைச் செய்தவராயிருந்தாலும், உரை செய்வாயினர் ஆயின்— திருவைந்தெழுத்தைத் தினமும் ஓதுகின்ற வாயினை உடையவர்களாயிருந்தால், வரதன் நாமம நமசிவாய —மேலானவராகிய இறைவனது திருவைந்தெழுத்து, விரவி உருத்திரர் (பால்) புகுவித்திடும்—பொருந்தி உருத்திரர்களிடம் அடையச் செய்யும். வரதனுமம்—வரதன் + நாமம். விரவி—கலந்து. ஏ-தேற்றம்.

திருவாலவாய்

பண் — காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே (5)

குறிப்பு:-வானவர்—தேவர். சுந்தரம்—அழகு. தந்திரம்—(மோட்சத்திற்கு) உபாயம். செந்துவர் வாய் உமை பங்கன்—சிவந்த பவளம் போன்ற திருவாயினையுடைய உமாதேவியாரைப் பாகத்திற் கொண்டவர். திரு வாலவாய்—மதுரையிலுள்ள ஆலயத்தின்பெயர். வெள்ளியம்பலம் என்பதுவும் இதுவே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. (6)

குறிப்பு:- வெந்துயர் — கொடிய துன்பம். போதம்—ஞானம். புன்மை— குற்றம் ஓதத்தகுவது — (பெருமையை எடுத்துக்கூறிப்) பாராட்டத்தக்கது. உண்மையில் — உண்மைநூல்களில். சீதப்புனல் — குளிர்ந்த நீர்.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. (7)

குறிப்பு :- முத்தி — மோட்சம். சத்தியம் — உண்மை. தக்கோர் — பெரியோர். பரவ இனியது — துதிக்க இன்பந்தருவது. சித்தி தருவது — விருப்பத்தை நிறைவேறச் செய்வது; வெற்றியைத தருவது.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. (8)

குறிப்பு : கவின் — அழகு. பேணி — போற்றி மாணம் — மாண்பு. மதி — அறிவு. சேணம் (சேண் + அம்) — அழகிய பரவெளி.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. (9)

குறிப்பு:- புண்ணியம் — புண்ணிய வடிவம் அந்தம் — முடிவு.

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்ததிரு வால வாயான் திருநீறே. (10)

குறிப்பு:- அருத்தம்—செல்வம். அவலம் அறுப்பது—துன்பத்தை நீக்குவது. வானம் அளிப்பது — மோட்சத்தைக் கொடுப்பது. திருத்தகு — செல்வம் பொருந்திய.

பொது — பண் — கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. (11)

குறிப்பு:- வானவர் — தேவர்கள்; ஆன் இனம் — பசுக்கூட்டம். புனல்— மழை. தீயதெல்லாம் ஆழ்க — தீய நெறிகளெல்லாம் அழிந்துபோக. முந்துயர் — நீண்டகாலமாக வந்து கொண்டிருக்குந் துன்பம். தீர்க — நீங்க.

திருப்பிரமபுரம் (சீகாழி) — பண் — நட்டபாடை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடி பூசிஎன் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. (12)

குறிப்பு:- தோடு — காதணி. விடை — தரும ரூபமாகிய இடபம். மதி — சந்திரன். உள்ளங்கவர் கள்வன் — மனத்தைத் தன் வயப்படுத்திக்கொண்டவர். அளவிறந்த அன்பினால் அவ்வாறு கூறினர். காடுடைய சுடலைப்பொடி — சர்வசங்கார மயானத்திற் பிரம விஷ்ணுக்கள் வெந்த நீறு. ஏடுடைய மலரான்—இதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருப்பவராகிய பிரமதேவர். முனை நாள் — முன்னொருகாலம். பீடு — பெருமை. பிரமபுரம் — சீகாழி. (பிரமதேவர் பூசித்தமையால் இப்பெயர் பெற்றது)

கோயில் (சிதம்பரம்) — பண் — குறிஞ்சி

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. (13)

குறிப்பு:- கற்றுங்கெரியோம்பி—கற்று+ஆங்கு+எரி+ஓம்பி. எரி—ஓமத்தீ. ஓம்பி — பாதுகாத்து. கலி—கேடு. செற்றார் — நீங்கியவர். மேய — பொருந்திய. முற்றுவெண்திங்கள் — வெண்மையான இளம்பிறை. பற்றுகின்றாரை — (முதல்வன் திருவடியைப்) பற்றுகின்றவரை. பாவம் பற்று — பாவங்கள் பற்றமாட்டா.

திருவாலவாய் (மதுரை) பண் — கௌசிகம்

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே. (14)

குறிப்பு:- கூடல்—மதுரை. சுற்றம்—உறவினர். நூற்கருத்து—நூல்களின் உட்கருத்து. அருத்தம் — செல்வம். முகமன் — உபசார வார்த்தை

பொது பண்—பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்
தென்உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழம்
வெள்ளி சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. (15)

குறிப்பு:- வேயுறுதோளி (வேய்+உறு+தோளி) — மூங்கிலைப் போலத் தோள்களையுடைய உமாதேவியார். பங்கன் — பாகத்தில் கொண்டவர். விடம் — விஷம் (நஞ்சு); மாசறு (மாசு+அறு) — குற்றம் இல்லாத. பாம்பு இரண்டு — இராகு கேதுக்கள். ஆசறு (ஆசு+அறு)—குற்றம் இல்லாத. நல்ல நல்ல — மிகவும் நல்லன. சிவபிரான் அடியார்களது உள்ளத்தில் இருத்தலால் ஞாயிறு முதல் கேது ஈறுகிய ஒன்பது கிரகங்களும் அடியவர் களுக்குத் தீங்கு செய்யா வென்பது கருத்து.

திருக்கழுமலம் (சீகாழி) பண் — கொல்லி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. (16)

குறிப்பு :- மண்ணில் — பூவுலகில். வைகலும் — தினந்தோறும். நல்லஃது — நல்லகாட்சி. உறும் — பொருந்தும். கழுமலம் — திருக்கழுமல மென்னும் தலம். பெருந்தகை — பெருந்தன்மை உடையவர் (இறைவன்)

சீகாழி பண் — காந்தார பஞ்சமம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. (17)

குறிப்பு :- துஞ்சல்—உறக்கம் (நித்திரை செய்தல்). நாடொறும் (நாள்+தொறும்) — தினமும். நெஞ்சகம் நைந்து — மனங் கசிந்துருகி. வஞ்சகம் அற்று அடிவாழ்த்த —(மார்க்கண்டேயர்) உண்மையான அன்போடு சிவபெருமானைத்துதிக்க. கூற்று — யமன். அஞ்செழுத்து — திருவைந்தெழுத்து.

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. (18)

குறிப்பு:- தொடர்தல் — வந்து சேர்தல். வெம்மை — கொடுமை. இம்மை— இப்பிறப்பு. அம்மை — மறுபிறப்பு.

திருக்கேதீச்சரம் பண் — நட்டராகம்

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்

தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே. (19)

குறிப்பு:- பொடி—விபூதி. அதள்—தோல். வடிகொள் மூவிலை வேலினர்—கூர்மை பொருந்திய முத்தலைச் சூலத்தை உடையவர். மறிகடல் — திரைபொருதுங்கடல். ஆதரித்து — விரும்பி. பரிந்தசிந்தையர்—அன்புகொண்ட மனத்தை உடையவர். அடிபேண—பாதங்களை வணங்க. மொய்த்து—திரண்டு

திருவலிவலம் பண் — பழந்தக்கராகம்

ஒல்லையாறி உள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலமே யவனே. (20)

குறிப்பு.- ஒல்லை — விரைவு. வெய்ய—கொடிய. வெய்ய சொல்லையாறி — கொடிய சொற்களைக்கூறும் கோபத்தைத்தணித்து. காமவினையகற்றி — ஆசைகளை மேலோங்கச்செய்யுஞ் செயல்களை நீக்கி. நவின்று — சொல்லி. ஆறு — வழி. வலிவலம் ஏயவனே வந்து நல்காய் என்று கூட்டுக.

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்ருென் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலமே யவனே. (21)

குறிப்பு:- ஆதரிக்கின்றது உள்ளம் — உள்ளம் ஆதரிக்கின்றது. ஆயம் — வருத்தம். ஆயமாய காயம் — துன்பத்துக்குரிய உடம்பு. ஐவர் — ஐம்பொறிகள் (ஐந்து ஞனேந்திரியங்கள்). ஒன்றல்—பொருந்துதல்; ஒட்டார் — செய்யார், (வலிவலம்) ஏயவனே — பொருந்தியவனே.

திருச்சாய்க்காடு பண் — சீகாமரம்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. (22)

குறிப்பு:- சாய்க்காடு — திருச்சாய்க்காடு (சாயாவனம்) என்னும் திருத்தலம். எம்பெருமாற்கு நாளும் தலை பூ சுமப்ப, நாமம் செவி கேட்ப, நா நவின்று ஏத்த நல்வினைபெறலாம் எனக்கூட்டுக.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம்

பொது பண்-காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. (1)

குறிப்பு:- சொற்றுணை வேதியன்—ஆன்மாக்களுக்கு உற்ற துணை யென்று கூறப்படும் வேத முதல்வன். பொற்றுணைத் திருந்தடி — பொலிவுள்ள திருத்தமாகிய இணையடிகள். கற்றுணைப் பூட்டி—கல்லோடு சேர்த்துக் கட்டி. நற்றுணை—நல்ல துணை.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. (2)

குறிப்பு – அருங்கலம் — அரிய அணிகலம். பொங்கு — பொலிவுள்ள. ஆவினுக்கு — பசுவுக்கு. அரன்அஞ்சாடுதல் — சிவபிரான் பால், தயிர், நெய், கோசலம், கோமயமாகிய ஐந்து கௌவியங்களையும் அபிஷேகமாகக் கொண்டருளுதல். கோவினுக்கு — அரசனுக்கு. கோட்டமில்லது — கோணுதல் இல்லாமை; செங்கோல்முறைமை.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. (3)

குறிப்பு:- சங்கரன் சலமிலன்—சங்கரர் (எவரிடத்தும்) பட்சபாதமில்லாதவர். சார்தல்—அடைதல். சார்ந்தவர்க்கு—தன்னைச்சார்ந்த அடியவர்க்கு. நலம் — நன்மை. நல்குவான் நலன் — (அடியவர்க்கு) நன்மை புரிவார். குலமிலராகிலும்—குலநல மற்றவர்களாயினும்.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. (4)

குறிப்பு - இல்லக விளக்கு—வீட்டினுள் இருக்கும் விளக்கு. சொல்லக விளக்கு—சொல்லின்கண்உள்ள விளக்கு. பல் அக விளக்கு—பலவிடத்துள்ள விளக்கு (சூரியன்). நல் அக விளக்கு—நல்ல மனத்தின்கண் உள்ள விளக்கு.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. (5)

குறிப்பு:- முன்னெறி — (எல்லா நெறிகளுக்கும்) முற்பட்டநெறி. முக்கணன் தன்நெறி—மூன்று கண்களையுடைய சிவபிரானது மார்க்கம். சரண்—புகலிடம். திண்ணம்—நிச்சயம். அந்நெறி—அம்மார்க்கம். அடைந்தவர்க்கு—(சிவஞானத்தை) அடைந்த அடியார்களுக்கு. நல்நெறி—நல்லவழி.

திருக்கடம்பூர் திருக்குறுந்தொகை

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. (6)

குறிப்பு:- கடம்பன்—கடம்ப மாலை அணிபவன்; முருகக் கடவுள். பெற்றவள்—பெற்றவராகிய உமாதேவியார். பங்கினன்—பாகத்திலுடையவர். கடன்—கடமை. பணி—தொண்டு. தாங்குதல்— (ஆதரித்துப்) பாதுகாத்தல்.

கோயில் (சிதம்பரம்) திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. (7)

குறிப்பு:- பாலிக்கும் — கொடுக்கும்; அருளும். பொன் — திரவியம். என் அன்பு ஆலிக்கும் ஆறு — எனது அன்பு பரக்கும் வழி (மேலோங்கும் வகை). இன்னம் — இனியும்.

கோயில் திருக்குறுந்தொகை

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. (8)

குறிப்பு:- அல்லல்—துன்பம். அருவினை — கொடியபாவம். தொல்லை — பழமை. தொந்தம்—சேர்க்கை; கூட்டம்.

திருமறைக்காடு திருக்குறுந்தொகை

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி ணுர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. (9)

குறிப்பு:- பண்ணின் நேர்மொழியாள்—இசையைப்போல இனிமையான சொற்களையுடைய உமாதேவியார். பங்கர் — பக்கத்திலேயுள்ளவர். மண்ணினுர்—உலகத்திலே உள்ளவர்கள். மறைக்காடு—வேதாரணியம். திண்ணம் — உறுதி.

பொது தனித்திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (10)

குறிப்பு:- இளவேனில் — இளவேனிற் காலம் (சித்திரை, வைகாசி). வண்டறை (வண்டு+அறை) — வண்டு ஒலிக்கின்ற. இணையடி — இரண்டு திருப்பாதங்கள்.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. (11)

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. (12)

குறிப்பு:- மடம்—இளமை; அழகு. சூழ்த்த மாமலர்—ஆராய்ந்தெடுத்த அழகிய மலர். வீழ்த்தவா—வீணாக்கிவிட்டேன்.

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. (13)

குறிப்பு:- படுதல்—தோன்றுதல். பாலில் படுநெய்—பாலில் தோன்றும் நெய். உறவு—அன்பு. கோல்—மத்து. உணர்வு—அறிவு. மறைந்து நின்றுள்ள மாமணிச் சோதியான், உறுதியுடன் அன்புகொண்டு தொடர்ந்து சாதனைபுரியின் வெளிப்பட்டுத்தோன்றுவான். ஞானசற்குருவிடம் அன்புகொண்டு உணர்வை அறிந்து அவ்வுணர்வில் சங்கற்பமற நிற்கில் பேரின்பம் உதயமாகும்.

கோயில் — திருவிருத்தம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு
வதேயிந்த மாநிலத்தே. (14)

குறிப்பு:- குனித்த — வளைந்த; குமிண்சிரிப்பு — குமிழ்த்த சிரிப்பு; புன்முறுவல். பனித்த சடை—நீர்பொருந்திய சடை. பொன்—அழகு. எடுத்த பொற்பாதம்—தூக்கிய அழகிய பாதம். மனித்தப் பிறவி—மனிதப் பிறவி.

திருவாரூர் திருத்தாண்டகம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
 நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
 பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
 சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
 ஆரூரா என்றென்றே அலறா நில்லே. (15)

குறிப்பு: இச்செய்யுள் சிவநெறியின் முதலாம் படியாகிய சரியையினை விளக்குவது. நித்தலும் — ஒவ்வொரு நாளும். புலர்வதன்முன் — சூரியன் உதயமாகுமுன் (வைகறைப் பொழுதில்). அலகிடல்—கூட்டுதல். ஏத்தி—வழிபட்டு. ஆர—மிகுதியாக. புனல்—கங்கை. ஆதி—முதல்வன். அலறா நில்லே—அழைத்துக்கொண்டிரு.

தனித் திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
 அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
 ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
 துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
 இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. (16)

குறிப்பு:- ஐயன்—ஆசான். ஒண்பொருள்—சிறந்த செல்வம். துய்ப்பன—அனுபவிக்கப்படும் பொருட்கள். உய்ப்பன — கடைத்தேறச் செய்யும் பொருட்கள். ஏறு—இடபம்.

தனித் திருத்தாண்டகம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. (17)

குறிப்பு:- திறம் — தன்மை. செப்பாராகில் — செபிக்காராயின். தீவண்ணர் — நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியை உடையவர்; சூழாராகில்—வலம் வராதவராயின். அளியற்றார் — அன்பில்லாதவர். நலிய—வருந்த. பெயர்த்தும் — திரும்பவும்.

திருஒற்றியூர் திருநேரிசை

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணா
துனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூ ருடைய கோவே. (18)

குறிப்பு:- மதி—புத்தி. சினம்—கோபம். செறி—பரந்த. மதன் எனும்—அகங்காரம் என்னும். மறியும்போது—கவிழும்போது. உனை உனும் உணர்வை நல்காய்—உன்னை நினைக்கும் அறிவைக் கொடுப்பாய். கோ—தலைவர்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி யென்மனத்தே
வழுவாதி ருக்கவரந் தரவேண்டும்
இவ்வை யகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே. (19)

குறிப்பு: வழுவாது—நீங்காது. வையகத்தே—உலகத்திலே. செழுநீர்—வளப்பம் மிக்க நீர். புனல் — ஆறு. தீவண்ணன் — நெருப்புப் போன்ற செந்நிறமுடையவர்.

மறுமாற்றத் திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. (20)

குறிப்பு:- குடி — அடிமை. இடர்ப்படோம் — துன்பப்படமாட்டோம். நடலை — பொய்;வஞ்சகம்(பொய் வாழ்வு). ஏமாப்போம்—துணிந்திருப்போம். பிணி—பந்தம், நோய். நற்சங்கம்—நல்லசங்கு. வெண்குழை — வெண்மையான காதணி. கோமாற்கே — தலைவருக்கே. மீளா—மாறுபடாத. ஆளாய் —அடிமையாய். கொய்ம்மலர்ச்சேவடி — பூக்கள் நிறைந்துள்ள சிவந்த திருப்பாதங்கள். இணை—இரண்டு. குறுகினோம் —(கதியாக) அடைந்துவிட்டோம்.

திருமறைக்காடு திருத்தாண்டகம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் றானே (21)

குறிப்பு:- தூண்டு சுடர்—திரியைத் தூண்ட எரிகின்ற சுடர் (பிரகாசம் நிறைந்ததாயிருக்கும்). சூளாமணி—சூடாமணி; முடியிலே வைக்கப்படும் இரத்தினம். கருதுவார்க்கு ஆற்ற எளியான்—தம்மை அன்புடன் சிந்திப்பவர்க்கு மிகவும் எளியவன். விரதமெல்லாம் மாண்ட — எல்லாவித தவத்திலும் அன்பிலும் மேம்பட்ட.

திருவாலவாய் (மதுரை) திருத்தாண்டகம்

வாயானை மனத்தானை மனத்துள்நின்ற கருத்தானைக்
கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்துநின்றென்
தாயானைத் தவமாய தன்மையானைத் தலையாய
தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே (22)

குறிப்பு:- வாயானை — துதிக்கும் வாயில் இருப்பவனை; மனத்தானை — நினைக்கும் மனத்தில் இருப்பவனை; மனத்துள் நின்ற கருத்தானை—அத்தகைய மனத்தினது விருப்பத்தை அறிபவனை; கருத்து அறிந்து முடிப்பான் தன்னை— அந்த விருப்பத்தை அறிந்து அதை நிறைவேற்றிவைப்பவனை. தொடர்ந்து நின்று என் தாயானை—என்னை விடாது தொடர்ந்து நின்று காக்கும் எனது தாய்போல் இருப்பவனை. சேய்மை — தூரம்.

திருவாரூர் *பண்—காந்தாரம்*

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடை யானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூ ரமர்ந்த அம்மானே (23)

குறிப்பு:- திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமான் தாமரை போன்ற அனேக திருவடிகளையும், பொன்வரை போன்ற அனேக தோள்களையும் சூரியனைப் போன்ற அனேக முகங்களையும், அனேக திருநாமங்களையும் உடையவன். அஃதாவது சிவபிரானது சமட்டி ரூபத்தைக் கூறியதாம் (எல்லாவற்றையும் தனக்கு அங்கமாகக்கொண்டு நிற்கும் நிலை சமட்டி நிலை யெனப்படும்). ஆயிரம் இங்கே அளவற்றதைக் குறிக்கிறது. வரை — மலை. பொன்வரை — மேருமலை.

திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோயில்) *திருத்தாண்டகம்*

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.
(24)

குறிப்பு:– பேர் ஆயிரம் — அனேக திருநாமங்கள். பரவுதல் — புகழ்ந்து கூறுதல். ஏத்துதல்—துதித்தல். பெம்மான்—பெருமான்; இறைவன். பிரிவிலா— நீங்காத. வாராத செல்வம் — பெறுதற்கரிய செல்வம்; அருட்செல்வம்; வீடுபேறு. தந்திரம் — உபாயம் (அஃதாவது முத்திநிலையை அடைதற்குரிய உபாயம்). தீராதநோய் — பிறப்பும் இறப்பும் ஆகிய நோய். திண்சிலை — மேருமலையாகிய வில். போரான்—போரில் வல்லவன். புள்ளிருக்கு வேளூர்— சோழநாட்டுச் சிவஸ்தலங்களில் ஒன்று. சடாயு, சம்பாதி என்னும் பறவைகள் வழிபட்டு முத்தியடைந்த சிறப்பினால் இப்பெயர் பெற்றது. இத்தலத்திற்கு இப்போது வைத்தீசுவரன் கோயில் எனப்பெயர். போற்றாது — துதியாது. ஆற்ற—மிகுதியாய்; முழுதும். ஆற்றநாள்—பலநாள்.

கோயில் பெரிய திருத்தாண்டகம்

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (25)

குறிப்பு:- அரியான்—(பேரன்பில்லாதவர்களால்) அடைதற்கரியவன். அருமறையின் அகத்தான் — அரிய வேதத்தின் உட்பொருளாய் விளங்குபவன். அணு—சீவன், உயிர். அணுவையார்க்கும் தெரியாத தத்துவன்—சீவபோதங்கெடாதவர்களால் அறிய முடியாத உண்மைப் பொருளாய் இருப்பவன். தேவர்கள்தம்கோன் — தேவர்கள் தலைவனாகிய இந்திரன். கரியான்—கரிய திருமேனியுடைய திருமால், நான்முகன்—நான்கு முகங்களையுடைய பிரமன். கனைகடல் — ஒலிக்குங்கடல். குலவரை — சிறந்த மலைகள். பெரியான் — பெருமையுடையவன். புலியூரான்—சிதம்பரத்தில் வீற்றிருப்பவன். பேசுதல்—புகழ்தல்; துதித்தல்.

திருவாரூர் திருத்தாண்டகம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. (26)

குறிப்பு:- முன்னம்—முன்பு. அவன்—இறைவன். நாமம்—பெயர். மூர்த்தி அவன்—மூர்த்தியாகிய அவன். இருக்கும் வண்ணம் — இருக்கின்ற தன்மை. பின்னை—பின்பு. அவனுக்கு—அவனிடத்தில். பிச்சி—பற்றுள்ளவள். அத்தன்—தன் தந்தை. நீத்தாள் — மறந்தாள். அகலிடம் — பூமி. ஆசாரம் — முறைமை

அகன்ருள்—கைவிட்டாள். தன்நாமம்—தன்செயல்; சிவபோதம். கெட்டாள்—இல்லாதவள் ஆனுள். தலைப்பட்டாள் — அடைந்தாள். நங்கை — பெண். தலைவன்—சிவன். தாள்—திருவடி. நங்கை தலைவன்தாள் தலைப்பட்டாள் என்க. இச்செய்யுள் அகத்துறைப் பாட்டு

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அருளிய தேவாரம்.

திருவெண்ணெய்நல்லூர் பண்-இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானே யருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே (1)

குறிப்பு:- பித்தா — (அடியார்களுக்கு அருள்புரியும் பெருங் கருணையால்) பித்தர்போன்றவனே. அருளாளா — அருளைச் செல்வமாக உடையவனே. எத்தால்மறவாதே — எந்தவகையிலும் மறவாமல். மனத்து உன்னை நினைக்கின்றேன் — மனத்தின்கண் தேவரீரை (இடைவிடாது) தியானிக்கிறேன். (அங்ஙனம் தியானிப்பதால்) மனத்து உன்னை வைத்தாய்— என்மனத்துள் எழுந்தருளி இருக்கின்ருய். பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர்—பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூரின்கண். அருள்துறையுள் அத்தா — "திருவருட்டுறை" என்னும் ஆலயத்தில் எழுந்தருளிய என் அப்பனே! உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனலாமே — நான் உனக்கு என்றும் அடிமையென்று தெளிந்த பிறகும் இனி அடிமையல்லேன் என்று கூறுதல் கூடுமோ. (இல்லையென்றவாறு.) ஆள்—அடிமை.

திருமழபாடி பண் நட்டராகம்

பொன்னுர் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னுர் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. (2)

குறிப்பு:- பொன் ஆர் மேனியன் — பொன்போன்ற திருமேனியை உடையவர். அரைக்கு அசைத்து—அரையிலே கட்டி. மின் ஆர்—மின்னலைப் போன்ற. மன்னே — தலைவரே. மழபாடியுள் மாணிக்கமே — திருமழபாடி என்னுந் தலத்தில் மாணிக்கம்போல் விளங்குபவரே. அன்னே — தாயைப் போன்றவரே:

திருக்கூடலையாற்றூர் பண்—புறநீர்மை

வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசய மறியேனே. (3)

குறிப்பு - வடிவுடை — அழகுபொருந்திய. மதகரிஉரி — மதயானையின் தோல். பொடி — விபூதி. புரிகுழல் — சுருண்ட கூந்தல். கொடியணி நெடுமாடம்—கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பெரிய மாளிகை.

திருப்பாண்டிக்கொடுமுடி பண்-பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லு நாநமச்சி வாயவே. (4)

குறிப்பு:- எனக்கு மற்றுப் பற்று இன்றி — எனக்கு வேறு பற்று இல்லாமல். பாவித்தேன் — தியானஞ்செய்தேன். பெற்றலும் பிறந்தேன் — (அங்ஙனம் திருவடிகளைத் தியானஞ்செய்யப்) பெற்றபோதே பக்திசெய்யப் பிறந்தவனானேன். இனிப்பிறவாத தன்மை வந்து எய்தினேன்—(பக்தியின்மேலீட்டினால்) இனிப் பிறக்காத தன்மையும் கைகூடப்பெற்றேன். பாண்டிக் கொடு முடி நற்றவா — திருப்பாண்டிக்கொடு முடி என்னும் திருத்தலத்தில் நல்ல தவநிலையில் எழுந்தருளியிருப்பவரே. நமச்சிவாயவே நா சொல்லும்— திருவைந்தெழுத்தை எனது நாக்குச் சொல்லிக்கொண்டேயிருக்கும்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனூர்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (5)

குறிப்பு:- திருத்தொண்டத்தொகை — திருத்தொண்டர் கூட்டத்தின் பெருமையைக் கூறிய பதிகம். அடியார்க்கும் அடியேன் — அடியவர்களுக்கும் அடியேன். இல்லையே என்னாத — எதையும் இல்லையென்று சொல்லாத. வெல்லுமா மிகவல்ல—வெற்றி பெறும்வகையில் மிக்க வலிமையுள்ள. பொழில் — சோலை. அம் தார்—அழகிய மாலை. ஆரூரன்—ஆரூரனாகிய யான். அம்மான்—சிவபெருமான். ஆள்—அடிமை.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (6)

குறிப்பு:- பத்தராய்ப்பணிவார் — பக்தியுடன் வழிபடுபவர். பரமன் — சிவன். முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன் — காலை, நண்பகல் மாலை என்னும் முக்காலங்களிலும் பெருமானது திருமேனியைத் தொட்டு அபிஷேகம் அருச்சனை முதலியன செய்யும் பேறுடையராகிய ஆதி சைவர்க்கும் நான் அடியவன்.

திருப்புகலூர் பண்-கொல்லி

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. (7)

குறிப்பு:- இச்சை—விருப்பம். பேசுதல்—சொல்லுதல். சார்வினும்—அடுத்திருப்பினும் தருகிலா—தரமாட்டாத. பொய்ம்மையாளர்—பொய்ம்மையுடைய (அற்ப) மனிதர். எந்தை புகலூர் பாடுமின்—என் அப்பன் (எழுந்தருளியிருக்கும்) திருப்புகலூர் என்னும் தலத்தைப்போற்றிப் பாடுங்கள். சோறுங் கூறையும் தரும்—உணவும் உடையும் தருவார். ஏத்தலாம்—(இறைவனைத்) துதித்தலும் ஆகும். இடர் கெடலுமாம்—துன்பங்களைப்போக்கிக்கொள்ளலுமாகும். அம்மை—மறுமை.

திருக்கேதீச்சரம் பண்-நட்டபாடை

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே. (8)

குறிப்பு:- மூவர்—பிரமா, விஷ்ணு, உருத்திரர். இருவர்—சக்தி, சிவம். மாவின் கனி தூங்கும் பொழில்—மாம்பழங்கள் தொங்குகின்ற சோலை. பாவம்வினை அறுப்பார்—தீவினையினால் வரும் பாவத்தை நீக்க விரும்புவோர். பயில்தல்—வழிபடுதல்.

திருப்புன்கூர் பண்-தக்கேசி

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவி னுக்கரையன் நாளைப்போ வானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே. (9)

குறிப்பு:- ஞானசம்பந்தன் — திருஞானசம்பந்தர். நாவினுக்கரையன் — திருநாவுக்கரசர். நாளைப்போவான் — திருநாளைப்போவார் (நந்தனார்). கற்றசூதன் — சூதாட்டங்கற்று வல்ல மூர்க்கநாயனார். நற்சாக்கியன் — நல்ல சாக்கிய நாயனார். சிலந்தி — சிலந்திப் பூச்சி (கோச் செங்கணான்). கண்ணப்பன் — கண்ணப்ப நாயனார். கணம்புல்லன்—கணம்புல்ல நாயனார். கமலங்கள் — தாமரைகள். பொய்கை—நீர்நிலை; தடாகம். கழல்—திருவடி.

திருநொடித்தான்மலை (திருக்கயிலாயம்) பண்-பஞ்சமம்

மந்திர மொன்றறியேன்
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால்
துரிசேசெயுந் தொண்டனேனை
அந்தர மால்விசும்பில்
அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே
நொடித்தான்மலை யுத்தமனே. (10)

குறிப்பு:- சுந்தர வேடங்கள் — அழகிய கோலங்கள் (பூண்டு). துரிசே செய்யும்—குற்றங்களே செய்யும். அந்தரமால் விசும்பில் — ஆகாயமாகிய பெரிய வெளியில் (செல்லததக்க). அழகு ஆனை அருள் புரிந்ததும் தரமோ நெஞ்சமே—அழகிய (வெள்ளை) யானையை (நான் ஏறிச்செல்வதற்கு) அருள் செய்ததும் தகுதியுடையதாகுமோ மனமே! (என்றுற் சொல்லுந்தரமன்று!) நொடித்தான்மலை—கயிலாயம்.

மாணிக்கவாசக சுவாமிகள்
அருளிய திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே (1)

குறிப்பு:- எம் உடையானே—எம்மை நினது அடியவனாகக்கொண்டவனே. வீடகம் (வீடு+அகம்)—முத்தியாகிய இருப்பிடம். புகுந்திடுவான்—புகுவதற்காக. ஆடகம்—பொன். என் ஊடகத்து (என் அகத்து ஊடு)—எனது உள்ளத்தின்கண். அன்பு எனக்குத் தந்தருள்—பக்தியைஅடியேனுக்குத் தந்தருளுக.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே (2)

குறிப்பு:- இறப்பதனுக்கு என் கடவேன்—இறத்தலுக்கு யான் அஞ்சக் கடவேனல்லேன். வானேயும் பெறில்வேண்டேன்—சுவர்க்கலோகப்பேற்றைப் பெற்றாலும் அதைப்பொருளாக விரும்பேன். எம்மானே—எமது தலைவனே. உன் அருள்பெறுநாள்—நினது அருளைப்பெறுங்காலம். என்று என்று—எப்போ என. வருந்துவன்—வருந்துகின்றேன்.

வருந்துவனின் மலர்ப்பாதம் அவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநான் ஆமாறே. (3)

குறிப்பு:- வருந்துவனின்—வருந்துவன்+நின். நின் மலர்ப்பாதம் அவை காண்பான் வருந்துவன் எனக்கூட்டுக. நலமலர்—நல்ல பூமாலை. ஏத்தேன்—துதியேன். தழும்பு ஏற—தடிப்பு உண்டாக. சிலை—வில். குனித்தல்—வளைத்தல். புரிதல்—அருளல். வருந்துவன் — வருந்துவேன். ந+தமியேன்—நத்தமியேன் (ந மிகுதி குறிக்கும்) தமியேன்—எதுவும் இல்லாத அடியேன். நான் ஆமாறு (ஆம்+ஆறு) — நான் உய்யுமாறு.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (4)

குறிப்பு:- குழைதல்—இளகுதல்; நெகிழ்தல். அகம் குழையேன் — உள்ளம் நெகிழப்பெறேன். புனைதல் — கட்டுதல். புத்தேளிர் — தேவர். கோமான்—தலைவன். புத்தேளிர்கோமான்—தேவர்களது தலைவன். (இங்கு சிவபிரானைக் குறிக்கிறது) தூகேன்—அலகிடேன். சதுர்—உபாயம். சார்வான்—பற்றுபவன்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. (5)

குறிப்பு:- வான்—ஆகாயம். வளி—காற்று. ஊன்—உடல். கோன்—அரசன். யான் எனது என்று—யான் எனவும் எனதெனவும் எண்ணச்செய்து. அவர்அவரை — பலரை. கூத்தாட்டுவான் — இயங்கும்படி செய்பவன். நின்றாயை—நின்ற நின்னை.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்தமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. (6)

குறிப்பு:- தாம்வாழ்வான் — தாங்கள் (நீடூழி குறைவின்றி) வாழ்தற் பொருட்டே. நின்பால்—நின்னிடம். தாழ்த்துதல்—பணிதல். உயர்ந்து—மேன்மையுற்று. தொழ—வணங்க. சூழ்த்து—சுற்றுகின்ற. மதுகரம்—வண்டு. முரலும் — ஒலிக்கும். தார் — மாலை. தாரோயை—மலர்மாலையை அணிந்த நின்னை. பாழ்த்த பிறப்பு—பயனற்ற பிறவி. தாம் வாழ்வதற்காக வானவர் நின்னை வாழ்த்துவர். தமது உயர்வுக்காக நின்னைத்தொழுவர். பிறப்பு அறுத்தற்காக யான் நின்னைத்துதிக்கின்றேன்.

பரவுவார் இமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பரோ அரியானே. (7)

குறிப்பு:- அரியானே—அறிதற்கு அரியவனே. இமையோர்—தேவர்கள். குரவு—குரவமலரையும், மணத்தையும் குறிக்கும். வார்குழல்—நீண்ட கூந்தல். மடவாள்—உமாதேவியார். விரவுவார் — பொருந்துவார். அரவு ஆர்—ஒலி நிறைந்த. கழல் — பாதம். இணை — இரண்டு. இமையோர் பரவுவார்; நால் வேதம் பாடுவன; அடியார்கள் பகுதிபகுதியாக நின்னை வழிபடக் கூடுகின்றார்கள். ஆனால் நினது திருவருளின்றித் திருவடியைக் காண்பாரோ?

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேனான் சாவேனே. (8)

குறிப்பு:- அம்பரவா—பரவெளி மயமாயிருப்பவனே. அம்பலம்—சிதம்பரம் (ஞானகாசம்). விரை—நறுமணம். விரை ஆர்ந்த மலர்—நறுமணம் நிறைந்த மலர்கள். நயத்தல்—விரும்பல். நயந்து உருகேன் — உள்ளம் விரும்பி உருக மாட்டேன். ஆமாறென் (ஆம்+ஆறு+என்)—உய்யும் வழியாது? வழிபடாது உயிர் வாழ்தலினும் இறத்தல் நலமென்பதை வலியுறுத்தவேண்டி சாவேன் என்பதை இருதரம் கூறினர்.

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலா நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. (9)

குறிப்பு:- வேனில்வேள்—இளவேனிலுக்குரிய மன்மதன். மலர்க்கணை—பூவகைகளாகிய அம்பு. பானல்—நீலோற்பலம்; குவளை. கரிய பானல் ஆர் கண்ணியர் — கரு நிறமுடைய குவளைபோன்ற கண்களை உடைய மகளிர். ஊனெலாம் (ஊன்+எலாம்)—உடம்பு முழுவதும். வான் உளான் — ஞானகாயத்தில் இருக்கின்றான். மாளா—இறவாது. நெஞ்சேநீ மாளா வாழ்கின்றாய் எனக்கூட்டுக.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. (10)

குறிப்பு:- வாழாத நெஞ்சமே! — பேரின்ப வாழ்க்கையைப் பெறக் கருதாத மனமே! ஏத்தாதே—துதியாதே. சூழ்தல் — ஆலோசனை பண்ணல். ஏத்தாதே கேடு உனக்குச்சூழ்கின்றாய்—வழிபடாமல் உனக்குக்கெடுதியையே உண்டாக்கிக்கொள்கின்றாய். அவலம்—துன்பம்.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந்
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
 யாருன்னை அறியகிற் பாரே. (11)

குறிப்பு:- இருள்கடிந்து—அறியாமையாகிய இருளை அகற்றி. உள்ளத்து எழுகின்ற ஞாயிறேபோன்று—மனத்தின் கண்ணே உதிக்கின்ற சூரியனைப் போல. பூதசூரியன் உதித்தவிடத்துப் பூதவிருள் எங்ஙனம் நீங்குகின்றதோ அங்ஙனம் ஞானசூரியன் (சுயம்பிரகாசம்) உள்ளத்தில் உதித்த விடத்து அஞ்ஞானவிருள் நீங்குகின்றது. நினைப்பற நினைந்தேன் — பிரபஞ்ச நினைவு நீங்கும்பொருட்டு சுட்டிப்பாராது பார்த்திருந்தேன். திருப் பெருந்துறை—(இதன் அந்தரங்கக்கருத்து) சிதாகாசம். நம்மால் சுட்டியறியப்படும் பொருள் எதுவும் நீயல்ல ஆனால் நின்னை விட்டு நீங்கி எதுவும் இல்லை. எவற்றிற்கும் ஆதாரமாயிருப்பது நீயே. யார் உன்னை அறியகிற்பாரே?—யார் நின்னைத் திருவருளின் சகாயமின்றி அறியவல்லவர்?

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறும்முன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊன நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய இச்சையே. (12)

குறிப்பு:- வானநாடரும்—தேவர்களும். மறையின் ஈறும்—வேதாந்தமும். என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா — அடியேனை எளிதாகவந்து ஆட்கொண்டவாறும். வையகத்து உடைய இச்சை நைய ஞான நாடகம் ஆடுவித்தவா—உலகில் உள்ள பற்றுச் சிதைந்தொழிய ஞானக் கூத்தியற்று வித்தவாறும ஆச்சரியம். ஆடுவித்தவா என்று அதிசயக்குறிப்பாகக் கூறினர்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே. (13)

குறிப்பு:- மெய் — உடல். அரும்பி — மயிர்க்கூச்செறிந்து. விதிர்த்து — நடுங்கி. விரை ஆர் கழல்—வாசனை பொருந்திய திருவடி. உள்ளம் வெதும்பி— மனம் வாடி. தவிர்ந்து—நீங்கி. கை—ஒழுக்கம். சயசய போற்றி என்னும் கைதான் நெகிழவிடேன்—வெற்றி, வெற்றி, வணக்கம், என்று தேவரீரைப் போற்றும் ஒழுக்கமுறையை அடியேன் நழுவவிடாது மேற்கொண்டு நிற்பேன். உடையாய்— எல்லாவற்றையும் உடையவனே. கண்டுகொள் —அறிந்து ஆண்டுகொள்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானல் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

குறிப்பு:- உடையாள்—எம்மை அடிமையாக உடைய சிவசக்தி (இறைவி). சுத்தசிவத்தினின்றும் பராசத்தி தோன்றுதலின் "உடையாள் உன்தன் நடு விருக்கும்" என்றார். உடையாள் நடுவுள் நீயிருத்தி—(சுத்தசிவம் எங்கும் நிறைந்து பூரணமாயிருத்தலின்) நீயும் சிவசத்தியினிடத்தே கலந்திருக்கின்றாய். சிவமுஞ்சக்தியும் ஆன்மாவில் உள்ளீடாய் இருப்பதனால் "அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல்" என்றார். பொன்னம்பலம் — சிதம்பரம். முன்னின்று—உறுதுணையாய் நின்று. முன்னின்று அருளைப்புரியாய் எனச் சேர்க்க. சிவனடியார் நடுவுளிருப்பதால் இறையன்பு நிலைத்து பிரபஞ்சப் பற்றொழிந்து விரைவில் வீடெய்துதல் கூடுமாதலின் "என்கருத்து முடியும் வண்ணம்" என்றார்.

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே யென்றுன் அருளேக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பாற்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ. (15)

குறிப்பு:- உன் அருள்நோக்கி—நினது திருவருளை எதிர்பார்த்து. இரை தேர்கொக்கு ஒத்து — தன்விருப்பத்திற்கேற்ற உணவாகிய மீன்வருமளவும் கொக்கு அசையாது காத்திருத்தல்போல. ஏசறுதல்—துக்கித்தல்; கவலைப்படல். வேசறுதல்—வாடுதல், இளைத்தல். களி—மகிழ்ச்சி; பிரை—(பாலிற்கு இடும்) உறைமோர். பாலில் நெய்யானது நன்கு விளங்காது. தயிரைக்கடைந்த விடத்து நெய்யானது நன்கு விளங்கும். உறைமோர் இட்ட பாலில் நெய்யானது விளங் கியும் விளங்காது தென்படும். பேசாதிருந்தால்—உரையாடாதிருந்தால்.

மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேனினி
மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகளி
ரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. (16)

குறிப்பு:- மலங்குதல்—அசைதல்; கலங்கல். மலம்— ஆணவம், கன்மம், மாயை. விலங்கினேன் — விட்டு நீங்கினேன். (விலகல் — நீங்குதல்; விலங்கினேன் என்பது விலகினேன் என்பதன் விரித்தல் விகாரம்.) கழுக்குன்றம்— திருக்கழுக்குன்றம் என்னும் மஹாக்ஷேத்திரம். வைப்பிடம் — வைத்தற்குரிய இடம். இன்றி — அறியாது.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை யன்பே. (17)

குறிப்பு.- புலன் ஐந்து—சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் ஆகிய ஐந்து விடயங்கள். இவற்றைத் தன்மாத்திரை எனவும் சூக்கும பூதங்களெனவுங் கூறுவர். உள்ளவா காணவந்தருளாய் — உண்மையாக நீயிருக்கும் விதத்தை நான் காணும்படி வந்து அருள்செய்வாயாக. தேறல் — தேன். தேறலின் தெளிவே—தேனின் தெளிவுபோன்ற தூய இனிமையானவனே. ஈறு—முடிவு. பதங்கள்—பதவிகள். பதவிகள் யாவும் தத்துவங்களுள் அமைதலின் தத்துவங் கடந்த தனிமுதல்வனைப் "பதங்கள் யாவையுங் கடந்த" என்றார்.

அன்பினு லடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. (18)

குறிப்பு:- ஆவி—உயிர். ஆக்கை—உடம்பு. பரம்—தகுதி. என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்—தகுதியில்லாத எனக்கு இனிய திருவருளைத் தேவரீர் கொடுத்தீர். பரந்த—வியாபித்துள்ள. முன்புமாய்ப் பின்பு (மாய்) முழுதுமாய்ப் பரந்த—எல்லாவற்றிற்கும் முன்னுமாய்ப் பின்னுமாய் அவைமுழுவதுமாய் வியாபித்துள்ள (வன் இறைவன்). முடிவிலா முதலே—எல்லையில்லாத முதற் பொருளே. சீர் — சிறப்பு. சிவபுரம் — சிவலோகம்.

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே. (19)

குறிப்பு:- அன்பர்க்கு அரைசனே எனக்கூட்டுக. பொய்இருள் — அஞ்ஞானம். மெய்ச்சுடர்—மெய்ஞ்ஞானம். திரை—அலை. பொருதல்—மோதுதல். மன்னும்—நிலைபெற்ற. தெண்கடல்—தெளிந்தகடல். திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே — அலைமோதாது நிலைபெற்ற அமுதமாகிய தெளிந்த (பேரானந்தக்) கடலே. உரையுணர்வு இறந்து நின்று—சொல்லையும் சுட்டுணர் வையுங் கடந்து நின்று. உணர்வதோர் உணர்வே—அநுபவத்தில் உணரப்படும் ஒப்பற்ற சிவஞானமே. பாசஞானம் பசுஞானம் ஆகிய இரண்டையுங் கடந்தது சிவஞானம்.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. (20)

குறிப்பு:- குறைவிலா நிறைவு—பூரணம். கோது இலா—குற்றமில்லாத. ஈறு இலா—முடிவு இல்லாத. மன்னிய — நிலைபெற்ற, மன் — இறைவன். சிறை—தடை; கரை. சிறைபெறு நீர்போல் — கரை கடந்த வெள்ளம்போல. சிந்தைவாய்ப்பாயும் — உள்ளத்தை இடமாகக்கொண்டு பெருகிப்பாயும். என் இரக்கேன்—யாது வேண்டி யான் நின்னை யாசிக்கக்கூடும்.

சோதியாய்த் தோன்றும் உருவமே யருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. (21)

குறிப்பு:- ஒருவனே — ஒப்பற்றவனே; கடவுள். பந்தம் — பாசக்கட்டு. குருவாய் வந்து திருவடியிரண்டையும் எனக்கருளிய பின்னர் தேவரீர் என்னைக் கைவிட்டுப் போவதற்குரிய முறையாது? அதை அடியேனுக்குச் சொல்லியருள வேண்டுமென்பதை வற்புறுத்தவேண்டி "யாது நீ போவதோர் வகையெனக் கருளாய்" என்றார். வகை — வழி.

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (22)

குறிப்பு:- ஒப்பிலா (ஒப்பு+இலா)—ஒப்பில்லாத; நிகரற்ற. ஆர்—அருமை. ஆரமுதே—கிடைத்தற்கரிய அமுதமே. பொய்ம்மை—மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருளெனக் கருதுந் தன்மை. பொழுதினைச்சுருக்கும் —நேரத்தைப்பயன்படாது கழிக்கும். செம்மையே ஆய சிவபதம்—பெரு நன்மைக்கு ஏதுவாகிய பேரின்பநிலை. அளித்த—கொடுத்த; அருளிய. இம்மை—இப்பிறப்பு.

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (23)

குறிப்பு :- பானினைந்து—பால்+நினைந்து. சால—மிகவும். சாலப்பரிந்து—மிகவுமிரங்கி. ஊன்—உடம்பு. ஊனினை உருக்கி — உடம்பைப் பேரன்பினால் நெகிழப்பண்ணி. உலப்பு—ஒழிவு; அழிவு; குறைவு. உலப்பிலா (உலப்பு+இலா)-குறைவில்லாத. புறம்—இடம். சென்றவிடமெல்லாம் உடன்நின்று உதவுதலின் "புறம் புறந் திரிந்த" என்றார்.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளிமையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (24)

குறிப்பு:- யாக்கை—உடம்பு. புரைபுரை கனிய—மயிர்க்கால்கள் தோறும் நெகிழ்ச்சி அடையுமாறு. மாசு—குற்றம். மாசிலா — குற்றமில்லாத. துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந் தொடக்கு எலாம் அறுத்த நற்சோதி—பிறப்பு இறப்பு, வாழ்வின் கண் உண்டாகும் துன்பங்கள், அறியாமை என்னும் இவற்றின் சார்புகள் எல்லாவற்றையும் ஒழித்த நல்ல சுயமபிரகாசமே. துன்பமே என்பதில், ஏகாரம் எண்ணுப்பொருளில் வந்தது. சிக்கென — மிக உறுதியாக.

உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ. (25)

குறிப்பு:- உரைமாண்ட — வாக்கிறந்த. கரைமாண்ட — எல்லையில்லாத. காமம்—ஆசை. காமப்பெருங்கடல்—பிரபஞ்சப்பற்றுகிய பெரியகடல். இரைமாண்ட—உணவு நீங்கிய. இந்திரியப் பறவை—ஐம்பொறிகளாகிய பறவைகள். ஐம்பொறிகளுக்கு உணவு ஐம்புலங்கள். ஐம்புலன் நுகர்ச்சி நீங்கிய விடத்து பொறிகளுக்கு உணவில்லையென்பது கருத்து. புலனும் பொறியும் மனமும் ஒடுங்கியபொழுது ஞான சாதகன் உண்மையைத் தரிசிக்கிறுன். துரை—துறை; கதி; வழி. இரிதல் — கெடுதல். தோள்நோக்கம் என்பது ஒருவர் தோளை மற்றொருவர் கடைக்கண்ணுற் பார்க்க முயன்றுடும் ஆட்டம் போன்றதோர் மகளிர் விளையாட்டு.

கயல்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (26)

குறிப்பு:- கயல்மாண்ட கண்ணி — கயல்மீனினுடைய கண்ணிலும் அழகு மிகுந்த கண்களையுடைய உமாதேவியார். அயல்மாண்டு—அன்னியம் ஒழிந்து. அருவினைச்சுற்றமும் மாண்டு — கடத்தற்கரிய வினையால் வருஞ் சுற்றத்தார் உறவும் ஒழிந்து. அவனி—பூமி; பிரபஞ்சம். அவனியின்மேல் மயல்மாண்டு—பிரபஞ்சப் பற்றும் ஒழிந்து. வாசகம் மாண்டு — வாக்கின் செயலும் ஒழிந்து. (அஃதாவது மோனப்பெருநிலை யெய்தி) என்னுடைய செயல் மாண்டவா—என்னுடைய சிவபோதமும் ஒழிந்த விதத்தை. தெள்ளேணம் என்பது மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. இச்செய்யுள் திருவருளால் வரும் பயனைக்கூறுகிறது.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (27)

குறிப்பு:- முத்திநெறி—மோட்சத்தை அடையும் வழி. பத்திநெறி—அன்பு நெறி. சித்த மலம்—சித்தத்தின் கண்ணுள்ள மூன்று மலம். அருளியவாறு ஆர் பெறுவார்—அருள் செய்த முறையை வேறுயார் பெறவல்லார்? அச்சோவே—இது அதிசயமே! கெட்டவழியில் செல்லும் பஞ்சேந்திரியங்களையும் மூர்க்கரெனப் பொருள்கொள்ளினும் அமையும். சித்தமலம் என்பது அந்தக்கரணத்திலிருக்கும் மூன்றுவித தோஷங்கள். அவையாவன (1) மலம் (2) விக்ஷேபம் (3) சொரூபாவரணமாம. (1) மலம்—துர்க்கருமத்திஞல் உண்டாகும் பாவம். (2) விக்ஷேபம்—மனத்தினுடைய சஞ்சலத்தன்மை. (3) சொரூபாவரணம்—தனது நிஜவடிவாகிய அறிவு சொரூபத்தைத்தெரிய வொண்டாமல் மறைக்கும் மறைப்பு (சொரூபம்—தனது நிஜவடிவம். ஆவரணம்—மறைப்பு.) அத்தன் — தந்தை.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவா றூர்பெறுவார் அச்சோவே. (28)

குறிப்பு:- நெறி—வழி. நெறியல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனை—நன்நெறி அல்லாத வழியை நன்னெறியாக நினையும் இயல்புடையேனை. திருவருளைச் சேருவதே சிறந்த நன்நெறி. பொறிபுலன் சாதனையால் ஒடுங்கிய பொழுது திருவருள் உதயமாகும்.

உ
திருச்சிற்றம்பலம்

திருமாளிகைத் தேவர்
அருளிய திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (1)

குறிப்பு:- ஒளிவளர் விளக்கே—ஒளிமிகுந்த தீபமே. உலப்பிலா ஒன்றே—அழிவில்லாத ஒப்பற்ற பொருளே. தெளிவளர்—பிரகாசம் மிகுந்த. தித்தித்தல்—இனித்தல்; அளிவளர் உள்ளத்து—அன்பு பெருகும் மனத்தின்கண். அம்பலம்—சபை. இங்கு சிதாகாசத்தைக்குறிக்கிறது; சிதாகாசம்—ஞானகாசம். அரங்கு—இடம்; சபை. அம்பலம் ஆடுஅரங்காக—ஞானகாசமே நடனஞ்செய்யும் இடமாக. உகந்தாயை—விரும்பிச்செய்யும் நின்னை. விளம்புமா—சொல்லும் வகையை. விளம்பே—(அடியேனுக்குச்) சொல்லுவாயாக! (அருள்புரிவாயாக!)

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றுயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. (2)

குறிப்பு:- பிழம்பு — திரட்சி; தொகுதி. இருட்பிழம்பு அற எறிந்து—அஞ்ஞானமாகிய இருட் தொகுதி நீங்கும் வண்ணம் அகற்றி. அடல்விடைப் பாகா—வலிமைமிக்க இடபத்தை வாகனமாக உடைய சிவபிரானே. அயன்—பிரமா. மால் — திருமால். பரந்து நின்றுயை — வியாபகத்துக்கும் வியாபகமாய் நிற்கும் நின்னை. பணிதல் — வணங்குதல் பணித்தல் — கட்டளையிடுதல். பணியுமா (பணியும்+ஆ) பணியே—அடியேன் வணங்கும்வகையைக் காட்டியருள்வாயாக!

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண்டா அண்ட வாணு
நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவிஞல் நவில்வான்
அற்பனென் னுள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ
கற்பமாய் உலகாய் அல்லையா னுயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. (3)

குறிப்பு:- தற்பரம்—அதுவென்று சொல்லப்படும் பரம்பொருள் (தானே தானாக விளங்கும் நிலை). சசி—சந்திரன்; கண்டம் — துண்டு, சிகண்டம்—சடைமுடி, சசிகண்ட சிகண்டா—இளம் பிறைச்சந்திரனை அணிந்த சடைமுடியை உடையவனே. சாமகண்டன் — சாமவேதத்தைப்பாடும் கண்டத்தையுடைய சிவன். அண்டவாணன்—தேவர்க்குத் தலைவன், உள்ளத்தளவிலா—உள்ளத்து+அளவு+இலா. கற்பம்—ஊழிக்காலம். உலகு ஆய்—எல்லா உலகங்களாயும். அல்லை (ஆய்)—அவைகளுக்கும் அப்பாற்பட்டும். ஆனாயை—விளங்குகின்ற நின்னை. கருதுமா — நினைக்குமாறு. கருது—நினைப்பாயாக (அருள்புரிவாயாக).

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணுயென்
 பிறப்பிறப் பறுத்த பேரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
 மகளுமை யவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
 அப்பனே அம்பலத் தமுதே
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
 தொண்டனேன் உரைக்குமா றுரையே. (4)

குறிப்பு:-பிறப்பிறப்பு (பிறப்பு+இறப்பு) அறுத்த பேரொளி—பிறப்பையும் மரணத்தையும் நீக்கி மோட்சத்தைக்கொடுக்கும் சுயம்பிரகாசம். கயற்கணாள்—கயல்மீன் போலும் (அழகிய) கண்களையுடைய உமாதேவியார், இமவான் — இமயமலை அரசன், களைகண்—உறுதுணை; ஆதரவு, புக்குருவி—(புக்கு+உருவி). நின்றாயை—(ஒருவனாக இருந்தும் பல பொருள்களிலும்) ஊடுருவிக் கலந்து நின்ற நின்னை. உரைக்குமாறு உரையே—(அடியேன்) புகழ்ந்து சொல்லும்வழியை அருள்செய்வாயாக.

கோலமே மேலை வானவர் கோவே
 குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
 காலகாலா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற்
 கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
 தொண்டனேன் நணுகுமா நணுகே. (5)

குறிப்பு:- இறந்த—கடந்த; ஓர் குணமே—ஒப்பற்ற நிர்க்குண சொருபமே. காலகாலன்—இயமனுக்குக்கூற்றுவனாக உள்ளவன். காமநாசன் — பிரபஞ்சப் பற்றையொழிப்பவன். ஆலமே அமுது உண்டு—நஞ்சை அமுதாக உட்கொண்டு. அம்பலம் செம்பொற்கோயில் கொண்டு — பரவெளியைத் திருக்கோயிலாகக் கொண்டு. ஞாலமே—உலகமாக உள்ளவனே! தமியேன் — தமியேனுக்கு (ஆதரவற்ற அடியேனுக்கு). நல்தவத்தாயை—நல்லதவவடிவினனாகிய நின்னை. நணுகுதல்—இணைதல்; சார்தல்; நெருங்குதல்.

நீறணி பவளக் குன்றமே நின்ற
  நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
  வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
  அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே. (6)

குறிப்பு:- வேறணி (வேறு+அணி) புவன போகமே — வெவ்வேறாகிய அழகிய உலகங்களும் போகப்பொருளுமாய் இருப்பவனே. யோக வெள்ளமே— சிவயோக முதிர்ச்சியில் விளையும் இன்பப்பெருக்கே ஆறு—கங்கை. அணி— அழகிய. அம்பொன்செய் அம்பலத்து — உயர்ந்த பொன்னினால் அமைத்த சிதம்பரத் திருத்தலத்திற்கு. அரசே—தலைவரே. ஏறு—இடபம். ஏறணி (ஏறு+ அணி) கொடி — இடப வடிவம் எழுதியுள்ள அழகிய கொடியையுடைய. இசையுமாறு — பொருந்தும் வண்ணம்; இசையே—நீ இணங்கு.

தனதனற் றோழா சங்கரா சூல
  பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
  கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
  அம்பலத் தமரசே கரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
  தொண்டனேன் நுகருமா நுகரே. (7)

குறிப்பு: தனதனற்றோழா—தனதன்+நல்+தோழா. தனதன்—குபேரன். குபேரன் சிவபிரானது தோழன். பாணி—கை. சூலபாணியே — சூலத்தைக் கையில் ஏந்தியவனே. தாணு—அழிவில்லாதவன் (சிவன்). கனகம் — பொன். கொழுந்து—தளிர். அனகன்—பாவமில்லாதவன். சனக—பிதாவே. அமரசேகரன் (அமரர்+சேகரன்) — தேவர்களுக்குத் தலைமைபூண்டவன். நுகர்தல் — அநுபவித்தல். நுகரே—அனுபவத்தைத் தந்தருள்க.

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. (8)

குறிப்பு:- திறம்பிய—மாறுபட்ட. சேவடி—சிவந்த திருவடி. நிகழ்வித்த—செல்லும்படி செய்த. அறம்பல திறம்கண்டு — தருமத்தின் பலதன்மைகளை அருளிச்செய்து. அருந்தவர்க்கு—அரியதவத்தைச் செய்த சனகாதிநால்வர்க்கு. சனகாதியர் நால்வர்—சனகன், சனாதனன், சனற்குமாரன், சனந்தனன் என்ற பிரமனது புத்திரர்களான நான்கு தெய்வ இருஷிகள். இந்நால்வர்க்கும் சிவன் தட்சிணாமூர்த்தமாய் கல்லாலின்கீழிருந்து மௌனோபதேசஞ் செய்தருளினார். புறம் சமண் புத்தர்—புறச்சமயத்தினராகிய சமணர், புத்தர். புணர்தல்—கலத்தல். புணரே—என்னொடு கலந்து நிற்பாயாக.

தக்கன்நற் றலையும் எச்சன்வன் தலையுந்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்திருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே
அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடுஞ்
சொக்கனே எவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே. (9)

குறிப்பு:— எச்சன்—விட்டுணு. ஒக்க விண்டு உருள—ஒருமிக்க அறுபட்டு உருளும்படி. ஒண்திருப்புருவம் நெரித்தருளிய—ஒளிமிக்க புருவத்தை நெரித்துக் கோபித்த. அக்கு—உருத்திராக்கம். அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட— உருத்திராக்க மணிகளும் புலித்தோல் உடையும் மேலே அசையும்படி. சொக்கம்—அழகு; சொக்கன்—அழகன்; சிவன். தொடர்தல் — பின் னே செல்லுதல்

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே மருளார்
இடங்கொள்முப் புரம்வெந் தவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே
அடங்கவல் அரக்கன் அருட்டிரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே யுன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. (10)

குறிப்பு:— மடங்கல்—சிங்கம். கனகன்—இரணியன். கீண்டல் — கிழித்தல். வள்ளலே—நரசிங்கமாக இரணியனது மார்பைப்கிழித்த விஷ்ணு மூர்த்திக்கு அருள்செய்த கொடையாளனே (சிவனே). மருளார் — அஞ்ஞானம் நிறைந்த அசுரர்கள். வைதிகம்—வேதசம்பந்தம். வைதிகத்தேர் — வேதங்களைக் குதிரையாகப்பூட்டப்பட்டதேர். சேவகன் — வீரன். ஏறு—ஆணசிங்கம். ஏறுசேவகன்— ஆண்சிங்கம் போன்ற வீரன். அடங்க வல்அரக்கன்—வல் அரக்கன் (இராவணன்) அகங்காரம் கெடும்படியாக. வரை — மலை. அருட்டிருவரை (அருள்+திரு+ வரை)—அருள் பொருந்திய கைலையங்கிரி. அடர்த்த — தண்டித்த; நசுக்கிய. கண்டம்—கழுத்து. விடங்கு—அழகு. விடங்கன்—அழகன்; சிவபிரான்.

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா
தயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட்(டு) ஓர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கும்அம் பலத்துள்
நிறைதரு கருணை நிலயமே யுன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே. (11)

குறிப்பு:- மாட்டாது மயங்கி—அறிய மாட்டாமல் மயங்கி. அயன்—பிரமா. திருமால்—விட்டுணு. முறை முறை முறையிட்டு ஓர்வு அரியாயை — பலதடவைகள் முறையிட்டும் அறியமுடியாத நின்னை. ஓர்வு—(ஆராய்ந்து அநுபவத்தில்) அறிதல். புன்மொழி—இழிவாகிய சொல். நிறை தரு கருணை நிலையம் — நிறைந்த கருணைக்கு இருப்பிடமே. அதுயாதெனில் ஞானகாயமாய் விளங்குஞ் சிவ சொரூபம். சீர்—சிறப்பு; உயர்வு. வெறுமை—அறியாமை. சிறுமையில்—இழிவை. 'பொறுக்கும் கருணை நிலையம்' எனக்கூட்டுக.

௨
திருச்சிற்றம்பலம்

சேந்தனூர் அருளிய
திருப்பல்லாண்டு.

கோயில் (சிதம்பரம்) பண்-பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் 1
பல்லாண்டு கூறுதுமே.

குறிப்பு:- தில்லைமன்னுக — சிதம்பரம் நிலைபெற்றிருப்பதாக. வஞ்சகர் போய் அகல—வஞ்சகர்கள் நீங்கிப்போக. புவனி—உலகம். மடவாள்—இளம் பெண். உமைகோன் — உமாதேவியாரது தலைவன். பின்னைப்பிறவிஅறுக்க—இனிமேல் வரும் பிறப்புயாவும்நீங்க; நெறிதந்த—திருவருள்நெறியை அருளிய. பல்லாண்டு கூறுதுமே—பல்லாண்டுகள் வாழ்விராக என்று வாழ்த்து கூறுவோம். என்றும் எவ்விடத்தும் விளங்கும் சிவபிரானுக்குப் பக்தர்கள் பல்லாண்டு கூறுவது உபசார வழக்கு.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே (2)
பல்லாண்டு கூறுதுமே.

குறிப்பு:– பாலகன்—சிறுவனாகிய உபமன்யு முனிவர். இவர் வியாக்கிரபாத முனிவருடைய புத்திரர். உபமன்யு முனிவர் குழந்தைப்பருவத்திலே பால்வேண்டி அழுதபொழுது நடராசப்பெருமான் திருப்பாற்கடலை அழைத்து அவருக்கு உண்ணக்கொடுத்தருளினார். ஆலிக்கும் — களித்திருக்கும். பாலித்து—அருள் புரிந்து. சிற்றம்பலமே இடமாக—ஞானாகாசமே இடமாகக் கொண்டு. நட்டம் பயில—திருநடனம்புரிய. சிற்றம்பலமே தனக்கு இடமாகக் கொண்டு சிவபிரான் யாவருக்கும் அருள்புரிகிறார்.

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. (3)

குறிப்பு:– சீருந் திருவும் பொலிய—சிறப்பும் திருவருட்செல்வமும் விளங்க. ஊரும் உலகும் கழற உழறி—ஊரில் உள்ளாரும் உலகத்தவர்களும் புகழ்ந்து பேச; உமைமணவாளனுக்கு ஆள்—நாம் உமையாள் கணவனாகிய சிவபிரானுக்கு அடிமைப்பட்ட தன்மையை; பாரும் விசும்பும் அறிய — பூமியிலும் ஆகாயத்திலும் உள்ளவர்கள் (மனிதர்களும் தேவர்களும்) அறியும் விதமாக. நாம் பல்லாண்டு கூறுதுமே—நாம் பல்லாண்டு கூறுவோமாக!

திருப்புராணம்

விநாயகக்கடவுள்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். (1)

(கந்தபுராணம்)

குறிப்பு:-மண் உலகம்—பூமி. மாசு அற—குற்றம் நீங்க. எளிதின்—இலகுவில். முற்று உற—நிறைவேற. கண்நுதல் உடைய—கண்ணை நெற்றியில் உள்ள. பண்ணவன் — இறைவன். பிறவி மாசு அறவும், பொருள் எல்லாம் முற்று உறவும், பண்ணவன் மலரடி போற்றுவாம் எனக் கூட்டுக.

பெரிய புராணம்—சேக்கிழார் சுவாமிகள் அருளியது. இது திருத்தொண்டர் புராணம் எனவும் பெயர்பெறும்

சேக்கிழார் சுவாமிகள் புராணம்—உமாபதி சிவாசாரியர் அருளியது. இது திருத்தொண்டர் புராண வரலாறு எனவும் பெயர்பெறும்.

திருவிளையாடற் புராணம்—பரஞ்சோதி முனிவர் அருளியது.

கந்தபுராணம்—கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளியது.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமா ழத்துப் பிள்ளையைப் பேணுவாம். (2)

(விநாயகபுராணம்)

குறிப்பு:- காய்தல்—அழித்தல். பெருகுமாழம்—சிதம்பரத்தினின்றும் விருத்தாசலத்துக்குச் செல்லும் வழியிலுள்ள மணிமுத்தாற்றுக்குப் பக்கத்திலிருக்கும் விநாயக ஸ்தலம்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம். (3)

(சேக்கிழார் சுவாமிகள் புராணம்)

குறிப்பு:- வானுலகு (வான்+உலகு)—தேவர் உலகம். பான்மை—சிறப்பு. செய்ய—செவ்விய. ஞானமதம்—ஞானமாகிய மதம். நால் வாய்—தொங்குகின்ற வாய். நாலுதல்—தொங்குதல். அஞ்சலி—தொழுதல். செய்கிற்பாம்—செய்வாம்.

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகடீர்ப்பாம். (4)

(திருவிளையாடற் புராணம்)

குறிப்பு :- கூடம் — வீடு. தறி — தூண் தள் அரிய—அசைக்க இயலாத. தொடர்பு ஊட்டி — தொடர்பை உபயோகித்து. இடைப்படுத்தி — அகப்படுத்தி. தறுகண் பாசம் — வலிமையுடைய மலம். கள்ளவினை — தீய வினை. பசு போதம் — பசுஞானம் என்னும் உணர்வு. கவளம்—உணவு. களித்துண்டு (களித்து + உண்டு) — மகிழ்ந்து புசித்து. வெள்ளமதம் — மிக்க மத நீர். சித்திவேழம் — சித்தி விநாயகர். வினைகடீர்ப்பாம் — வினைகள் + தீர்ப்பாம்.

சிவபெருமான்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (5)

(பெரிய புராணம்)

குறிப்பு: உலகெலாம் — உலகு + எலாம். உலகு இங்கு சான்றோரைக் குறிக்கிறது. உணர்ந்து — அறிந்து. ஓதற்கு அரியவன் — சொல்லுதற்கு அருமையானவன்; வாக்கைக்கடந்தவன். நிலவு — சந்திரன். நீர் — கங்கை. வேணி — சடை. அலகில் (அலகு + இல்) — அளவு இல்லாத; கணிக்கமுடியாத. அம்பலம் — சபை; வெளி.

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி (6)

(பெரிய புராணம்)

குறிப்பு:- பேதியா ஏகமாகி—மாறுதலின்றி எப்பொழுதும் ஒன்றுகவே நின்று. போதியா நிற்கும்—உபதேசஞ் செய்யும். பொது—சபை (ஞானுகாசம்). நடம்—திருவருட்கூத்து. உணர்வு—அறிவு.

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற் றம்பலத் துணின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி (7)
(பெரிய புராணம்)

குறிப்பு:- நீடுதல் — நிலைத்திருத்தல். மறை — வேதம். சிரம் — தலை. சிற்பர வியோமம் — பரஞானவெளி. அம்பலத்துணின்று — அம்பலத்துள் + நின்று. பொற்பு—அழகு. போற்றி—துதிப்போமாக.

ஏகனே போற்றி யார்க்கு மீசனே போற்றி யம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுட ருருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி. (8)
(கந்த புராணம்)

குறிப்பு:- ஏகன்—ஒருவன். பரஞ்சுடர் — மேலான ஞான ஒளி. அம்மை—சக்தி. மேகமார் களன்—நீலநிறம் பொருந்திய திருக்கண்டம். விடை—இடபம். மோகம்—மயக்கம். முடித்தல்—அழித்தல்.

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றி
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
அருவந் தனையும் உருவத்தையு மன்றி நின்றுன்
ஒருவன் தனது பதந்தன்னை யுளத்தில் வைப்பாம். (9)
(கந்தபுராணம்)

குறிப்பு: திரு — அழகு, செல்வம் முதலியன. தொல்லை — பழைமை. புவனம்—உலகம். ஈண்டு இச்சொல் மக்களைக் குறித்தது. போற்றி — துதித்து. பெற்றி — இயல்பு. அருவம் — உருவமின்மை. அன்றி — கடந்து. நின்றுன் ஒருவன் — நின்றவனுகிய ஒருவன்; சிவன். பதம் — திருவடி.

ஊனுகி யூனு ளுயிரா யுயிர்தொறு மாகி
வானுதி யான பொருளாய் மதியாகி வெய்யோன்
தானுகி யாண்பெண் ணுருவாகிச் சராச ரங்கள்
ஆனுன் சிவன்மற் றவன்நீள் கழற்கன்பு செய்வாம். (10)
(கந்தபுராணம்)

குறிப்பு :— ஊன் — உடல். வான் ஆதி — ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கள். மதி — சந்திரன். வெய்யோன்—சூரியன். சராசரம் (சர+அசரம்)— இயங்கும் பொருள்களும் இயங்காப் பொருள்களும். 'கழல் — திருவடி. அளவுகாண்பதற்கு அரியதாதலின் 'நீள் கழல்' என்றார். அன்பு செய்தல் — தன்னை முற்றாக ஒப்படைத்தல். மற்று—அசைச்சொல்.

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம். (11)

(கந்தபுராணம்)

குறிப்பு: புனிதன் ஆதியோர் — பிரமா, திருமால் முதலியோர் ஓர் — ஒப்பற்ற. மறை — வேதம். ஒரு வடிவம் — ஒப்பற்ற இயல்பு. காமரு — அழகு பொருந்திய. கழல் — திருவடி. மிசை—மேல்.

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரும் மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி (12)

(சேக்கிழார் சுவாமிகள் புராணம்)

குறிப்பு: சீர் — சிறப்பு. சதுர் — நான்கு. பார் — பூமி. வார் — நீண்ட. வையம் — பூமி. ஏர் — அழகு. மணிமன்று — அழகிய சிற்சபை.

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ. (13)

(பெரிய புராணம்)

குறிப்பு: ஊன் அடைந்த — தசை முதலியவைகளால் ஆன. உறுதி—வீடுபேறு. மா— பெருமை. வரதர் —சிவபிரான். வரதர் பொற்றாள் தொழ பிறவி உறுதியைச் சாரும். ஆல் — அசைநிலை.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
யாறங்க முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம். (14)

(திருவிளையாடற் புராணம்)

குறிப்பு: கல் ஆல் — கல்லால விருக்ஷம். இது திருக்கைலையில் உள்ளது. புடை — பக்கம். ஆறு அங்கம்— நான் மறைகளை உணர்தற்கு உதவும் சிட்சை, வியாகரணம், சோதிடம், நிருத்தம், கற்பம், சந்தசு என்பன. நால்வர்—சனகர், சனந்தனர், சனந்தனர், சனற்குமாரர். வாக்கு — சொல். இறத்தல்—கடத்தல். எல்லாமாய் — அறியப்படும் பொருட்கள் யாவுமாய் (திருசியமாய்). அல்லதுமாய் — அறியப்படும் பொருட்களை அறியும் அறிவாய் (திருக்காய்). இருந்ததனை — இருக்கும் மோனப்பொருளை. இருந்துகாட்டி — குருமூர்த்தமாய் இருந்து சைகையினால் காட்டி. சொல்லாமற் சொல்லுதல்— மௌன நிலையினால் ஞானத்தை உணர்த்துதல். பவத்தொடக்கு — பிறவித் தொடர்பு.

உமாதேவியார்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. (15)

(சேக்கிழார் சுவாமிகள் புராணம்)

குறிப்பு: பரசமயம் — பிறசமயம் சிரம் — தலைமை. அரந்தை —துன்பம். புகலியர்கோன் — திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். போற்றி—துதிப்போமாக; வாழ்க. "நீங்க, விளங்க போற்றி" எனக் கூட்டுக.

செறிதரும் உயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம். (16)

(கந்தபுராணம்)

குறிப்பு; செறிதரும் — பலவாக உள்ள. மன்னி — நிலைபெற்று. மறுவறும் — குற்றமற்ற. நெறி — சமயம். பிறவும் — இவையல்லாத பிறசமயங்களும். இறைஞ்சுதல் — வணங்குதல். அறுவகை— ஆறுவகை.

பங்கயற்கண் அரியபரம் பரனுருவே
தனக்குரிய படிவ மாகி
இங்கயற்கண் அகனுலகம் எண்ணிறந்த
சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள் போற்கோலங் கொண்ட
அங்கயற்கண் அம்மையிரு பாதப்போ
தெப்போதும் அகத்துள் வைப்பாம். (17)

(திருவிளையாடற் புராணம்)

குறிப்பு: பங்கு — பாகம். பரம்பரன் — சிவன். அகன் — அகன்ற. குமரி — கன்னி. போது — பூ. படிவம்—தோற்றம். கொங்கு—வாசனை. அங்கயல் (அம்+கயல்) — அழகிய கயல் மீன். கோலம்—வடிவம்.

வைரவக்கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். (18)

(கந்தபுராணம்)

குறிப்பு:- பரமன் — சிவன். பங்கயம் — தாமரை. ஒழிந்த — ஏனைய. பங்கயாசனன் (பங்கய+ஆசனன்) — பிரமா. தண்டம் முன் புரிதரு — தண்டனையை முன்னே கொடுத்த. வடுகன் — வைரவர். சிவனைப் பிரமா இகழ்ந்தமைக்காக அவனுக்கு வைரவர் தண்டனை கொடுத்தார்.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆல மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம். **(19)**

(கந்தபுராணம்)

குறிப்பு:- பரி—முடிவு. பரி அழல் — ஊழிக்கால நெருப்பு. அஞ்சனப் புகை—கரியபுகை. ஆலம்—நஞ்சு. செஞ்சுடர்ப் படிவம்—சிவந்த ஒளிப்பிழம்பு உருவம். கஞ்சுகம் — சட்டை. மணிக் கஞ்சுகம்—மணிகளையுடைய கஞ்சுகம். இப்பாடலில் வைரவக்கடவுளின் உருவத் திருமேனியைக் கூறினர்.

வீரபத்திரக்கடவுள்

அடைந்தவி யுண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம். **(20)**

(கந்தபுராணம்)

குறிப்பு:- அடைந்து — யாகத்திற்குச் சென்று; அவி உண்டிடு — உணவை உண்ட. முடிந்திட — இறக்க. உடைந்திட — பயந்து ஓட. மாமகம் — மிகப் பெரிய வேள்வி. ஒடிய — தடைப்பட. தடிந்திடு — தண்டனை கொடுத்த. சேவகன் — வீரன். வீரபத்திரர் சிவனது கட்டளையை நிறைவேற்றியவராதலின் சேவகன் என்றார். சரணம் — திருவடி.

சுப்பிரமணியக் கடவுள்

அருவமு முருவு மாகி அநாதியாய்ப்
    பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர்
    மேனி யாகக்

கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன்
 னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன்
 உலக முய்ய. (21)

(கந்தபுராணம்)

குறிப்பு:- அருவம்—அருவ வடிவம். அநாதி (அந்+ஆதி)—ஆதியில்லாதது. பிரமம்—முதற்பொருள். ஒரு—ஒப்பற்ற. ஆங்கு—அசைச்சொல். உலகம் உய்ய திருமுருகன் உதித்தனன் எனக் கூட்டுக

புன்னெறி யதனிற் செல்லும்
 போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து
 நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி
 யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
 பாதபங் கயங்கள் போற்றி (22)

(கந்தபுராணம்)

குறிப்பு:- புன்னெறி (புன்மை+நெறி)—தீமையானவழி. போக்கு—செயல். நவை—குற்றம். காட்சி—அருட்காட்சி. தடம்—விசாலம். பங்கயம்—தாமரை.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்கநின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.
(23)

(கந்தபுராணம்)

குறிப்பு :- ஏவரும்—எல்லோரும். மாஅடி—காஞ்சிபுரத் திருத்தலத்தில் உள்ள மாமரத்தின் நீழல். செவ்வேள்—செந்நிறத்தனான கந்தன். திரு—அழகு.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடிய ரெல்லாம். (24)

(கந்தபுராணம்)

குறிப்பு:- ஆறிரு — பன்னிரண்டு. தனி—ஒப்பற்ற. குக்குடம் — சேவல். மஞ்சை — மயில். யானைதன் அணங்கு — தெய்வயானை அம்மை.

கலைமகள்

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம். (25)
(கந்தபுராணம்)

குறிப்பு :- தா — குற்றம்; கேடு. தா அறும் — குற்றம் நீங்கிய. நான்முகத்தேவு—பிரமா. வாணி — கலைமகள். பூ—அழகு.

சமயகுரவர் நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. (26)
(சேக்கிழார் சுவாமிகள் புராணம்)

குறிப்பு:- பூழியர்கோன் — பாண்டியன். புகலியர்கோன் — திருஞான சம்பந்தர். ஆழிமிசை — கடலின்கண். கல்மிதப்பு — கற்தோணி. அணைந்த பிரான்—கடந்த திருநாவுக்கரசர். வன்றொண்டர்—சுந்தரமூர்த்தி நாயனர். ஊழிமலி — யுகமுடியும்வரை புகழ் நிறைந்த. திருவாதவூரர்—மாணிக்கவாசக சுவாமிகள். வெப்பொழித்த (வெப்பு+ஒழித்த) — வெப்பு நோயை நீக்கிய.

திருத்தொண்டர்

அண்டரு நான்முகத் தயனும் யாவருங்
கண்டிட அரியதோர் காட்சிக் கண்ணவாய்
எண்டகு சிவனடி எய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம். (27)
(கந்தபுராணம்)

குறிப்பு:- அண்டர்—தேவர். அயன் — பிரமா. கண்ணவாய் (கண் + அவாய்)— அகக்கண்ணை உடையவராய். எண்தகு — எவரும் மதிக்கத்தக்க.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம். (28)

(கந்தபுராணம்)

குறிப்பு:- மலிவளம்—நிறைந்த செல்வம். சுரக்க — பெருகுக. மன்னன் கோல்முறை—அரசனது செங்கோல் முறைப்படி. வேள்வி—யாகம். மல்க— நிறைக.

உ
சிவமயம்

அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த திருப்புகழ் என்னும் நூலிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாக்கள்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே. (1)

குறிப்பு:- ஏறுமயில்—மயிற்சேவல். ஈசன் — சிவபெருமான். குன்று — கிரவுஞ்சமலை; பொருள்—உண்மைப் பொருள். அருணாசலம்—திருவண்ணாமலை. ஆறு முகங்களும் ஆறு திருவருட் செயல்களைச் செய்வன.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமா முகன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே. (2)

குறிப்பு:- அபகாரம்—தீமைகள். உழலாதே—அலையாமல். இபமாமுகன்—யானை முகத்தினையுடைய விநாயகர். இமவான்—இமயமலை அரசன்.

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே. (3)

குறிப்பு:- பிரகிருதி மார்க்கம்—இலௌகிகவழி. அறுசமயம் — ஆறுசமயங்கள். குறுமுனிவன்—அகஸ்திய முனிவர்.

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக் கருள்வாயே
தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா
சத்தசொரு பாபுத் தமுதோனே
நித்தியக்ரு தாநற் பெருவாழ்வே
நிர்த்தசெக சோதிப் பெருமாளே. (4)

குறிப்பு:- தரணி—பூமி. எத்தர்—ஏமாற்றுபவர். முத்தமிழ்—இயல், இசை, நாடகம். சொருபம்—வடிவம். புத்தமுது—புதுமை+அமுது. க்ருதா — கருத்தா (செய்பவன்). நிர்த்தம்—நடனம். தத்துவம்—உண்மை.

கருப்பற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றுருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே. (5)

குறிப்பு:– கரு—கருப்பை. கனக்க—மிக; அதிகமாக. பாடு உற்று—முயற்சி செய்து. அநுபூதி — அனுபவ ஞானம். பாலித்து — தந்து. பரப்பற்றூர் — பரபரப்பு அற்றவர். பரத்தப்பால் (பரத்து+அப்பால்)—பரதத்துவத்துக்கப்பால். பெருமாளே அநுபூதி அருள்வாய் எனக்கூட்டுக.

காமியத் தழுந்தி யிளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே. (6)

குறிப்பு:– காமியம்—உலக ஆசை. காலர்—இயம தூதுவர். ஓம் எழுத்து—பிரணவ ஒலி. தூமம் — நறும்புகை. மெய்க்கு — உடலுக்கு. லீலன் — விளையாட்டினன். ஏமம்—பாதுகாப்பு. வெற்பு—மலை. ஏரகம் — சுவாமிமலை. ‘பெருமாளே அந்தம் அருள்வாய்’ எனக்கூட்டுக.

நாலு மிகுத்த கசிவாகி
ஞான நிருத்த மதைநாடும்
ஏழை தனக்கு மநுபூதி
ராசி தழைக்க அருள்வாயே
பூளை யெருக்கு மதிநாக
பூண ரளித்த சிறியோனே
வேளை தனக்கு சிதமாக
வேழ மழைத்த பெருமாளே. (7)

குறிப்பு:- கசிவு — அன்பு. நிருத்தம் — நடனம். ராசி — விளைவு; பேறு. பூளை — தும்பைப்பூ. மதிநாகம் — சந்திரனும் பாம்பும். பூணர் — ஆபரணமாக அணிந்த சிவன். சிறியோன்—இளைஞன். வேளை தனக்கு—வள்ளிநாயகி எதிர்த்த அந்தநேரத்தில். உசிதமாக—ஏற்றதாக. வேழம்—யானை.

நித்தமுற் றுனைநினைத்து மிகநாடி
நிட்டைபெற் றியல்கருத்தர் துணையாக
நத்தியுத் தமதவத்தி னெறியாலே
லக்யலக் கணநிருத்த மருள்வாயே
வெற்றிவிக் ரமவரக்கர் கிளைமாள
விட்டநத் துகரனுக்கு மருகோனே
குற்றமற் றவருளத்தி லுறைவோனே
குக்குடக் கொடிதரித்த பெருமாளே. (8)

குறிப்பு:- நித்தம்—நாள்தோறும். உற்று—பொருந்தி. நிட்டை—தியானம். கருத்தர்—முதல்வர். நத்தி—விரும்பி. லக்கியலக்கணம் நிருத்தம்—இலக்கியமும் இலக்கணமும் நிருத்தமும். விக்கிரம—வீரமுள்ள. கிளை—சுற்றம். நத்து கரன் (நத்து+கரன்)—சங்கைக் கையில் உள்ள திருமால். குக்குடம்—சேவல்.

எதிரி லாத பக்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே. (9)

குறிப்பு:- எதிர்—மாறுபாடு. தாணினைப்பு — தாள்+நினைப்பு. தாள்—பாதம். இருபோது—பகலும் இரவும். எனதுளே—என்னுடைய உள்ளத்துள். வாரிதி—சமுத்திரம். கதிரகாமம்—கதிர்காமம். கனகம்—பொன். மதுரவாணி—இனிய ஓசை. உற்ற—பொருந்திய. வழுதி — பாண்டியன். வழுதியின் கூனை நிமிர்த்தியவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர். கந்தக் கடவுளது அச்சமே திருஞானசம்பந்தர் எனக்கூறப் பெறுவதனுல், திருஞானசம்பந்தரின் அருட் செயலைக் கந்தப்பெருமானுக்கு உரியதாகக் கூறினுர் அருணகிரிநாதசுவாமிகள்.

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே. (10)

குறிப்பு:- இரு வினை—நல்வினை, தீவினை. மதி—புத்தி. எழு நரகு — ஏழு நரகம். பரமகுரு—ஞானகுரு. பரவு தரிசனை—துதித்தற்கான திருவருட் காட்சி. என்று — எப்போது. எற்கு (என்+கு) — எனக்கு. தெரி — ஆராய்கின்ற. செம்பொன் — செம்மை+பொன். புரியும் — மேற்கொள்ளும். கனகசபை — சிதம்பரம். கந்தப் பெருமாளே தரிசனையை எற்கு அருள்வாய் எனக்கூட்டுக.

உ

சிவமயம்

அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

கந்தரலங்கார மென்னும் நூலிலிருந்து

தெரிவுசெய்யப்பட்ட பாக்கள்.

காப்பு.

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெ னப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

பதவுரை

அடல்—(தன்னை நினைந்தார்க்கு முத்தி நல்கும்) வலிமை பொருந்திய, அருணை—திருவண்ணாமலை என்னும் திருத்தலத்திலுள்ள, திருக்கோபுரத்தே—அழகிய கோபுரத்தினில், அந்த வாயிலுக்கு—வனப்பு மிக்க வாசலுக்கு,

வட அருகில் சென்று—வடதிசையின் பக்கத்திற் போய், வருவார் தலையில்—அக்கோபுர வாயில் வழியாய் வழிபாடு செய்யவருகின்றவர்கள் சென்னிகளில், தடபட என படு குட்டுடன்—தடபட என்று ஒலியுடனிடுகின்ற குட்டுகளுடனே, சர்க்கரை மொக்கிய—சர்க்கரை முதலிய சிற்றுணவுகளை உண்ணுகின்ற, கை—துதிக்கையினையும், கடம்—மதத்தையும், தடகும்பம்—விசாலம் பொருந்திய கும்பத்தலங்களையும் கொண்டிருக்கின்ற, களிற்றுக்கு — யானை முகக் கடவுளாகிய விநாயக மூர்த்திக்கு, இளைய களிற்றினை—இளைய ஞான வேழமாகிய முருகப் பெருமானை, கண்டுகொண்டேன் — சேவித்துக் கொண்டேன்.

குறிப்பு:- மொக்குதல்—வாய்நிரம்ப உண்ணுதல். களிறு — ஆண்யானை. கடம்—மதம். விநாயகர் இச்சை, கிரியை, ஞானமென்னும் மும்மதங்களை யுடையவர் என்பது.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாதவென்னைப்ரபஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே. (1)

பதவுரை

பேற்றை — முத்திப்பயனைப் பெறுவதற்கு, தவம் சற்றும் — நல்லதவம் சிறிதும், இல்லாத—செய்யாத, என்னை—அடியேனை, செம் — சிவந்த, சடா அடவி மேல்—சடையாகிய காட்டின் மீது, ஆற்றை — கங்கா நதியையும், பணியை—பாம்பையும், இதழியை — கொன்றை மலரையும், தும்பையை—தும்பை மலரையும், அம்புலியின் கீற்றை—சந்திரனது பிளவையும் (பிறைமதி), புனைந்த பெருமான்—சூடிக்கொண்டுள்ள பெருமையுடையவராகிய சிவபெருமானது, குமாரன்—புதல்வரே!, க்ருபாகரனே—கருணைக்கு உறைவிடமானவரே!, ப்ரபஞ்சம் என்னும்—உலகமாயை என்கின்ற, சேற்றை—சேற்றினை, கழிய வழிவிட்டவா—அகன்று உய்யுமாறு மெய்வழியைக் காட்டிய தேவரீரது திருவருளின் எளிமை இருந்தவாறு என்னையோ?

குறிப்பு:- தவம்—பொறிபுலன் அடங்கி ஆன்மாவில் மனோலயமாவது. தவத்தினால் மனம் சுத்தமாகி ஆன்ம ஞானம் உண்டாகும். உலக விச்சையற்ற தவத்தினால் உண்டாவது முத்திப்பேறு. க்ருபாகரன் — கிருபைக்கு உறைவிடமானவன்.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்றவெறுந் தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே! (2)

பதவுரை

ஒளியில் விளைந்த — அருட்பெருஞ் ஜோதியில் உண்டாகிய, உயர்ஞான பூதரத்து உச்சியின் மேல் — உயர்ந்த ஞானமாகிய மலையின் முடியிலே, அளியில் விளைந்தது—தனிப்பெருங் கருணையால் உண்டாகிய, ஓர் ஆனந்தத் தேனை—ஒப்பற்ற சிவாநந்தத் தேனை, அநாதியிலே — மிகவும் பழையகாலத் திலேயே, வெளியில் விளைந்த—கட்டு நீங்கிய வெட்டவெளியில் உண்டாகிய வெறும் பாழை — ஒன்றுமில்லாத ஒன்றை, பெற்ற வெறும் தனியை — தன்னிடத்திற் பெற்றுள்ள தன்னந் தனிமையான நிலையை, தெளிய — அடியேன் தெளிவடைந்து உய்யுமாறு, முகம் ஆறு உடை தேசிகன்—ஆறு திருமுகங்களையுடைய குமாரகுருபரன்; விளம்பியவா — உபதேசித்தருளியது என்ன வியப்புடைத்து!

குறிப்பு:- ஒளி — ஞானப்பிரகாசம். இப்பிரகாசம் அக இருளை நீக்கும் இயல்புடைத்து. பூதரம்—மலை. அளி—அன்பு; கருணை. அநாதி—ஆதியில்லாதது. இது தன்னந்தனியாய் ஒளிரும் தனிநிலை (பரம்பொருள்). வெளியில் விளைந்த வெறும்பாழ்—நாம ரூபங்கள் ஒன்றுமில்லாத வெட்டவெளியில் விளைந்த வெறும் பாழ்; பொறிகளும் புலன்களும் கரணங்களும் ஜீவபோதமும் தோன்றாத இடம்.

குப்பாச வாழ்க்கையிற் கூத்தாடு மைவரிற் கொட்பபடைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணூருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே. (3)

பதவுரை

இருநான்கு வெற்பும்—எட்டு குலமலைகளும், அ பாதியாய் விழ—சரிபாதி களாய்ப் பிளந்து விழவும், மேரும் குலுங்க — மேருமலையும் நிலைகுலைந்து குலுங்கவும், விண்ணூரும் உய்ய — தேவர்கள் சிறைநீங்கிப் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய -- சப்பாணிகொட்டின, ஆறு இரண்டு கை உடை — பன்னிரண்டு திருக்கரங்களையுடைய, சண்முகனே—ஆறுமுகப் பெருமானே, கு பாச வாழ்க்கையுள் — மண்ணுலக மாய வாழ்க்கையில் நின்று இதுவே

நிலைபேறுடையதென்று, கூத்தாடும் ஐவரின் — களித்துக் கூத்தாடுகின்ற ஐம்புலன்களினால், கொட்பு அடைந்த—சுழற்சியையுற்ற, இ பாச நெஞ்சனை— இந்த பாசத்தோடு கூடிய மனத்தையுடைய அடியேனை, ஈடேற்றுவாய் — திருவருள் நெறிகாட்டி உய்யும்படிச் செய்வீர்.

குறிப்பு:- கு — அஞ்ஞானம் அல்லது அதனால் உண்டான உலகத்தைக் குறிக்கும். பாசம் — கட்டுப்படுத்துவது; உலகசுகமே நிலைபேறானது என்று கட்டுப்படுத்தும மாயவாழ்வு. கொட்பு — சுழற்சி. பாணி—கை. சப்பாணி — கைசேர்த்துக்கொட்டுதல்.

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மே!தெரி யாதொரு பூதர்க்குமே. (4)

பதவுரை

மனமே—ஓ மனமே! வேத—வேதங்களும், ஆகம — ஆகமங்களும் துதிக்கின்ற, சித்ர—அழகிய, வேல் ஆயுதன்—வேற்படையையுடைய குமாரக்கடவுளது, வெட்சி பூத்த — வெட்சி மலர்மாலை மலர்ந்துள்ளதும, தண்டை — தண்டையென்னும் கலனையுடையதுமாகிய, பாத அரவிந்தம்—தாமரை மலர் போன்ற திருவடிகளை, அரண் ஆக—நமக்குக் காவலாகக் கொண்டு, அல்லும் பகலும் இல்லா—மறப்பும் நினைப்பும் (கேவல சகலம்) அற்ற, சூதானது அற்ற வெளிக்கு—வஞ்சகமற்ற பரவெளியில், ஒளித்து—(உலக பசுபாச தொந்தரவுகட்கு அகப்படாமல்) மறைந்து, சும்மா இருக்க — மனச்சேட்டையற்ற பேசா அநுபூதியில் நிலைத்து நிற்கும்பொருட்டு, இனி போதாய் — சென்ற நாள் ஒழியினும் இனியாவது வருவாயாக, ஒரு பூதர்க்கும் தெரியாது — இந்த நன்னெறி ஒருசீவருக்கும் தெரியாத ஒன்றாம்.

குறிப்பு:- வெட்சிமலர் வேற்பெருமானுக்கு உகந்த மலர்களில் ஒன்று. பாதாரவிந்தம்—பாத+அரவிந்தம். அரவிந்தம்—தாமரை. அல்லும் பகலும் என்பது மறப்பு நினைப்பு. இதனைக் கேவலசகல மென்பர். சூதானதற்றவெளி (சூது+ஆனது+அற்ற+வெளி)—வஞ்சகமற்றவர் அடையும்பரவெளி. ஒளித்து— மறைந்து. மலமாயா கன்மங்கட்கும, புறப்பகை உட்பகையாகிய இருவகைப் பகைக்கும் ஒளித்து இருப்பது வெட்டவெளியாகிய பரவெளியில். பரவெளியை பாசஞானம் பசுஞானம் அணுகா. சும்மாவிருந்து சுகம்பெறுதல் அகண்ட பரவெளியில் பூதர்கள்—சீவர்கள் (உடம்பை நானென அபிமானிப்பவர்கள்).

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே. (5)

பதவுரை

சொன்ன — சொல்லப்பட்ட, கிரௌஞ்சகிரி — கிரவுஞ்ச மலையை, ஊடுருவ — நடுவே துளைத்துச் செல்லும்படி, தொளைத்த — தொளைசெய்த, வை வேல்—கூர்மை பொருந்திய வேற்படையைத் தாங்கிய, மன்ன—தலைவரே! கடம்பின் மலர் மாலை — கடப்பமரத்தில் மலர்கின்ற நறுமலர் மாலையைச் சூடிக்கொண்டுள்ள, மார்ப — திருமார்பையுடையவரே! மௌனத்தை உற்று—மௌன நிலையையடைந்து, நின்னை—தேவரீரை, உணர்ந்து உணர்ந்து—மெய்யறிவால் அறிந்து அறிந்து, எல்லாம்ஒருங்கிய — ஏனைய பாசகரணங்களும் பசுகரணங்களும் அடங்கிய, நிர்க்குணம் பூண்டு—முக்குணரகிதத்தை யடைந்து, என்னை மறந்து இருந்தேன் — ஜீவனாகிய என்னையும் மறந்து சிவோக பாவனையில் நிலைத்திருந்தேன், இவ்வுடம்பு இறந்தே விட்டது — இந்தச் சரீரவாசனையும் அழிந்தே விட்டது.

குறிப்பு:- கடப்பமலர் முருகக்கடவுளுக்கு மிகவும் உகந்தது. அதனாலேயே பெருமானுக்குக் கடம்பன் என்ற திருநாமமும் வழங்குமாறு காண்க. "மோன மென்பது ஞானவரம்பு" என்ற ஔவைப்பிராட்டியாரது திருவாக்கின்படி ஞானத்திற்கு எல்லையாக இருப்பது மௌனம். பேசா அநுபூதியைக் கொடுப்பது மோனநிலை. எல்லாமொருங்கிய—நாமரூபங்களும், கருவிகரணங்களும் கழன்ற நிலை. என்னைமறந்திருந்தேன்—ஜீவபோதங்கழன்ற இடம். சிவோகபாவனையால் ஜீவன் தன்னை மறந்து சிவமதனில் நிலைத்து நிற்கும் நிலை. இறந்தேவிட்ட திவ்வுடம்பே—உடம்பின் வாசனையற்ற நிலை.

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே. (6)

பதவுரை

நீல சிகண்டியில் — நீலநிறமுள்ள மயில்வாகனத்தின் மேல், ஏறும் பிரான்—ஏறுகின்ற பெருமானாகிய குமாரக் கடவுளும், கோல—அழகு மிக்க, குறத்தியுடன் — வள்ளியம்மையாருடன், எந்த நேரத்திலும் — அடியேன்

விரும்புகின்ற எந்த வேளையிலும், வருவான் — வந்து அருள்புரிபவரும், குரு நாதன்—அடியேனுடைய குருமூர்த்தியுமாகிய எம்பெருமான், சொன்ன — உபதேசித்த, சீலத்தை—மெய்ப்பொருளின் தன்மையை, மெள்ள — மெல்ல, தெளிந்து—தேர்ந்து, அறிவார் — தெரிந்து கொள்பவர்களாகிய, சிவயோகிகளே—சிவயோகிகள் மாத்திரமே, காலத்தை வென்று இருப்பார் — கால தத்துவத்தை வென்று அதனைக் கடந்து காலாதீதராக இருப்பார்கள்; வெறும் கர்மிகள்—வெறுமையாகிய கர்மயோகிகள், மரிப்பார்—காலத்துக்கு உட்பட்டு மாய்ந்து போவார்கள்.

குறிப்பு:- சிகண்டம்—மயிலின் தோகை. சிகண்டி தோகையை உடைய மயிலுக்கு ஆகுபெயராய் நிற்கிறது. கோலம்—அழகு. காலம்—காலதத்துவம்' ஞானநெறியை நாடாது வெறுங் கன்மத்தை அநுசரிப்பவர் காலத்திற் குட்பட்டு மடிவர் என்பது கருத்து.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே. (7)

பதவுரை

குமர ஈசர்—குமாரக்கடவுளுடைய, இருதாளும்—இரண்டு திருவடிகளும், சிலம்பும்—சிலம்புகளும், சதங்கையும்—சதங்கைகளும், தண்டையும்—தண்டைகளும், சண்முகமும்—ஆறு திரு முகங்களும், கடம்பும்—கடப்ப மலர்மாலையும், எனக்கு—அடியேனுக்கு, முன்னேவந்து—எதிரில் வந்தருளி, தோன்றிடின்—தோன்றுமானால், நாள் என் செயும்—கொடிய திதி நட்சத்திரங்கூடிய நாள்கள் அடியேனை என்ன செய்யக்கூடும்? வினைதான் என்செயும்—தீவினைதான் என்ன செய்யக்கூடும்? எனை நாடி வந்த கோள் என்செயும் — அடியேனைத் துன்புறுத்துவதற்குத் தேடிவந்த நவக்கிரகங்கள்தான் என்ன செய்யக்கூடும்? கொடும் கூற்று என்செயும்—கொடிய இயமனால்தான் என்ன செய்ய முடியும்?

குறிப்பு:- வினை — ஊழ்வினை. ஊழ்வினையும் தனது ஆற்றல் இழந்து மெய்யடியார்களைத் துன்புறுத்தாது நீங்கும். ''கூறுமடியார்கள் வினைதீர்க்கு முகமொன்றே'' என்பது உற்றுணரப்பாலது

அராப்புனே வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்தவன்பாற்,
குராப்புனே தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடியவைவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே. (8)

பதவுரை

அரா புனே வேணியன் — அரவத்தை அணிந்த சடை முடியையுடைய சிவபெருமானுடைய, சேய் அருள்வேண்டும் — திருக்குமாரராகிய முருகக் கடவுளின் திருவருள் வேண்டும்; அவிழ்ந்த அன்பால் — மலர்ந்து நெகிழ்ந்த அன்பினால், குரா புனே—குராமலர் மாலையைப் பூண்டுள்ளதும், தண்டை — தண்டையை யணிந்துள்ளதும் ஆகிய, அம் தாள் — அழகிய திருவடியை. தொழல் வேண்டும் — வணங்க வேண்டும்; கொடிய ஐவர் பராக்கறல் வேண்டும்—கொடிய புலன்களாகிய ஐவர்களின் வேடிக்கை ஒழிய வேண்டும்; மனமும் பதைப்பு அறல் வேண்டும்—மனமும் துடிப்பு நீங்குதல் வேண்டும்; என்றால் — இவ்வாறு இவைகளை எய்துவோமானால்; இராப்பகல் அற்ற இடத்தே—இரவு பகல் இல்லாத இடத்தில், இருக்கை எளிது — அசைவற்றிருத்தல் எளிதாகும்; அல்லவே—அல்லாதவர்க்கு எளிதாகமாட்டாது.

குறிப்பு:- இப்பாடல் மிகவுஞ் சிறந்த அநுபவத்தைக் கூறுகிறது. கேவல சகலம் என்கின்ற நினைப்பு மறப்பு அற்று இருக்கும் நிலையே ஒப்புயர்வற்ற நிலை. அதிலே பேரின்ப ஊற்றுண்டு. அதை அநுபவிப்பவர்கள் வேறு ஒன்றையும் பொருளாகக் கருதமாட்டார்கள். பராக்கு — செய்யுந்தொழிலை விட்டு வேறு ஒன்றில் புலன்கள் செல்வது. இறைவனை அன்பினால் குழைந்து வழிபடுதற்குப் பொறிபுலன்களின் ஒருமைப்பாடு வேண்டும். அங்ஙனம் நின்றபோது அன்பு தலைப்படும். பொறிபுலன்கள் ஒருமுகப்படும் போது மனத்தின் பதைப்பும் நீங்குகிறது. மனம் அடங்காமையே மாயை. இராப் பகலற்ற விடம் மோனநிலை. இரவு — கேவலம் (மறப்பு). பகல் — சகலம் (நினைப்பு).

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே. (9)

பதவுரை

அறுமுகவா — ஆறுதிருமுகங்களையுடையவரே! போக்கும் — போதலும், வரவும் — வருதலும், இரவும் — இராக்காலமும், பகலும் — பகற்காலமும், புறம்பும்—வெளிப்புறமும், உள்ளும்—உள்ளிடமும், வாக்கும்—சொல்லும், வடிவும்—உருவமும்; முடிவும்—இறுதியும், இல்லாதது ஒன்று—ஒன்றுமில்லாததாகிய ஒரு பொருள்; வந்து வந்து—அடியேனிடம் வந்துவந்து, தாக்கும்—என்னைப் பொருந்தாநிற்கும்; தானே மனோலயம் தரும் — தானாகவே அடியேனுக்கு மனவொடுக்கத்தைத் தருகின்றது; என்னை தன் வசத்தே ஆக்கும்—அடியேனை தன்னுடைய வயமாக ஆக்கிக் கொள்ளுகின்றது. இந்த ஆனந்தம் — இந்த இணையற்ற சுகத்தை இத்தன்மைத்தென்று, சொல்ல ஒணாது — கூறுதற்கு முடியாதது ஆகும்.

குறிப்பு:- போக்கும் வரவும் — இறை போக்கு வரவற்றது. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பூரணம். இரவும் பகலும்—இரவுபகலற்றது இறை. கேவல சகலமில்லாதது. புறம்பும் உள்ளும்—உள்ளும் புறம்புமாக இருப்பதனால் இறை உள்ளும் புறம்பும் அற்றதாக விளங்குகிறது. இறைவனது திருவருள் மிகுதியாகவந்து பொருந்துவதினால் மனோலயந்தானே உண்டாகிறது. "மனோலயமானது என்னைத் தன்வசமாக்குகின்றது" என்றனர். உலகவசமாயிருந்தமனம் பேரருள் மயமாய் விளங்குகின்றது. மனோலயமுற்றுத் தன்வசமாகி நின்றபோது உண்டாகிய பேரானந்தத்தை இத்தன்மைத்தென்று சொல்ல முடியாது.

யான்று னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்றுது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றுன் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினுற்
சான்றுரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே. (10)

பதவுரை

தொல்லை பெரு நிலம்—பழமையாகிய பெரிய பூமியை, சூகரம் ஆய்—வராகவுருவங் கொண்டு, கீன்றுன்—பிளந்தவனாகிய திருமாலுக்கு, மருகன்—மருகரும், முருகன்—முருகவேள், க்ருபாகரன் — கருணைக்கு உறைவிடமான வருமாகிய கந்தப்பெருமானது, கேள்வியினால் — உபதேசக் கேள்வியினால், சான்று ஆரும் அற்ற—சாட்சியாகிய நிறைவுநழுவிய, தனி வெளிக்கே—ஒப்பற்ற பர வெளியிலே, வந்து சந்திப்பது — அருள்நெறியில் வந்து கூடுவது, யான் தான்—யான் தான், என்னும் சொல் இரண்டும் கெட்டால் அன்றி—என்னும் இரண்டு சொற்களும் கெட்டால் அல்லது, யாவருக்கும் சத்தியம் தோன்றுது எவர்களுக்கும் உண்மை நிலை விளங்காது.

குறிப்பு:- சூகரம்—பன்றி (வராகம்). ஆகரம்—உறைவிடம் (இருப்பிடம்). கிருபாகரன் — கருணைக்கு இருப்பிடமாய் உள்ளவன். சான்று — சாட்சி. அஃதாவது ஒன்றிலும் சம்பந்தப்படாது அறியும் உணர்வு. சாட்சியால் அறியப்படுவது சாட்சியம். சாட்சியும் சாட்சியமும் நழுவாது நழுவி நிற்கும் நிலை தனிவெளியெனப்படும். இதுவே மகாமௌனம். யான் ஆகிய ஆன்மா வேறு தான் ஆகிய பரவெளி வேறு என்ற துவிதபாவம் போய் அத்துவிதமாகக் காணும் அநுபவத்தைப்பற்றி இதில் கூறியருளுகின்றனர்.

"யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே"

என்ற அநுபூதியும் இக்கருத்துப்பற்றி யெழுந்ததே.

பதவுரை

சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே. (11)

கந்தன் நன்னூல் — கந்தப்பெருமானது பெருமையைக் கூறும் நல்ல நூலாகிய, அலங்கார—கந்தரலங்காரமாகிய இத் திருமுறையில், நூற்றுள் ஒரு கவிதான் — நூறு திருப்பாடல்களுள் ஒரு திருப்பாடலையேனும், கற்று அறிந்தவர்—படித்து அதன் மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள், சலம் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார் — கோபத்தைக் கொள்கின்ற அரசர்களுக்கும் அஞ்சமாட்டார்கள், யமன் சண்டைக்கு அஞ்சார்—இயமனுடைய போருக்கும் அஞ்சமாட்டார்கள், துலங்கா நரகக்குழி அணுகார்—இருண்ட நரகக்குழியை அடையமாட்டார்கள், துட்டநோய் அணுகார் — கொடிய நோய்களால் துன்பமுறமாட்டார்கள், புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்—புலி கரடி யானை முதலிய கொடிய விலங்கினங்களுக்கும், கலங்கார்—மனங் கலங்கமாட்டார்கள்.

குறிப்பு:- சலம்—கோபம். அரசர்கட்குக் கோபம் விரைவில் வரும். துலங்கா நரகம்—இருள்மிக்க நரகம். துட்ட நோய்— கொடிய நோய், நோய் மூவகைப்படும். (1) உடல் நோய். (2) உளநோய். (3) உயிர் நோய். உடல் நோய்—தொழுநோய், க்ஷய நோய், இருமல், காசம் முதலியன. உளநோய் — காமநோய், ஆசைநோய், கோபநோய் முதலியன. உயிர்நோய் — பிறவிநோய். இந்த நோய்கள் யாவும் கந்தரலங்காரம் ஓதி உணர்வார்க்கு உண்டாகா.

உ
சிவமயம்

அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த கந்தர் அநுபூதி என்னும் நூலிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாக்கள்.

விநாயக வணக்கம்.

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

பதவுரை

தஞ்சத்து அருள் — தன்னைப் புகலிடமாக அடைந்தவரது எளிமைக்கு இரங்கி அவர் தமக்குக் கருணை புரிகின்ற, சண்முகனுக்கு—அறுமுகக்கடவுளுக்கு, புனை — தரிக்கும், இயல் சேர் — இலக்கண அமைதி சேர்ந்த, செஞ் சொல் மாலை—செம்மையான சொற்களாலாய கந்தரநுபூதி யென்னும் பாமாலையானது, சிறந்திடவே—(உலகத்தில்) சிறந்து விளங்க, நெஞ்சக்கன கல்லும்—செஞ்சமாகிய கனத்தகல்லும், நெகிழ்ந்து உருக — நெகிழ்ந்து உருகும்படி, பஞ்சக்கரவானை— ஐந்து திருக்கரங்களையுடைய யானைமுகப்பிள்ளையாரது, பதம்—பாதங்களை, பணிவாம் (யாம்) வணங்குவாம்.

விசேஷவுரை

இந்த நூலாசிரியராகிய அருணகிரிநாத சுவாமிகள் தாமியற்ற எடுத்துக் கொண்ட இந்நூல் இடையூறின்றி யினிது முடிதற் பொருட்டும், தம்மிடத்துப் பிறர்க்கு நாஸ்திகபுத்தி யுண்டாகாதிருத்தற் பொருட்டும் 'நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக, பஞ்சக் கரவானைபதம் பணிவாம்' என மங்கலம் கூறினர்.

நூன்முகத்துக் கூறப்படும் மங்கலம் வஸ்து நிர்த்தேசம் (பொருளியல் புரைத்தல்), நமஸ்காரம் (வணக்கம்), ஆசீர்வாதம் (வாழ்த்து) என மூவகைத்தாம்; அவற்றுள் இது நமஸ்காரரூப (வணக்கவடிவ) மங்கலமாம்.

ஏற்புடைக்கடவுள் வணக்கம், வழிபடுகடவுள் வணக்கம் என நமஸ்காரரூப மங்கலம் இரு வகைத்தாம்; அவற்றுள், இது வழிபடு கடவுள் வணக்கமாம்.

"தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு
மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும்."

என்பது சூத்திரமாகலின், இத்தற்சிறப்புப் பாயிரச் செய்யுளுள்,

"செஞ்சொற்புனைமாலை" என்பது செயப்படுபொருளாம்;

பஞ்சக் கரவானைபதம் பணிவாம்' என்பது தெய்வ வணக்கமாம்.

'கனகல்லும்' என்ற வும்மை இழிவு சிறப்பும்மையாம்.

தஞ்சம் எளிமையாம்; என்னை? "தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே" என்பது சூத்திரமாகலின்.

'பணிவாம்' என்பது தனித் தன்மைப் பன்மை வினைமுற்று, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று என்னு மிரண்டனுள் தனித்தன்மைப் பன்மை வினைமுற்றும்.

'பஞ்சக்கரவானை' என்பதற்குப், 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழிலையுஞ் செய்யும் விநாயகக்கடவுள்' என்பது மற்றொரு பொருளாம்.

செய்யுள் செய்தற்குரிய சொற்கள் "இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொலென், றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே" என்று தொல்காப்பியங் கூறுமாறு இலக்கண வழுவின் றியனவாக விருத்தல் வேண்டு மென்ப துணர்த்த இயல் சேர், செஞ்சொற் புனைமாலை' என்று கூறப்பட்ட தென்க.

'கந்தரநுபூதி' என்பதன் பொருள் 'கந்தரை ஆத்மவடிவமாக அறியும் அறிவை யுண்டாக்கும் நூல்' என்பதாம்.

'அனுபவம்,' அநுபூதி 'மெய்யறிவு' என்பன ஒரு பொருட்சொற்களாம்.

எனக்கு வேண்டும் பணி யிதுவெனல்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே (1)

பதவுரை

தேடு — (பகைவர்களைத்) தேடிக்கொல்லும், மா — பெரிய, கயமுகனை — யானைமுகாசுரனை, செருவில் சாடும்—போர்க்களத்தில் கொன்ற, தனி — ஒப்பற்ற, யானை — விநாயகக்கடவுளினது, சகோதரனே! — தம்பியே! (உன்வாகனமாகிய) ஆடும் பரி என — (தன்) கலாபத்தை விரித்து ஆடும் மயிலென்றும், வேல் என — (படையாகிய) வேலென்றும், அணி சேவல் என — அழகிய (கொடியாகிய) சேவலென்றும், பாடும் பணியே — (அவற்றைப் புகழ்ந்து) பாடும்படியான தொழிலையே, பணியாக—தொழிலாக, அருள்வாய்—(எனக்குக்) கருணை செய்யக் கடவாய்.

விசேஷவுரை

இறைவனே! உன் வாகனமாயுள்ள மயிலேயும், படையாயுள்ள வேலேயும், கொடியாயுள்ள சேவலேயும் புகழ்ந்து பாடுவார்க்கு நீ விரைந்து வந்து அருள்செய்தலே யான் அறிந்திருக்கின்றேன்; அதனுல், அவற்றைப்புகழ்ந்து பாடும்பணியே யெனக்குவேண்டும்; பிறிதொருபணியும் வேண்டாமென்பார்

'ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்' என்றனர்.

பரி—பரிப்பது, அஃதாவது சுமப்பதாம்; அஃதிங்கு மயிலே யுணர்த்தி நின்றது. என என்னும் இடைச்சொல் பரியென்பதனேடும் வேலென்பதனேடும் சென்றியைந்து நின்றது.

சீவன்முத்தி பெறப் பிரார்த்தித்தல்.

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலேயோ
எல்லா மறவென் னேயிழந் தநலஞ்
சொல்லாய் முருகா! சுரபூ பதியே. (2)

பதவுரை

எல்லாம் அற — பந்த மனேத்தும் ஒழிய (அதனுல்), என்னே இழந்த — என்னே (தற்போதத்தை) இழந்துள்ள, நலம்—சிவன்முத்தி நிலேயை (யான் அடைய), முருகா! — (எப்போதும்) இளமையாகவே இருப்பவனே! சுர பூ பதியே!—தேவருலகத்திற்கு அதிபதியே! (தேவ சேனுபதியே!), சொல்லாய்—(எனக்குச்) சொல்வாயாக. உல்லாசம்—ஆநந்தத்தைத் தருவதும், நிராகுலம்—வருத்த மில்லாமையைச் செய்வதுமான, யோக விதம்—யோகத்தின் வேறுபாடு களேப்பற்றி, சல்லாபம் — (அன்பர்களோடு கூடிச்) சம்பாஷணே செய்கின்ற, விநோதனும்—விளேயாட்டினே யுடையவனும், நீ அலேயோ—நீ யல்லவோ?

விசேஷவுரை

இறைவனே! நீ யோக குரு வென்பதையும் யானறிந்திருக்கின்றேன்; அதனுல், எனக்கு யோகாப்பியாசஞ் செய்தலே யுணர்த்துதல் வாயிலாக ஞானுேபதேசஞ் செய்து அதனுல் பந்தமின்றிப் பரமாநந்த வடிவமாக விளங்கும் சிவன்முத்தி நிலேயை யருளல் வேண்டுமென்று கூறினு ரென்பது இங்குணர்தற்பாலதாம். சல்லாபம்—சம்பாஷணே (நல்லுரை).

சிந்தாகுல மொழியப் பிரார்த்தித்தல்.

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா! கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநா யகனே! (3)

பதவுரை

கந்தா! — கந்தசுவாமியே! கதிர் வேலவனே! — பிரகாசமுடைய வேற் படையையுடையவனே! உமையாள் மைந்தா!—உமாதேவியாரது திருக்குமாரனே! குமரா!—குமரனே! மறை நாயகனே!—வேதத்திற்குத் தலைவனே! என் தாயும்—எனது அன்னையும், எனக்கு அருள்—எனக்குக்கருணை செய்கின்ற, தந்தையும்—பிதாவுமாக (உள்ள). நீ—தேவரீர், சிந்தாகுலம் ஆனவை—மனக் கிலேசத்திற்கு ஏதுவாய காமம் வெகுளி மயக்கங்கள், தீர்த்து—ஒழிய, என்னை ஆள்—அடியேனை (அடிமைகொண்டு) ஆளவேண்டும்.

விசேஷவுரை

அடியேனுக்குத் தாயும் தந்தையுமா யுள்ள இறைவனே! நீ என் மனக்கிலேசத்திற் கேதுவாய காமம் வெகுளி மயக்கங்கள் ஒழிய என்னை அடிமை கொண்டாற்றுன் நான் கடைத்தேறுதற் குரியவனுவேன் என்று றென்பதாம்.

எதுகை நோக்கி என்ருய் என்பது 'எந்தாய்' எனத் திரிந்து நின்றது.

'தீர்த்து' என்பது தீர என்பதன் விகாரமாம்.

''காமம் வெகுளி மயக்க மிவைமூன் றன்
நாமங் கெடக்கெடு நோய்''

என்று தமிழ்மறை கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

மகளிர் நேசத்தை வெல்லப் பிரார்த்தித்தல்.

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே!
கங்கா நதிபா ல!க்ருபா கரனே! (4)

பதவுரை

சங்க்ராமம் — போர் புரிதற்குரிய, சிகா வல! — மயில்வாகனத்தை ஏறி நடத்துவதில் வல்லவனே! சண்முகனே! — ஆறு திருமுகங்களை யுடையவனே! கங்காநதி பால! — கங்காநதியின் புத்திரனே (காங்கேயனே)! க்ருபாகரனே!— கிருபைக் கிருப்பிடமானவனே! (யான்), சிங்காரம் — (ஆடல், பாடல், அழகு, அணி, ஆடை, அபிநயம் என்பனவற்றால்) அலங்கார முடையவராயுள்ள, மடந்தையர்—விலைமாதரது, தீ நெறி போய்—தீவினை புரியும் மார்க்கத்திலே சென்று, மங்காமல்—கெடாதபடி (நீ), எனக்கு — (அடியேனாகிய) எனக்கு, வரம் தருவாய்—(உபதேசமாகிய) வரத்தைக் கொடுத்தருளுவாய்.

விசேஷவுரை

இறைவனே! நீ குருவடிவமாக எழுந்தருளிவந்து, யான் விலைமகளிர் கூறும் கொடுநெறியிலே சென்று தீவினை புரிவதை ஒழித்தற்குரியதோர் உபதேசத்தை எனக்கருள்செய்தல் வேண்டும் என்று கூறினா ரென்பதாம்.

காமத்தைக் கடத்தல் எவர்க்கும் எளிதாயதன் றென்பதைக் குறிப்பிக்க மங்காமல் என்றார். இதனை ஞானவாசிட்டம் பின்வருமாறு கூறுவதாலும் அறிக.

"பைந்தொடியா ராசைநோய் கெம்பீர மனிதரையும் பதுமந்தன்னை
முந்திரவிக் கதிர்போலு மிளிர்விக்குங் கனவிடியின் முனைகூர்வாளும்
வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய மனவேட்கை மேருவொத்தோர்
சுந்தரஞா னியர்தீரர் சூரரையெல் லாமிமைப்பிற் றுரும்புசெய்யும்."

குறிப்பு:- பைந்தொடியார் ஆசைநோய் அந்தர்முக நாட்டமுடையவரையும் பகிர்முக நாட்டமுடையவராக்குமென்பார், கெம்பீர மனிதரையும் மிளிர்விக்கும் என்றும், அதற்கு மிஞ்சின வலிமை இல்லையென்பார், எல்லாம் இமைப்பில் துரும்பு செய்யுமென்றுங் கூறினர்.

மயக்கமொழியப் பிரார்த்தித்தல்.

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர!ஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே! (5)

பதவுரை

நதி புத்திர!—கங்கா புத்திரனே! ஞான சுக அதிப!—அறிவாநந்த வடிவ இறைவனே! அ திதி புத்திரர்—அந்தத் திதியின் மைந்தரது (தைத்தியரது) வீறுஅடு—செருக்கை அழித்த, சேவகனே!—வீரனே! மதி கெட்டு — (விவேக மின்மையால்) புத்திகெட்டு (அதனால்), மயங்கி — விபரீத புத்தியையடைந்து, அற வாடி – மிகவும் வாட்டமுற்று, கதி அறக்கெட்டு—நல்ல நெறியில் ஒழுகுவது மிகவுமொழிந்து, அவமே — வீணே (யான்), கெடக் கடவேனோ — கெடுதற் குரியவனாவேனோ? (அங்ஙனங் கெடாதபடி எனக்குத் தேவரீர் விரைந்து வந்து அருள் செய்தல் வேண்டும்.)

விசேஷவுரை

இறைவனே! நீ தானவரை வென்று வானவரைக் காத்தாற் போல எனது விபரீத புத்தியை யொழித்து என்னைக் காத்தருளல் வேண்டும் என்று றென்பதாம்.

திதி புத்திரர்—இங்கு சூரபதுமனைத் தலைவனாகக் கொண்ட அரக்கராவர்.

அகரச்சுட்டுப் பிரசித்தப் பொருளில் வந்தது.

வினாப் பொருளில் வந்த ஓகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

அருளைப்பெறப் பிரார்த்தித்தல்.

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவிநோ த!மனோ
தீதா! சுரலோ கசிகா மணியே! (6)

பதவுரை

வேத ஆகமம்—வேதாகமங்களின், ஞான விநோத! — (அர்த்த) ஞானத்தை (அடியார்க்கு உபதேசிப்பதையே) விளையாட்டாக உடையவனே, மனோதீதா! — மனதிற்கு எட்டாதவனே! சுரலோக சிகாமணியே! — சுவர்க்கலோகத்துள்ளார்க்கு முடிமணிபோன்று விளங்குகின்றவனே! ஆதாரம் இலேன் — (உனது திருவடியைப்பற்றுதல்ன்றி வேறு) ஆதார மில்லாதவனாயுள்ள யான், அருளைப் பெற—(உனது) கருணையைப் பெறுதற் பொருட்டு, நீ ஒரு சற்றும் நினைந்திலையே — தேவரீர் ஒரு சிறிதும் எண்ணாதிருக்கின்றீரே (இது தகுதியுடையதாமோ?).

விசேஷவுரை

உன் திருவடியை யன்றி வேறு ஆதார மில்லாதிருக்கும் எனக்கு நீ கருணை செய்யாதிருப்பது உனக்குத் தகுதியுடையதாகாது எனக் கூறினு ரென்பதாம்.

வேதாகமம்—நான்கு வேதங்களும் இருபத்தெட்டுச் சிவாகமங்களுமாம். தான்—அசைநிலை, ஏகாரம் வினைப்பொருட்கண் வந்தது.

மனதிற் கெட்டாதவனென்பது வாக்கிற்கு மெட்டாதவனென்பதையும் இனம்பற்றி யுணர்த்தி நின்றது.

எப்பொழுதும் உன் திருவடித் தியானம் செய்யத் திருவருள் செய்தல் வேண்டுமெனப் பிரார்த்தித்தல்.

இரவும் பகலுந் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசின் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே! (7)

பதவுரை

கரவு உண்டு—வஞ்சகத்தை யுட்கொண்டு, எழு — (போர் செய்தற் பொருட்டுக் கோபத்தோடு) எழுந்து வந்த, சூர் களைய — சூரபதுமனை அழிக்க (அவன்மீது), கதிர் போல்—சூரியனைப்போல, சுடர் விரவும் வேல் விடு—ஒளி பொருந்திய வேற்படையை யேவிய, சேவகனே! — வீரனே! இரு தாள்—(உனது) இரண்டு திருவடிகளையும், இரவும் பகலும்—இரவிலும் பகலிலும் துதி செய்துபரவும் — தோத்திரஞ் செய்து வணங்கும், பரிசே — தொழிலையே, பரிசு—தொழிலாக, இன்று—இப்போது, அருள்வாய்—(எனக்கு) அருள்புரிவாய்.

விசேஷவுரை

சூரபதுமனை அழிக்க அவன்மீது சுடர்வேல் விட்ட சேவகனே! யான் இரவும் பகலும் உனது திருவடி இரண்டையும் துதித்து வணங்கும் பாக்கியத் தைப்பெற இன்றே யதனை யெனக்கருள் செய்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தா ரென்பதாம். அருள்செய்தல்—தருதல்.

திருவடித் தரிசனம் வேண்டல்.

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா! முருகா! மயில்வா கனனே!
விரதா சுரசூ ரவிபா டணனே. (8)

பதவுரை

வரதா! — (அன்பர்க்கு அவர் விரும்பிய) வரத்தைக் கொடுப்பவனே! முருகா!—முருகனே! மயில் வாகனனே!—மயில் வாகனத்தை யுடையவனே! விரதா!—(அடியவரைக் காக்கும்) விரத முடையவனே! அசுர சூர்—அசுரனுகிய சூரபதுமனை, அவி — அழித்த, பாடணனே! — வேற்படையையுடையவனே! கருதாத—(யாதாவதொன்றனை) நினைத்தல் இல்லாத, மறவாத — (அதனை) மறத்த லில்லாத, நெறி காண — நிர்விகற்ப நிஷ்டையை (யான்) அறிந் தடைய, எனக்கு—(அடியேனுகிய) எனக்கு, இரு தாள் வனசம் தர—(உனது) இரண்டு திருவடித் தாமரைமலர்களையும் கொடுக்க, என்று — எப்போது, இசைவாய்—திருவுள்ளங்கொள்வாய்.

விசேஷவுரை

யான் நிர்விகற்ப நிஷ்டையைப் பெறுதற் கேதுவாகிய திருவடித் தியானஞ் செய்ய விரும்புகின்றேனுதலின், எனக்குத் திருவடித் தியானஞ் செய்யும் வகையை இறைவனே! நீ உபதேசித்தல் வேண்டு மென்று கூறினு ரென்பதாம்.

"நினைப்பு மறப்பறுத்து நீயறலை நீக்கா
துனைக்கரைய நில்லங்ங னங்ங—னெனக்கதற்றல்
விப்பிரட்ட மந்திரட்டம் வேலையிலே போட்டசுரை
செப்படித்தன் ஞானச் சிறை"

என்று ஒழிவிலொடுக்கம் கூறுவ திங்குணர்தற்பாலதாம்.

நினைத்தலும் மறத்தலு மில்லாத நெறி நிர்விகற்ப நிஷ்டையாம்;

'விரதாசுர' என்பதை விரதா+அசுர எனப் பிரியாது, விரதாசுர என்று கொண்டு, 'விரதா—விரதமுடையவனே! சுர—தேவனே' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். தாள்—பண்பாகுபெயர்.

தத்துவாதீத நிலையைப் பெறப் பிரார்த்தித்தல்.

ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்
பேறு வடியேன் பெறுமா றுளதோ
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு வுலகங் குளிர்வித் தவனே. (9)

பதவுரை

சீறு வரு சூர் — (போர் செய்யக்) கோபித்து வந்த சூரபதுமனை, சிதைவித்த—(வேற்படையால்) அழியச்செய்து, இமையோர் — தேவர்கள், கூறுக — உரிமையாகக் (கொண்டு), உலகம் — (சுவர்க்க) லோகத்தாரை, குளிர்வித்தவனே! — மகிழச் செய்தவனே! ஆறு ஆறையும் — (தத்துவம்) முப்பத்தாறையும், நீத்து—(இது யானன்று, இது யானன்று எனக்)கழித்து, அதன் மேல் நிலையை—அவற்றிற்கு மேலாயுள்ள மோட்ச நிலையை, பேறு ஆக—பயனாக, அடியேன்—அடியவனாகிய யான், பெறும் ஆறு—பெறும் வகை, உளதோ (எஞ்ஞான்று எனக்கு) உண்டாகுமோ? (அஃதுண்டாகுமா றெனக்கு விரைந்து வந்தருள் செய்தல்வேண்டும்.)

விசேஷவுரை

இமையோரது துன்பத்தை யொழித்து அவர்க் கின்பத்தை உண்டாக்கிய இறைவனே! உன் அடியவனாகிய யான் தத்துவாதீத நிலையைப் பெற்று வாழ்வதெப்போதோ? அந் நிலைமையை யான் பெற்று வாழுமாறு எனக்கு நீ விரைந்து வந்து அருள் செய்தல்வேண்டும் என்று றென்பதாம்.

'ஆறுறு' என்பது தொகைக்குறிப்புச்சொல்.
'அதன்' என்பது இங்கு தொகுதி யொருமைப் பெயராம்.
'கூறு' என்பன பேறுக, கூறுக என்பதன் விகாரமாம்.

ஆறாறு தத்துவத் தப்புறத் தப்பாற்
கூறு வுபதேசங் கூறிற் சிவபரம்
வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்
பேறாக வாநந்தம் பேணும் பெருகவே.

என்று திருமந்திரம் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

அபேத நிலையையறிய அருள்செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தல்.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. (10)

பதவுரை

செறிவு ஒன்று — (தேகாதிப் பிரபஞ்சத்தோடு) பொருந்துவதாகிய (யான் எனதென்னும்) அபிமானம், அற வந்து—ஒழியுமாறு (கருதி) வந்து, இருள்—(அவ் வபிமானத்திற்குக் காரணமாகிய) அஞ்ஞான இருள், சிதைய— கெடும்படி (தம் சித்தத்தில் ஞான விளக்கேற்றி), வெறி — (அதனுல் அவ் வஞ்ஞான இருளாகிய) மயக்கத்தை, வென்றவரோடு—கெடுத்த ஞானவான் களோடேயே, உறும் வேலவனே! — கூடியுள்ள வேற்படையையுடைய இறைவனே! (நீ), அறிவு ஒன்று அற—(தானல்லாத உடம்பில்) யானென்னும் தற்போதம் சிறிதும் இல்லாது ஒழியும்படி, நின்று — ஒப்பற்ற பரவெளியில் நிலைத்து நின்று, அறிவார்—(தமது நிச வடிவத்தை உள்ளவாறு) அறிந்தவரது, அறிவில் — அறிவின்கண், பிறிவு ஒன்று அற — அந்நியமென்பது சிறிதும் இல்லாது ஒழிய, நின்ற — (ஏக வடிவமாக) இருக்கின்ற, பிரான் அலையோ — பிரபு அல்லவோ? (அதனுல் விரைந்து வந்து அடியேனுக்கு அந்நிலையினை உபதேசித்தருளல் வேண்டும்)

விசேஷவுரை.

ஆத்மாவை (தன்னை) யறிந்து அதனுல் அஞ்ஞான மயக்கமின்றி உள்ள ஞானிகளோடு கூடியுள்ள இறைவனே! நீ தத்துவ ஞானிகளது மெய்யறிவின் கண் அபேதமாக விளங்குகின்ற நிலையை எனக்கு விரைந்து வந்து அருள் செய்தல்வேண்டும் என்று ரென்பதாம்.

பிரான்—பிரபு என்பதன் விகாரம். ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

"சந்தி யானைச் சமாதிசெய் வார்தங்கள்
புந்தி யானைப்புத் தேளிர் தொழப்படும்
அந்தி யானையா மாத்தூ ரழகனைச்
சிந்தி யாதவர் தீவினை யாளரே."

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருப்ப திங்குணர்தற்பாலதாம்.

அனுபவநிலை கூறல்.

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லை!நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. (11)

பதவுரை

தனி வேல் — ஒப்பற்ற வேற்படையையுடைய, ஐ! — இறைவனே! (நீ) குறியை—(வாக்கிறந்த பூரணமாய், மறைக்கப்பாலாய், எல்லாமாய் அல்லதுமாய் இருக்கின்ற)பரவெளியை, குறியாது குறித்து—சுட்டிப்பாராது பார்த்து, அறியும்நெறியை — (உள்ளபடி) அறியும் சாதனத்தை, நிகழ்த்திடலும் — (எனக்கு) உபதேசித்த அளவிலே, உலகோடு செறிவு அற்றும்—உலகத்தோடு சம்பந்த முறுதல் இல்லாதும், உரை அற்றும்—(இன்ன தன்மையதென்று) கூறுதற்குஇயையாதும், சிந்தையும் அற்றும்—(இன்ன தன்மையதென்று)நினைப்பதற்கும் பொருந்தாதும், அறிவு அற்றும்—(யாதாவதொன்றைக் குறிப்பிட்டு) அறிவதில்லாதும், அறியாமையும் அற்றும்—(அதனை) அறியாமையும் இல்லாதும் (உள்ள), அது — அப்பரம்பொருள் (எனக்குச் சந்தேக விபரீதமின்றி விளங்கியது.)

விசேஷவுரை.

இறைவனே! எனக்கு நீ பரம்பொருளை அறியும் சாதனத்தை உபதேசித்த அளவிலே அப்பரம்பொருள் எனக்குச் சந்தேக விபரீதமின்றி விளங்கியது என்று கூறினா ரென்பதாம்.

'அற்று' என்பது உரை யென்பதனோடும் இயைந்து நின்றது.
'உலகு' என்பது இங்கு உயர்திணைப்பொருளும் அஃறிணைப்பொருளுமாம்.
ஏ—அசை, எண்ணும்மைகள் தொக்குநின்றன.

''கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெ னைக்கலந் தாண்டலுமே
அயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயன்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ''

என்று மணிவாசகப் பெருமான் அருளிச்செய்திருப்பதிங் குணர்தற்பாலதாம்.

மோன நிலை பெறுவ தரிதெனல்.

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. (12)

பதவுரை

செம்மான் மகளை—செம்மையாகிய மானினது மகளாகிய வள்ளிநாச்சியாரை, திருடும் திருடன்—களவு செய்த கள்வன், பெம்மான்—பெருமையுடையவன், முருகன்—இளமையுடையவன், பிறவான்—பிறப்பில்லாதவன், இறவான்—இறப்பில்லாதவன் (ஜனனமரண மற்றவன் சற்குருநாதனுக எழுந்தருளிவந்து), சொல் அற—வாக்கின் வியாபாரம் ஒழிய, சும்மா இரு — மௌனமாயிருக்கக் கடவாய், என்றலுமே — என்று (எனக்கு) உபதேசித்த அளவிலே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலன்—தேகாதிப் பிரபஞ்சம் சிறிதும் இல்லாது நழுவி விட்டது; இது என்ன வியப்புடைத்து.

விசேஷவுரை.

தத்துவ உபதேசம் பெற்ருலும் மௌனநிலையைப் பெறும்வழியை அறிதல் அரிது என்று கூறினுரென்பதாம்.

சும்மாவிருத்தலாவது விழித்துக்கொண்டிருக்கும்போதே மனேவியாபாரம் அற்று இருத்தலாம். இந்த நிலை நனவிற் சுகசமாதி யென்றும், நடுவுநிலை யென்றும் கூறப்படும்.

தற்பர அநுபவம் கூறுவதரிதெனல்.

ஆனு வமுதே யயில்வே லரசே!
ஞானு கரனே! நவிலத் தகுமோ
யானு கியவென் னைவிழுங் கிவெறுந்
தானுய் நிலைநின் றதுதற் பரமே. (13)

பதவுரை

யானுகிய என்னை—(தானல்லாத உடம்பை) யானென்று கருதுகின்றவனுகிய என்னை, விழுங்கி—(தன்னேடு அபேதமாக) உட்கொண்டு, வெறும் தான் ஆய்—முற்றும் தானுகவே, நிலைநின்றது—நிலைபெற்றிருப்பதாகிய, தற்பரம்—அந்தப்பரம்பொரு ளனுபவத்தை, ஆனு — கெடாத, அமுதே — அமுதம்

போன்றவனே! அயில்—கூர்மையாகிய, வேல் அரசே!—வேற்படையையுடைய இறைவனே! ஞான ஆகரனே! — ஞான சொரூபனே! நவிலத் தகுமோ—(இஃது இத்தன்மையதென்று யான் குறிப்பிட்டுச்) சொல்லுதல் கூடுமோ? (கூடாது).

விசேஷவுரை.

தேவரீர் குருமூர்த்தமாக எழுந்தருளிவந்து அடியேனுக்குத் தத்துவோபதேசம் செய்து அதனால் யான் சிவமாக விளங்குமாறு செய்த சுவானுபவ நிலையானது இன்னதன்மையதென்று குறிப்பிட்டுக் கூறுவதற்கு முடியாததாகவிருக்கின்றது எனக் கூறினாரென்பதாம்.

தானே யாகி நிறைந்தெல்லா வுலகு முயிருந் தானேயாய்த்
தானே யானென் பானாகித் தன்னைத் தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலே யமுதே திருமா லிருஞ்சோலை
கோனே யாகி நின்றொழிந்தா னென்னை முற்று முயிருண்டே.

என்று திருவாய்மொழி கூறுவ திங்குணர்தற்பாலதாம்.

'அமுது' என்பது இறைவன் ஆநந்த சொரூப னென்பதையும், 'அரசு' என்பது சத் சொரூப னென்பதையும் இங்குணர்த்திநின்றன.

ஆசைக்கட்டு முற்றுமொழிந்த விடத்து பேசாவநுபூதி வாய்க்குமெனல்

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூ திபிறந் ததுவே. (14)

பதவுரை

தூசா மணியும் — பரிசுத்தமாகிய முத்துமாலையையும், துகிலும் — பட்டாடையையும், புனைவாள் — தரித்துள்ள வள்ளி நாயகியாரது, நேசா!— காதலனே!, முருகா! — முருகனே!, நினது — உன்னுடைய, அன்பருளால் — அன்பின் முதிர்ச்சியாலாகிய கருணையால், ஆசா நிகளம் — (எனது) ஆசையாகிய விலங்கு, துகள் ஆயின பின் — பொடியாய் அழிந்த பின், பேசாத—(இன்னதன்மைய தென்று குறிப்பிட்டுக்) கூறுதற் கியலாத, அநுபூதி— ஆத்மானுபவம், பிறந்தது—(எனக்கு) உண்டாயது (அதனை யான் எவ்வாறு கூறுதற் குரியவனாவேன்?).

விசேஷவுரை.

இறைவனே! நீ பெருங் கருணையோடு எனக்குத் தத்துவ உபதேசம் செய்தமையால், எனது ஆசைக் கட்டு முற்றும் ஒழிந்துவிட்டது; அதனுல், யான் இன்னதன்மைய தென்று கூறுதற் கியலாத ஆத்மானுபவம் உடையவனு யினேன் என்ருரென்பதாம்.

ஆசையை நிகளமாக உருவகஞ் செய்ததற் கியைய, அருளைவாளாக உருவகஞ் செய்யாமையின், இஃது ஏகதேச வுருவகவணியாம்.

ஆசை யறுமின்க ளாசை யறுமின்கள்
ஈசனோ டாயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வாநந்த மாமே.

என்று திருமந்திரம் கூறுவ திங்குணர்தற்பாலதாம்.

குரு கடாட்சம் பெற விரும்பல்.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே! (15)

பதவுரை

உருவாய்—(இன்ன தன்மையதென்று குறித் தறியப்படும் காரியவடிவப்) பிரபஞ்சமாயும், அருவாய் — (இன்ன தன்மைய தென்று குறித்தறியப்படாத காரணவடிவ) மாயையாயும், உளதாய் — பாவ பதார்த்தமாயும், இலதாய்— அபாவ பதார்த்தமாயும், மருவாய்—(மலரின்) மணமாயும், மலராய் — (அம்) மலராயும், மணியாய்—மணியாயும், ஒளியாய் — (அம் மணியின்) ஒளியாயும், கருவாய்—உடம்பாயும், உயிராய்—(அதனுள் வசிக்கும்) உயிராயும், கதியாய்— (அவ்வுயி ரடையும்) மோட்சமாயும், விதியாய் — (மாயை முதலியவற்றை விளக்கும்) அறிவாயும், குருவாய் — (அன்பர்க் கருள் செய்யக்) குருவாயும், வருவாய்!—வருகின்ற இறைவனே, குகனே!—குகப்பெருமானே! அருள்வாய்— (நீ எனக்குக் குருவாக விரைந்து வந்து) அருள் செய்தல் வேண்டும்.

விசேஷவுரை

திருசியப் பொருள் அனைத்துமாயும், அவற்றை விளக்குபவனுயுமுள்ள

இறைவனே! நீ குருமூர்த்தி வடிவங் கொண்டு விரைந்து வந்து யான் உய்யு மாறு எனக்குக்கருணை செய்தல்வேண்டும் என்றுரென்பதாம். விதி — அறிவு.

இருக்கின்ற தென்னும் வியவகாரத்திற் கேதுவாயுள்ள பதார்த்தம் பாவ பதார்த்தமாம்.

இல்லை யென்னும் வியவகாரத்திற் கேதுவாயுள்ள பதார்த்தம் அபாவ பதார்த்தமாம். வருவாய் என்பது வினையாலணையும் பெயர்.

இல்லது முள்ளது மியாவையுந் தானாகி
இல்லது முள்ளது மாயன்று மண்ணலைச்
சொல்லது சொல்லிடிற் றூராதி தூரமென்
றெல்லை யுணர்ந்தா லுயிர்க்குயி ராகுமே.

என்று திருமந்திரம் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

உ
சிவமயம்

தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த
திருப்பாடல்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவை.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுஅது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம். (1)

குறிப்பு :— பூர்த்தியாகி—நிறைவாகி. இச்சை—விருப்பம். எதிர்வழக்கிடவும்—நேர் நின்று வாதிக்கவும். நின்றது எது? — அவரவர் தெய்வமாக நின்றது எந்தப் பொருள்?. பெருவழக்காய்—முடிவு பெறாத பெரிய வழக்காகி. ஒரு சித்தாகி—ஒப்பற்ற ஞானமாகி. கங்குல் பகல்—இரவு பகல் (கேவல சகலம்). கேவலம்—மறப்பு (ஆழ்ந்த நித்திரை). சகலம்—நினைப்பு (சாக்கிரமும் சொப்பனமும்). இசைந்தது—ஒத்தது. அஞ்சலி செய்குவாம்—கை கூப்பி வணங்குவாம்.

தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பனமுதல்
தேகங்க ளத்தனையும் மோகங்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாங்கிறக்கும்
விரிவாய பூதங்கள் ஒன்றோடொன் றுயழியும்
மேற்கொண்ட சேடம்அதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்யம் உபசாந்த
வேதவே தாந்தஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருள்அருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை யென்றைக்கும் இறவாமை யாய்வந்து
பேசாமை யாகுமெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (2)

குறிப்பு:— தெரிவாக—அறிவுடனே. மோகங்கொள்—மயக்கத்துக் கிடமான. பௌதிகம்—பூதசம்பந்தமானது. சென்மித்த ஆங்கு—உற்பவித்தல் போலவே. சேடம் அதுவே—(அழியாது) மிஞ்சியுள்ள அந்த வஸ்துவே. வெறுவெளி—சிதாகாசம். நிராலம்பம்—ஆதாரம் வேண்டாதது. உபசாந்தம்—கேவல சகல மற்றவிடம். இந்த நிலையை ஞான அஞ்ஞான ரகிதம் என்றுஞ் சொல்லுவர். இங்கு ஞானம் என்பது சுட்டறிவைக் குறிப்பதாம். பேசாமை — மௌன நிலை. பரிபாக காலம்—பரிபக்குவ காலம்.

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
ஆளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவர்எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நானெனக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே. (3)

குறிப்பு:— அளகேசன்—குபேரன். அம்பொன்—அழகிய பொன். பாசக் கடல்—ஆசைக் கடல். மனது அற்ற—மனம் இறந்த. பரிசுத்த நிலையை—பரிசுத்தமாகிய மௌன நிலையை. அருள்வாய்—கிருபை செய்வாய். ஆசையானது நிலம் பொருள் போகம் என்னும் மூன்றின் வழியாக வருவது. இம் மூன்றும் நிலையல்லனவாயிருந்தும் இவற்றில் வைக்கும் ஆசைக்கு வரம்பில்லை ஆதலால் "ஆசைக்கோர் அளவில்லை" என்றார்.

பெருவெளியாய் ஐம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருவிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவும் அன்பரைக்கோத் தறவிழுங்கிக்
கொண்டப் பாலுந்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப் பொருளினையாஞ்
சிந்தை செய்வாம். (4)

குறிப்பு:— மனம் ஆதிக்கு—மனம் வாக்கு முதலியவைகளுக்கு. அன்பரைக் கோத்து அற விழுங்கிக்கொண்டு—அன்பர்களுடைய சீவபோதம் கெடும்படி உட்கொண்டு. அப்பாலும் தெரிவு அரிதாய் கலந்தது — அதன் மேலும் அறிதற் கரிதாகிக் கலந்தது.

இந்திர சா லங்கனவு கானலின் நீரெனவுலகம்
எமக்குத் தோன்றச் [illegible]
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க [illegible]
புந்திமகி ழுறநாளுந் தழைத்தூறவா னந்தவெள்ளம்
பொலிக வென்றே [illegible]
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யனுதினமும்
வழுத்தல் செய்வாம். (5)

குறிப்பு: சிற்பரம்(சித்+பரம்)—மேலான ஞானம். அஃதாவது பாசஞானம் பசுஞானம் இரண்டும் நீங்கிய சிவஞானம். தற்பரம்—சுத்தசிவம். புந்திமகிழ் உற—மனமகிழுமாறு. வழுத்தல் செய்வாம்—துதி செய்குவாம்.

ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
அடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள்
அறிவாக நின்றநிலையில்
சிந்தையற நில்லென்று சும்மா விருத்திமேற்
சின்மயா னந்தவெள்ளந்
தேக்கித் திளைத்துநான் அதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழவரு
ளியநந்தி மரபுவாழ்க
வென்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனுேப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (6)

குறிப்பு:— பூதமுதல்நாதமும் அடங்க—பூதங்கள் முதலாக நாதத்துவம் இறுதியாக முழுதும். வெளியாக வெளிசெய்து—பகிரங்கமாக (மெய்ப் பொருள் அல்லவென்று) யாவையும் வெளிமயமாய்ப்பார்க்கும் தத்துவசுத்தி செய்து. அறியாமை—கேவலநிலை. அறிவாதி—இங்கு பாசஞானம் பசுஞானம் முதலியனவைக் குறிக்கிறது. அறிவாக நின்ற நிலையில் — வியாபக அறிவு சொரூபமாக விளங்கும் ஆன்மாவின் கண். சிந்தை அறநில் என்று—மனமற நிற்பாயென்று. தேக்கி திளைத்து—நிறைய அநுபவித்து. நீ செய் சித்திரம்—நீ செய்த விசித்திரம். வேதாகமத் துணிபு—வேதாகம நிச்சயம்.

ஆகார புவனமின்பா கார மாக
அங்ஙனே யொருமொழியால் அகண்டா கார
யோகாநு பூதிபெற்ற அன்ப ராவிக்
குறுதுணையே என்னளவும் உகந்த நட்பே
வாகாரும் படிக்கிசைகிண் கிணிவா யென்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோல்
தேகாதி யுலகமெங்குங் கலந்து தானே
திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே. (7)

குறிப்பு:— ஆகாரம்—உருவம்; வடிவம். புவனம்—உலகம். ஆகாரபுவனம் இன்ப ஆகாரமாக—நாமருபவடிவமாய்க் காணப்படுகின்ற உலகமானது சுக வடிவமாக. உறுதுணை—மிகுந்த துணை. வாகு ஆரும்படி—அழகு பொருந்தும் படி. இசை—ஒலிக்கின்ற. அனந்த ஆனந்தமயம் — முடிவில்லாத ஆனந்தத் தன்மையான. தானே திகழ்—தானே விளங்குகின்ற.

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங் கண்டனைமேல்
தருமொழியிங் குனக்கில்லை யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே. (8)

குறிப்பு:— ஒருமொழி—ஒப்பற்ற மோனமொழி. மலை இலக்கு—மலைக் குறிபோன்றது. வட்டு—சொக்கட்டான் காய். வட்டாடல்—சொக்கட்டான் ஆடுதல். கோடுஇன்றி வட்டாடல் கொள்வது ஒக்கும்—வீடு வகுத்துக் கொள் ளாமல் சொக்கட்டான் விளையாடுவது போன்றிருக்கும்; அஃதாவது வீடு வகுக்காவிட்டால் வெற்றி தோல்வி இல்லாத வீண் விளையாட்டாகும். கருமொழி — இனிப்பிறத்தலுக் குரிய உபதேச மொழி. பொது — சபை; (ஞாநாகாசம்)

பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போற்
பார்த்தனையே முடிவில்நின்று பாரெதுதான் நின்ற
தாராலும் அறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீ யெங்கிருந்தும் அதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியைநாட் டாதே
ஓராதே யொன்றையுநீ முன்னிலைவை யாதே
உள்ளபடி முடியுமெலா முள்ளபடி காணே. (9)

குறிப்பு:— பாராதி—பூமி முதலிய. அண்டம்—உலகம். முடிவில் நின்று பார்—அந்தத்திலிருந்து நோக்கு. எதுதான் நின்றது—அவ்விடத்தில் நிலையாக நின்றது யாது? ஆராலும் அறியாத சத்து அன்றோ—அது யாராலும் உணரப் படாத சத்து அல்லவா? அது ஆய் அங்கு நீஇரு—அப்பொருளாய் அவ்விடத்தில் (சிந்தையற) நீஇரு. (அவ்வாறு இருப்பையாயின்) எங்கு இருந்தும் அது ஆவை—எவ்விடத்திருப்பினும் அப்பொருளே ஆவாய். பூராயம் ஆக—விசித்திரமாக. நீ ஒன்றையும் ஓராதே—நீ ஒன்றையும் எதிரிட்டு உணராதே. (நீ ஒன்றையும்) முன்னிலைவையாதே—நீ ஒன்றையும் முன்னிலையாக வைத்துப் பாராதே; அஃதாவது ஒன்றையும் நீ சுட்டிப்பாராதே. ''அதுவாய் அங்கு இரு நீ'' என்பது சிவோகபாவனை.

உள்ளபடி யென்னவுநீ மற்றொன்றைத் தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டாநிஷ் களங்கமதி யாகிக்
கள்ளமனத் துறவைவிட்டெல் லாந்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பக லற்ற
வெள்ளவெளிக் கடல்மூழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றிக்
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே. (10)

குறிப்பு:— தொடர்ந்திட்டு—பற்றிக்கொண்டு. நிஷ்களங்க மதி ஆகி—களங்கமற்ற (அருவ) மனமாகி. கள்ளமனத்து உறவை விட்டு—வஞ்சக மனதினுடைய சம்பந்தத்தை யொழித்து. கங்குல் பகல் அற்ற—இராப் பகல் (கேவல சகலம்) இல்லாத. விரவி—கலந்து. விள்ளவும்—சொல்லவும். கம்பலை—சரீர நடுக்கம். தம்பட்டம்—பறை.

அடிமுடியும் நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டால்
அத்துவித ஆனந்த சித்தமுண்டாம் நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த
கோலமெல்லாம் நன்ருகுங் குறைவுநிறை வறவே
விடியுமுத யம்போல அருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் வருமே. **(11)**

குறிப்பு:- பரவெளி மேற்கொண்டால்—ஞானுகாசம்மேலோங்கில். விடியும் உதயம் போல அருளுதயம் பெற்ற—விடிகிற உதய கால சூரியன் போல அருள் உதயத்தைத் தம்மிடம் பெற்ற. வித்தகரோடும்—ஞானிகளோடும்.

பேசா வநுபூ தியையடியேன்
பெற்றுப் பிழைக்கப் பேரருளால்
தேசோ மயந்தந் தினியொருகாற்
சித்தத் திருளுந் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்தவன்பர்
பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா பொதுவில் நடமாடும்
இறைவா குறையா வின்னமுதே. **(12)**

குறிப்பு:— பேசா அநுபூதி—மோன நிலையால் பெறப்படும் அநுபூதி. பெற்றுப்பிழைக்க—அடைந்து உய்யுமாறு. பேரருளால்—பெருங் கருணையால். தேசோமயம்—சுயம்பிரகாச மயம். பாசாடவி (பாச+அடவி)—ஆசையாகிய காடு. அகண்டப் பரப்பு ஆன — வியாபகமான. பொதுவில் நடமாடும் — அம்பலத்தில் (பரவெளியில்) நடனஞ்செய்கின்ற. குறையா இன் அமுதே — என்றுங்குறையாத இனிய அமுதமே.

அகண்ட மென்ன அருமறை யாகமம்
புகன்ற நின்றன்மை போதத் தடங்குமோ
செகங்க ளெங்குந் திரிந்துநன் மோலத்தை
உகந்த பேருனை யொன்றுவர் ஐயனே. **(13)**

குறிப்பு:— மறை—வேதம். நின்தன்மை—நினது சொரூபம். போதத்தடங்குமோ?—சீவபோதத்துக்குள் அடங்குமோ? அஃதாவது வியாபக அருட்போதத்தாலன்றி ஏகதேசப்பட்ட சீவபோதத்தால் சிவசொரூபத்தை அறிய முடியாதென்பதாம்.

நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல்
நடுவே சும்மா
தானமரும் நிலையிதுவே சத்தியஞ்சத் தியமெனநீ
தமிய னேற்கு
மோனகுரு வாகியுங்கை காட்டினையே திரும்பவுநான்
முளைத்துத் தோன்றி
மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே பரந்தேனே
வஞ்ச னேனே. (14)

குறிப்பு:— நான் எனவும் நீ எனவும்—நானென்றும் நீயென்றும், இருதன்மை நாடாமல்—இருவகையாகப் பகுத்துப்பாராமல், நடுவே சும்மா தான் அமரும்—நடுநிலையில் மனச் சங்கற்பமற்றிருக்கின்ற, நிலையிதுவே சத்தியம் சத்தியம் என—சமநிலையாகிய இதுவே உண்மை உண்மை என்று, நீ தமியனேற்கு—தேவரீர் அடியேனுக்கு, மோனகுருவாகியும் வந்து—மவுனகுருவாகியும் பூமியின்கண் வந்து, கைகாட்டினையே—கையமைத்துச் சின்முத்திரையைக் காட்டி உபதேசஞ் செய்தனையே, (அங்ஙனம் காட்டியும்) வஞ்சனேன்—பாவியேன், திரும்பவும் நான் முளைத்துத்தோன்றி—மறுபடியும் நானென்னும் சங்கற்பம் தோன்றி, மானத மார்க்கம் புரிந்து—மனம்போனவழியே சாதனை செய்து, இங்கு அலைந்தேன்—இவ்விடத்து மனம் வருந்தித் துன்பப்பட்டேன், பரந்தேன்—(சகமயமாய்ப்) பரந்தேன். (பரத்தல்—மிகுதியாதல்; விருத்தியாதல்)

ஒன்றுமற நில்லென் றுணர்த்தியநம் மோனகுரு
தன்றுணைத்தா ணீடூழி தாம்வாழ்க—என்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரு மின்பக் கனி. (15)

குறிப்பு: ஒன்றும் அறநில் என்று-(துவிதம், அத்துவிதம் ஆகிய) விகற்ப பேதம் எதுவும் இல்லாமல் (சிந்தையற) வியாபகவிளக்கத்தில் நிலைத்து நில்லென்று. அங்ஙனம் நிலைத்து நிற்றலே சிவஞான நிட்டையாம். தன்றுணைத் தாள் — தன் + துணைத்தாள். சின்மயராந் தன்மையர்க்கே—ஞானமயமாய் விளங்குந் தன்மையுடையவர்களுக்கே.

பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனைநின்
மெய்யருளின் மூழ்கின் விடுங்காண் பராபரமே. (16)

குறிப்பு: பொய்யுலகவாழ்க்கை — பொருளல்லவற்றை மெய்ப்பொருளெனக் கருதிவாழும் வாழ்க்கை. புலைச்சேரி—பறைச்சேரி. வாதனை—வாசனை. ஐம்புல வேடருடன் வளர்ந்து வாழ்வதால் உண்டாகும் வாசனை புலைச்சேரி வாசனையை ஒக்கும் என்றனர். அத்தகைய விடயவாசனை திருவருட்கடலில் மூழ்கினால் நீங்கி விடும்.

சித்திநெறி கேட்டல் செகமயக்கஞ் சன்மமற
முத்திநெறி கேட்டன் முறைகாண் பராபரமே. (17)

குறிப்பு: அட்டமாசித்தி முதலியவற்றையடையப் பெரியோரை யடுத்துக் கேட்டுக்கொள்ளுதல் புகழடைய வேண்டியாகலான் அது உலகமயக்கம். முத்தி மார்க்கத்தை அடையக் கேட்டுக் கொள்ளுதலே தக்கமுறையாகும்.

தன்னை யறிந்தருளே தாரகமா நிற்பதுவே
உன்னை யறிதற் குபாயம் பராபரமே. (18)

குறிப்பு: ஆன்மாவாகிய தன்னைச் சற்குருகிருபையால் அறிந்து பின்னர் திருவருளை ஆதாரமென நம்பி அத்திருவருள் நாட்டமாய் சிந்தையற நிற்றலே தேவரீரை (சுத்த சிவத்தை)த் தெரிந்து கொள்வதற்கு உபாயமாகும். (தாரகம்—ஆதாரம்)

கற்றகலை யானிலைதான் காணுமோ காண்பதெல்லாம்
அற்றவிடத் தேவெளியாம் அன்றோ பராபரமே. (19)

குறிப்பு: கலைஞானத்தினால் உண்மை நிலைவாய்க்குமோ? முன்னிலைச் சுட்டு நீங்கிய விடத்தே சுட்டியறியப்படும் விடயங்கள் யாவும் நீங்கும். அஃதாவது "முன்னிலையொழிந்திட அகண்டிதாகாரமாய் மூதறிவு" மேலுதிக்கும். அப்பொழுது எல்லாம் ஏகவெளியாய்ப் பரமானந்தமாய் விளங்கும்.

விரிந்த மனமொடுங்கும் வேளையில் நானாகப்
பரந்த அருள்வாழி பதியே பராபரமே. (20)

குறிப்பு:— பகிர்முகப்பட்டு விரிந்து செல்லும் மனம் அந்தர் (உள்) முகமாகக்குவியும் வேளையில் ஆன்ம சொருபமாக வியாபித்து நின்ற திருவருள் வாழக்கடவது இறைவனே. (ஆன்மாவின் சுயம்பிரகாசம் வியாபித்து விளங்கும் நிலையைத் திருவருளென சைவசித்தாந்த சாஸ்திரங்கள் கூறும்).

நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ
சுத்த அருள்நிலைநீ சொல்லாய் பராபரமே. (21)

குறிப்பு:— நித்திரை—சுழுத்திநிலை (கேவலம்). சாக்கிரம் (விழிப்பு நிலை) சொப்பனம் (கனவு நிலை) ஆகிய இரு நிலைகளையுஞ் சேர்த்துச் சகல மென்பர். சகல நிலையில் நினைவினது வியாபாரம் உண்டு. கேவல நிலையில் நினைவு ஒடுங்கிப் பாழ்மயமாய் நிற்கும். கேவல சகல நிலையிரண்டுங் கடந்து ஆன்மா நிற்கும் நிலைதானோ அதி பரிசுத்தம் பொருந்திய திருவருள் நிலை? தேவரீர் திருவாய் மலர்ந்தருளுவீராக! (ஆம்).

அண்டபகி ரண்டம் அனைத்துமொரு படித்தாக்
கண்டவர்கள் கண்டதிருக் காட்சியையுங் காண்பேனோ? (22)

குறிப்பு:— அண்டம்—உலகம். பகிரண்டம்— (இந்தவுலகத்திற்குப்) புறம்பாகவுள்ள மற்றவுலகங்கள். எல்லாவுலகங்களும் சின்மயமாய் விளங்கும் திருக்காட்சியினை அடியேன் காணப்பெறுவேனோ? கண்டவர்கள்—மெய்யடியார்கள். ஒருபடித்து—ஒரேதன்மை (சர்வமும் சின்மயமாய் விளங்கும நிலை).

மண்ணோ டுழன்ற மயக்கமெல்லாந் தீர்ந்திடவும்
விண்ணோ டெழுந்தசுகம் மேவுநாள் எந்நாளோ. (23)

குறிப்பு:— மண்ணோடு உழன்ற மய்க்கம்—பிரபஞ்சத்தில் அல்லற்பட்ட மயக்கம். விண்ணோடு எழுந்த சுகம்—சிதாகாசத்தில் உதயமாகும் சிவானந்தம்.

நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வே றென்றணையார்
வஞ்சகத்தார் அல்லரவர் மார்க்கமென்னோ பைங்கிளியே. (24)

குறிப்பு:— என் மனத்தின்கண் குடிகொண் டிருப்பவர் (சிவசொருபம்). அவரை நான் எண்ணிநாடில் அவர் என்னை வேறென்று கருதிப் பொருந்தார். அவர் வஞ்சகமுடையாருமல்லர். அவரது போக்கு என்னையோ?. சிவானந்தத்தைத் தேடில் அகப்படாது. ஆன்மாவில் சிந்தையறச் சும்மாவிருக்கில் சிவானந்தம் தானாகவே விளையுமென்பது தாற்பரியம்.

நானே கருதின்வர நாடார்சும் மாவிருந்தால்
தானே அணைவரவர் தன்மையென்னோ பைங்கிளியே. (25)

குறிப்பு:— நினைவின் வியாபரம் இருக்கும் வரை இன்பநிலையுண்டாகா தென்பது தாற்பரியம்.

ஆரணங்கள் ஆகமங்கள் யாவுமே ஆனந்த
பூரணமே உண்மைப் பொருளென்னுங்—காரணத்தை
ஓராயோ வுள்ளுள்ளே யுற்றுணர்த்தவ் வுண்மையினைப்
பாராயோ நெஞ்சே பகர். (26)

குறிப்பு:— ஆரணங்கள் — வேதங்கள். ஆகமங்கள் — சிவாகமங்கள். யாவும் — எல்லாக்கலைகளும். ஓராயோ?—ஆராய்ந்து தெளியாயோ?.

மனத்தாலும் வாக்காலும் மன்னவொண் ணுமோன
இனத்தாரே நல்ல இனத்தார்—கனத்தபுகழ்
கொண்டவரும் அன்னவரே கூறரிய முத்திநெறி
கண்டவரும் அன்னவரே காண். (27)

குறிப்பு:— மன்னுதல்—பொருந்துதல்; நிலைபெறுதல். மோன இனத்தாரே—மவுனநிலையினையுடைய கூட்டத்தினரே. முத்திநெறி கண்டவரும்—மோட்ச மார்க்கத்தினை அறிந்து அனுபவித்து வாழ்பவரும்.

உ
சிவமயம்

திருமூல நாயனார் அருளிச் செய்த
திருமந்திரத்திலிருந்து தெரிவு செய்யப்பெற்ற
பாடல்கள்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. (1)

குறிப்பு:— இந்து—சந்திரன். எயிறு—தந்தம். நந்தி—சிவன், நந்தி மகன்—சிவபிரானது திருக்குமாரனாகிய விநாயகக்கடவுள். ஞானக்கொழுந்து—ஞானப் பிரகாசம், புந்தி—உள்ளம். அடி—திருவடி. போற்றுதல்—துதித்தல். ஐந்து திருக்கரங்களை உடையவரும், யானை போலும் திருமுகமுடையவரும், இளம்பிறைபோலும் தந்தம் உடையவரும், சிவபிரானது திருமகனும், ஞானப்பிரகாச வடிவினருமாகிய விநாயகக் கடவுளை உள்ளத்தில் வைத்து அவரது திருவடிகளைத் துதிக்கின்றேன் என்றார்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. (2)

குறிப்பு:— ஒன்றே குலம்—மனிதகுலம் எல்லாம் ஒன்றே. மனிதனது நிஜவடிவம் அகண்ட அறிவுசொரூபமாதலின் ஒன்றே குலம் என்றனர். அகண்ட அறிவு சொரூபம் சுயம்பிரகாசமாய் எங்கும் விளங்கலின் பேதமில்லை. தேவன்—கடவுள். நமன்—இயமன். நாணுமே—நாணுதல் இன்றி. கதி—மோட்சம். கதியில்லை—கதிவேறில்லை சித்தம்—அறிவு. சித்தத்து நின்றே நிலைபெற—அறிவினிடத்து நிற்றல் ஞான நிட்டை யென்பர் அங்ஙனம் நிட்டை யெய்திப் பரநிலையை அடைய. இப்பாடல் தரும் உண்மைகள் ஆவன:- (1) மனித குலம் ஒன்றே (2) கடவுள் ஒருவரே (3) நாணுது நல்லவற்றையே நினைமின். (4) ஞானநிட்டை யெய்திப் பரகதியடைமின். (5) நமன் இல்லை. (அஞ்ஞானமே இயமன்).

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (3)

குறிப்பு:— கு—அஞ்ஞானம். ரு—ஒழிப்பவன். குரு—அஞ்ஞானத்தை ஒழித்து ஞானத்தை நல்குபவன். நந்தி—திருநந்தி தேவர்; திருமூலநாயனரது குரு. திருநந்திதேவர் சிவபிரானிடம் அருள் ஞானம் பெற்றவர். குறித்து—அறிவினல் ஆராய்ந்து. ஒரார்—(குருவே சிவமெனச் சீவர்கள்) அறியார். சிவன்—ஈசுவரன் (எல்லாவற்றையும் நடாத்துபவன்). கோன்—தலைவன்; ஆள்பவன். உரை—சொல்; வாக்கு. உணர்வு—சிற்றுணர்வு (சீவபோதம்). ஓர்—ஒப்பற்ற. கோ—பதி. உரையுணர்வற்றதோர் கோ என்பது பதி; அஃதாவது சுத்தசிவம். அது மனவாக்கைக் கடந்த மெய்ப்பொருள். இப்பாடல் உணர்த்தும் உண்மைகளாவன:- (1) சிவமே ஞானகுருவாக வருபவர். (2) குருவே சிவம். (3) குருவே எவ்வகை நிலையிலும் ஆன்மாவை ஆளும் தலைவர். (4) திருவருளாக விளங்கி ஆன்மாவை இயக்குபவரும் குருவே. (5) குருவினது அருமையும் பெருமையும் வாக்கு மனங் கடந்தது. (6) சிவமே குருவாக வருவதைப் பொதுவாக ஆன்மாக்கள் அறிகிலர்.

உமாபதி சிவாசாரியார் பின்வருமாறு ஞானகுரவனது இயல்பைக் கூறுகிறுர்:—

அறியாமை உள்நின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ. (திருவருட்பயன்)

குறிப்பு:— காணும் குறியாகி நீங்காத கோ — தூல நிலையில் கண்ணுற் காணும் வடிவினை உடையதாகி, (ஆன்ம நிலையில் நம்மை) விட்டுப் பிரியாது நிற்கின்ற ஞானகுரவன். அறியாமை உள்நின்று அளித்ததே—இதுவரை அறியப்படாதபடி உயிர்க்குயிராய் நின்று உதவி செய்து வந்த திருவருளேயாகும்.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (4)

குறிப்பு:— அன்பு—கருணை; திருவருள். அன்பின் உருவமே சிவம். சிவம்—பேரின்பநிலை; கற்பனை கடந்த பரம் பொருள். திருவருளைக் குருவருளால் அறிந்து அத்திருவருள் நாட்டத்திலிருப்போர் பேரின்பநிலையையெய்துவர் என்பது தாற்பரியம்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. (5)

குறிப்பு:— பெறுதற்கரிய பிறவி--மானிடப்பிறவி. "அரிதரிது மானிடராதல் அரிது" என்பது ஔவைப் பிராட்டியாரது வாக்கு. பெறுதற்கரிய பிரான்—சிவபிரான், அடி—திருவடி. பேணார்—வணங்காதவர்கள்; அஃதாவது திருவருளை அறிந்து அதன் வழி நில்லாதவர்கள். பிராணிகள்—சீவர்கள்; அஃதாவது தேகாதிதத்துவங்களை நான் என்றும் எனதென்றும் அபிமானிப்பவர்கள். பெறுதற்கரிய பேறு—வீடு பேறு; மோட்சம் (முத்தி நிலை)

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே. (6)

குறிப்பு:— சிவ=சி+வ, சி—சிவம். வ—திருவருள். தீவினையாளர்—பாவமான காரியங்களைச் செய்பவர்கள். மாளும்—நீங்கும், தேவர்—உயர்ந்தோர்; அஃதாவது சாத்வீக அம்சமேலோங்கி உள்ளம் பிரகாசமாய் இருப்பவர்கள். சிவகதி—சிவானந்தமாய் விளங்கும் நிலை (மோட்சம்), உலகத் துன்பம்

மும்மலம் ஆகியவற்றிலிருந்து நீங்குவதற்கு மிகவும் எளிதான வழியும், "சிவ" என்னும் ஈரெழுத்தின் பேராற்றலும், அதனை முறைப்படி செபித்தலால் உண்டாகும் பயனும் கூறினர்.

வெல்லு மளவில் விடுமின் வெகுளியைச்
செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினுற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. (7)

குறிப்பு:— வெல்லுமளவில்—பாசபந்தத்தை வெல்லும் வரைக்கும். வெகுளி — கோபம். செல்லு மளவும் — தேகம் நீங்குகின்ற காலவரையறை மட்டும். செலுத்துமின் சிந்தையை — நினைவைத் திருவருள் நாட்டத்திற் செலுத்துமின். அல்லும் பகலும்—இரவும் பகலும் (சந்ததமும்). அருளுடன் தூங்கினுல்—திருவருட் பிரகாசத்தில் நித்திரை செய்தால்; இதை நனவிற் சுழுத்தியென்பர். கல்லும் பிளந்து—கல்லுப் போல விருக்கும் ஆணவ மலமும் கெட்டு. கடுவெளி—பரமாகாயம்; சிதாகாசம்.

முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்
பின்னைப் பிறவியிற் பேற்றுல் அறியலாந்
தன்னை யறிவ தறிவாமஃ தன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகுமே. (8)

குறிப்பு:— முன்னைப் பிறவியில்—முற்பிறப்பில், முதுதவம்—நல்லதவம். பேற்றுல் அறியலாம்-பயனுல் அறியலாம். தன்னை அறிவது-ஆன்மாவாகிய தன்னை அறிவு சொருபமென உணருவது; அறிவாம்—உண்மை அறிவாம். பின்னை யறிவது—அறியப்படும் பொருள்களை(திருசியங்களை) அறிவது. பேயறிவாகும்—பொய்யறிவாகும்; பயனில்லாத அறிவாகும். ஆன்மாவின் நிஜசொருபம் விளங்காதவரைக்கும் சிவஞானம் உதயமாகாதென்பதை உற்றுணர்தல் வேண்டும்.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. (9)

குறிப்பு:— ஞானம்—சிவஞானம் (மெய்ஞ்ஞானம்). மிக்க—மேலான. அறநெறி—தருமத்தைப் போதிக்கும் நல்ல வழி. நாட்டில்லை(நாட்டில்+இல்லை)—உலகில் வேறு இல்லை; நன்றன்று (நன்று+அன்று)—நல்லதன்று; அஃதாவது பயனற்றதாகும். ஞானத்தின் மிக்கவை—சிவஞானம் அல்லாத பசுஞானம் பாச ஞானம் முதலியன. சரியை கிரியை யோகம் ஆகிய மூன்றும் பதமுத்தியையே நல்கும். சிவஞானம் மட்டுமே பர (சிவசாயுட்சிய) முத்தியைக் கொடுக்கும். நன்முத்தியென்றது சாயுட்சிய முத்தியை; அத்துவிதநிலையை. ஞானத்தின் மிக்கோர்—சிவாநுபூதி பெற்றவர்கள். நரரின் மிக்கார்—மனிதரில் சிறப்புடையவர்கள். சிவாநுபூதிச் செல்வர்களாதலால் எல்லா மனிதர்களிலும் பார்க்கச் சிறப்புடையவர்களாவர் என்றனர்.

நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே. (10)

குறிப்பு:— நான் என்பது ஆன்மா, தான் என்பது அகண்டபரம். நானென்ற ஞானமுதல்வன்—கருத்தாவாகிய ஞானசற்குரு. வியட்டி(தனித்த) தேகாதி தத்துவங்களைப் பொருளல்ல வென்று நேதிகளைந்து ஆன்மாவினது நிஜசொருபத்தை (சிற்சோதியை) அறிந்து அதை நாடல் "நானென்று நாடல்" அதன் பின்பு சமட்டி (எல்லாத்) தேகாதிதத்துவங்களைப் பொருளல்லவென்று நேதிகளைந்து பரத்தினது நிஜசொருபத்தை (அகண்ட சிற்சோதியை) அறிந்து அதை நாடல் "தானென்று நாடல்". முன்னது சொருபநிட்டையெனப்படும்; பின்னது சகச நிட்டையெனப்படும். இவ்விருவகை நிட்டையும் நழுவாது நழுவி நிற்குமிடம் ஐக்கிய நிலையெனப்படும். ஆதலால் ஆன்மாவினது நிஜசொருபமும் பரத்தினது நிஜசொருபமும் பேதமாகவில்லையென்று ஞானசற்குரு உபதேசித்தருளினர். அங்ஙனம் அருளிச்செய்தவிடத்து நானென்றும் தானென்றும் உண்டாகும் நினைவைக் கைவிட்டுச் சும்மாவிருந்தனன். அங்ஙனம் இருப்பதுவே சுட்டற்ற பரிபூரண நிலையாம்.

"சும்மா விருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மால் அறிதற் கெளிதோ பராபரமே."

என்னும் தாயுமான சுவாமிகளது திருப்பாடலையும் உற்றுணர்தல் நன்று.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. (11)

குறிப்பு;— பொன் அணி பூடணம்—பொன்னால் ஆகிய ஆபரணம். ஆபரணமாகப் பார்க்கும் பொழுது பொன் மறைந்து ஆபரணமே தோன்றும். ஆபரணங்களின் காரணத்தை நாடிப்பார்க்கும் பொழுது ஆபரணம் மறைந்து பொன்னே தோன்றும்.

கரணங்கள்—அந்தக்கரணங்கள் (நினைவாதிகள்). அந்தக்கரணங்களின் சேட்டைகளால் ஆன்மாவின் நிஜசொருபம் விளங்காது. அந்தக்கரணங்களின் சேட்டைகள் அற்றவிடத்து ஆன்மாவின் நிஜசொருபம் தானகவே பிரகாசிக்கும். காரிய நாட்டத்தால் காரணம் மறைந்து காரியமே தோன்றும்; காரணநாட்டத்தால் காரியம் மறைந்து காரணமே தோன்றும் என்பது தாற்பரியம். இத்திருப்பாடல் சொரூப நிட்டையை உதாரண முகத்தால் விளக்குவது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. (12)

குறிப்பு:— மரத்தினாலே செய்யப்பட்ட யானையை யானையாகப் பார்க்கும் பொழுது ஆதாரம் மறைந்து யானையே தோன்றும்; யானையின் ஆதாரத்தை நாடிப்பார்த்தால் யானை மறைந்து மரமே தோன்றும். பார்முதற்பூதம்—நிலம் முதலிய ஐம்பூதப் பொருட்கள். ஐம்பூதங்களுக்கும் அவற்றின் காரியங்களுக்கும் ஆதாரமாய் இருப்பது அகண்டபரம்பொருள். ஐம்பூதங்களும் அவற்றின் காரியங்களும் ஆதேயமெனப்படும். ஆதேயநாட்டத்தில் (நாமரூபமாகப்பார்க்கும் நாட்டத்தில்) அகண்ட ஆதார நாட்டம் விளங்காது. அகண்ட ஆதார நாட்டத்தில் (பரவெளியாய்ப் பார்க்கும் நாட்டத்தில்) ஆதேயம் தோன்றாது. ஆதேய நாட்டம் முன்னிலைச் சுட்டினால் விளைவது. ஆதார நாட்டம் முன்னிலை ஒழிந்த விடத்துண்டாவது. இத்திருப்பாடல் சகச நிட்டையை உதாரணமுகத்தால் விளக்குவது.

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தி யுண்டாமே. (13)

குறிப்பு — செயலற்றிருத்தல் — அந்தக்கரணங்களின் சேட்டைகள் அற்றுச் சும்மாவிருத்தல். சிவானந்தம்—பேரின்பம். சிவயோகம் சிவஞானத்திலும் கீழ்ப்பட்டநிலை. சிவஞானத்தினால் விளைவது சிவானந்தம். சிவயோகத்

திலுல் விளைவது சிவஞானம். ஆதலால் சும்மா விருந்து பேரானந்தத்தைத் துய்ப்போர் எங்ஙனம் சிவயோகத்தை மேற்கொள்வர்? செகத்தொடுங் கூடார்—பிரபஞ்ச மய்மாகார். செய்தியுண்டாமே—மோனநிலையின் இயல்பும் சிறப்பும் பயனும் செயலற்றிருப்பார்க்கே உண்டு.

சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. (14)

குறிப்பு:— இத் திருப்பாடல் சிவ தரிசனத்தைப்பற்றிக் கூறுவது. சிந்தை—இப்பாடலில் ஆன்மாவைக் குறிக்கிறது. என்ன—எனவும். வேறு இல்லை—இருவேறு பொருள்கள் பேதமாகவில்லை. தெளிய வல்லார்—கேட்டல், சிந்தித்தல் ஆகியவற்றால் தெளிதலாகிய நிலையைப் பெற்றோர். கேட்டல்—ஞானசற்குரு முன்னிலையில் மகாவாக்கியங்களைப் பற்றிக் கூறக் கேட்டு, நிட்டை கூடலைக் கேட்டல் என்பர். ஐக்கியங் கூடுமாறெங்ஙனமெனச் சிந்திக்க உசாவுதலைச் சிந்தித்தலெனவும், அங்ஙனஞ் சிந்தித்தலாய பயன் சித்தமயக்கந்தீர்ந்து சுயம்பாய் விளங்குதலைத் தெளிதல் எனவுங் கூறுவர். "சித்தம் ஏகாந்தமான தரிசனந் தெளிதல்" என்பார் ஆன்றோர். இத்திருப்பாடல் தரும் உண்மைகளாவன:— சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்கு (1) சிந்தையினுள்ளே சிவனும் வெளிப்படும். (2) சிந்தையினுள்ளே சிவனிருந்தான். (3) அங்ஙனமாய நிலையில் சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை.

ஓதும் மயிர்க்கால் தொறுமமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத வானந்தம்
ஆதிச் சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதம தோதுஞ் சொரூபிதன் மேன்மையே. (15)

குறிப்பு:— இத்திருப்பாடல் சிவசொரூபதரிசனத்தைப் பற்றிக் கூறுவது. மயிர்க்கால்—உரோமத்துவாரங்கள். ஊறிய—ஊறுகின்ற. பேதம்—வேறுபாடு. அபேதம்—வேறுபாடு இல்லாமை. அமுதூறிய ஆனந்தம், பிறழாத ஆனந்தம் எனத் தனித்தனிக் கூட்டுக. மூன்று சொரூபங்களாவன சீவசொரூபம், சாட்சி சொரூபம், பரசொரூபமாம். இவைமூன்றையுங் கடந்தது சிவசொரூபம். சொரூபமென்பது தனது வடிவம். சீவசொரூபம் — தானல்லாத தேகாதி தத்துவங்களைத் தானென்றும் தனதென்றும் அபிமானிக்கும் உணர்வு.

சாட்சி சொரூபம்—தேகாதி தத்துவங்களுக்கு வேருகிச் சம்பந்தமற்று நிற்கும் உணர்வு. பரசொரூபம்—அகண்டமாய் மாயையுடன் கூடிப் பஞ்சகிருத்தியங் களை நடாத்தும் ஈசுவர வடிவம். சிவசொரூபம்—பரசொரூபத்துக்கும் சாட்சி யாக விளங்கும் நிலை. சிவன் முத்தர்களது அகண்டமனம் பேதப்பட்ட விடத்தும், பேதப்படாத விடத்தும் அமுதூறிய ஆனந்தம் பிறழாது. அது என்றும் ஒரு தன்மையாக விருக்குமென வேதங்கள் சிவசொரூபத்தின் மேன்மையைப் பற்றிக்கூறும்.

அடியார் நிந்தையால் வருங்கேடு

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றின் மாய்ந்திடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

குறிப்பு:— பத்தினி—கற்புடை மகளிர். பக்தர்கள்—சிவனடியார்கள். தத்துவம்—உண்மை. தத்துவஞானிகள்—உண்மைப் பொருளை உணர்ந்த சிவன் முத்தர்கள். சித்தம்—உள்ளம். சிதைவுகள்—துன்பங்கள். அத்தம்—செல்வம். ஆவி—உயிர். சத்தியம்—உண்மை "இது" என்னும் சுட்டுப் பெயர் "ஈது" எனச் செய்யுள் ஓசைக்காக நீண்டது.

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி ஆணையே. (17)

குறிப்பு:— இதயம்—உள்ளம். வாசவன்—வசுக்களுக்கெல்லாம் தலைவ னுகிய இந்திரன். வாசவன் பீடமும் — இந்திராதியர் அனுபவிக்கும் செல்வம் போன்ற சம்பத்தை நல்கத்தகுந்த இடமும். மாமன்னன் — பெரிய அரசன். மாமன்னர் பீடமும் — செங்கோல் முறைக்குப்பேர்போன இடமும். நாசம் — அழிவு. மேற்கூறிய இருபாக்களால் அடியார் நிந்தை, குரு நிந்தை முதலிய வற்ருல் வருந் தீமைகளைத் திருமூல நாயனுர் உணர்த்தினுர். அடியார் நிந்தை மறந்தும் செய்யற்க என்பதாம்.

உ
சிவமயம்

பட்டினத்தடிகள் அருளிச்செய்த திருப்பாடல்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்றவை.

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந்தொ ழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. (1)

குறிப்பு :— கல்லாப்பிழை — பக்தி நூல்களையும் ஞானநூல்களையும் கற்காத பிழை. நின்அஞ்செழுத்தைச் சொல்லாப் பிழை—தேவரீரது திருவைந்தெழுத்தை முறைப்படி செபியாத பிழை. கச்சியேகம்பனே—திருக்கச்சியில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போர்தொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே. (2)

குறிப்பு:- ஐ—சிலேத்துமம் (கபம்; சளி). மெய்—உடம்பு. திருநீறு மிட்டு—(அடியேன்) விபூதியினையுந்தரித்து. கையுந்தொழப் பண்ணி—தேவரீரை அஞ்சலி செய்யவும். ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே—ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்கவும் கற்பித்தருளுவீராக!

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதம்நினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே. (3)

குறிப்பு:— வினைப்போகமே ஒருதேகம்—இருவினை (நல்வினை, தீவினை)களை அநுபவித்தற்குற்ற இடமே ஒரு சரீரம். வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது—இருவினையின் போகமான இன்ப துன்பங்கள் ஒழிந் தால் இச்சரீரம் தினையளவு நேரமும் நில்லாது. நினையாரை நீங்கிந் நெறி யில் நின்றால்—நினையாரை விட்டுவிலகு. இந்த வழியில் நின்றால். (நீங்கிந்நெறி=நீங்கு+இ+நெறி)

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே. (4)

குறிப்பு:— முடிசார்ந்த மன்னரும்—முடிதாங்கிய அரசரும். இந்தப் படி சார்ந்த வாழ்வை — இந்தப் பூமியில் பொருந்திய நிலையற்ற பிரபஞ்ச வாழ்க்கையை. அடிசார்ந்து—திருவடியைச் சரணடைந்து.

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேயலையக்
கடப்படு மோஅற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே. (5)

குறிப்பு:— பிரபஞ்சவாழ்க்கை—பொய்யுலக வாழ்க்கை. திடப்படுமோ—உறுதிபெறுமோ. சொக்கநாதன்—சொக்கலிங்கப் பெருமான் (திருவாலவாய் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர்) திருவாலவாய்—மதுரை.

அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்ன விசாரம்வைத் தாயிறை வாகச்சி யேகம்பனே. (6)

குறிப்பு:— விசாரம்—கவலை. சொன்னம்(சொர்ணம்)—பொன். இங்கு பொருளைக்குறிக்கிறது. நல்தோகையர்— அழகுவாய்ந்த பெண்கள். பன்னுதல்—புகழ்ந்து பேசுதல்; புணர்தல்.

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலேயுளதோ அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே. (7)

குறிப்பு:— ஈண்டு "நல்லார்" என்பது மனத்தூய்மை கொண்ட மாசற்ற சிவஞானிகளே. இணக்கம்—நட்பு. நின்பூசை—தேவரீரது பூசை. நேசம்—அன்பு. ஞானம்—சிவஞானம். அகம்—வீடு. இல்லாள்—மனேவி. எழில் உடம்பு—அழகுவாய்ந்த தேகம்.

அறந்தா னியற்றும் அவனிலுங் கோடி அதிகமில்லந்
துறந்தான்; அவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனேயற்
றிறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே! (8)

குறிப்பு:— அறந்தான் இயற்றும்—இல்லறத்தை முறையாக நடாத்தும். இல்லந்துறந்தான்—கிருகத்தாச்சிரமத்தை விட்டு நீங்கிய (புறப்பற்றற்ற)துறவி. சதகோடி—நூறு கோடி. உள்ளத்துறவுடையோன்—அகப்பற்றற்ற சந்நியாசி. மறம்—தீவினே. அறிவோடு இருந்து—ஆன்மாவின் நிஜசொருபத்தோடு மனம் பொருந்தியிருந்து. இருவாதனே—இருவகை வாசனே. அவையாவன அசுத்த வாசனே; சுத்த வாசனே. வாதனே யெனினும் வாசனே யெனினும் ஒக்கும். இறந்தான் பெருமையை—மனம் இறந்த ஞானியது சிறப்பினேப்பற்றி.

மாயநட் போரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு, மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் ருயைமறந்
தேயும தேநிட்டை யென்ருன் எழிற்கச்சி யேகம்பனே. (9)

குறிப்பு:— மாயநட்போரையும்—நன்மை செய்வதுபோலத் தீமைகளே வி‌ளேவிக்கும் மாயையின் சண்டையையும். வீதல்—கெடுதல். வீயவிட்டோட்டி—அறவே விட்டு விட்டு. (சர்வசங்கப் பரித்தியாகஞ் செய்து). மெய்யருளாந்தாய்—திருவருள் என்னும் தாய் (அகண்டாகார விருத்தியால் உதயமாவது). தாதை—தந்தை (சிவானந்தப் பெருக்கு). ஏய்தல்—பொருந்துதல். ஏயும் அதே நிட்டை—பொருந்தியிருக்கும் அத்தன்மையே நிட்டை.

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்துந்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தில் அருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே. (10)

குறிப்பு:— பொருளுடையோர்—பொருட்செல்வம் உடையோர். தெருளுடையோர்—மனத் தெளிவு உடையோர், இருளறு சொல்லினும்—அஞ்ஞானம் நீங்குவதற்குக் காரணமாகிய அவர்களது சொற்களாலும். காணத்தகும்—கண்டு உணரலாகும்.

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும்; பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே யதுகாண் நன்மருந் துனக்கே. (11)

குறிப்பு:— இது எப்படியோ?—இது எப்படி என்றுலோ?. அடிக்கமலம் மறவாதிரு—திருவடியாகிய தாமரையை மறவாதிரு. அதுகாண் நன்மருந் துனக்கே—திருவடியை மறவாதிருத்தலே உனக்குச் சாகாமைக்கேதுவாகிய நல்ல மருந்தாகும்.

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானு கரனைப் புராந்தகனை
அவியா விளக்கைப் பொன்னம்பலத் தாடியை யைந்தெழுத்தாற்
செவியாமல் நீசெபித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே. (12)

குறிப்பு:— தவியாதிரு—இளைக்காமல் இரு. சங்கரன்—சிவபெருமான். புவி—உலகம். ஆர் நிறைந்த. ஞானுகரன் (ஞான+ஆகரன்)—ஞானத்திற்கு உறைவிடமாயிருப்பவன். புராந்தகன் — (புர+அந்தகன்) — முப்புரங்களையும் எரித்தோன். ஐந்தெழுத்தால் செபியாமல் நீ செபித்தால்—ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைக் கொண்டு நீ செபிக்காமல் செபித்தால் பிறவாமுத்தி சித்திக்குமே—பிறவாமைக்குக் காரணமாகிய முத்தியுண்டாகுமே. (முத்தி – மோட்சம்).

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்மல்
ஆட்டமென் றேயிரு பொல்லா வுடலை அடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே. (13)

குறிப்பு:— சற்குரு நாட்டமென்றேயிரு — ஞானசாரியனே தஞ்சமென நோக்கங் கொண்டிரு. இதைக் குருபரத் தியானம் என்பர். சற்குருபாதத்தை நம்பு—சற்குருவினது திருவடியை (உண்மையாக) நம்பு. பொல்லா உடலை பொம்மல் ஆட்ட மென்றே யிரு—குற்றம் நிறைந்த உடலைத் தோற்பாவைக் கூத்தென்றே கருதியிரு. சுற்றத்தை அடர்ந்த சந்தைக் கூட்டமென்றேயிரு—சுற்றத்தார்களைச் சந்தையிற் கூடுஞ்சனத்திரளென்றே மதித்திரு. வாழ்வைக் குடங்கவிழ் நீர் ஓட்டமென்றேயிரு—இவ்வுலக வாழ்வினைக் குடத்தினின்றும் சாய்ந்த வெள்ளத்தின் ஓட்டமெனவே யிரு. உடல் சுற்றம் வாழ்வு அனைத்தும் அநித்திய மென்றும் சிவன்திருவடியே நித்திய மென்றும் நம்பியிருவென்றார்.

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித், தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவியாமற், பரமானந்தத்தின்
எல்லையிற் புக்கிட வேகாந்த மாயெனக் காமிடத்தே
அல்லலற் றென்றிருப்பே னத்தனே கயிலா யத்தனே. (14)

குறிப்பு:— சங்கடம் பேசி—தனக்குரிய குறைகளைச் சொல்லி. பரிதவியாமல்—வருந்தாமல். எல்லையில் புக்கிட—முடிவில் பிரவேசிக்க. ஏகாந்தமாய்—தனிமையாய். எனக்கு ஆம் இடம்—அடியேனுக்குத் தகுந்த இடம்(அருள்நிலை). அல்லல்—துன்பம். திருவடி யின்பமாகிய பரமானந்தத்தை அடையாதகாறும் அல்லலும் அவலமும் வந்துகொண்டே மனத்தைத் தாக்கும் என்பது வெளிப்படை.

என்செய லாவதி யாதொன்று மில்லையினித் தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே. (15)

குறிப்பு:— எல்லாம் தேவரீரது செயலன்றி, அடியேன் செயல் யாதுமில்லை யென்று இன்று உணரப்பெற்றேன். பட்டினத்தடிகளைத் திருடனென நினைத்துக் கழுவேற்றக் கட்டளை பிறப்பிக்கப் பட்டது. கழுமரத்தை அணுகிய நேரம் அடிகள் இப்பாசுரத்தை அருளிச் செய்தனர். உடனே அக்கழுமரம் தீப்பற்றி யெரிந்தது.

அட்டாங்க யோகமும் ஆதார மாறுமவத் தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. (16)

குறிப்பு:- அட்டாங்கயோகம்—எட்டு உறுப்புக்களை உடைய யோகம்; அவையாவன:- இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி. ஆதாரம் ஆறு. அவையாவன:— மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை. அவஸ்தை—நிலை; அஃதாவது சீவனது நிலை. அவஸ்தை ஐந்து. அவையாவன சாக்கிரம் (விழிப்புநிலை), சொப்பனம் (கனவு), சுழுத்தி (ஆழ்ந்த நித்திரை), துரியம், துரியாதீதம். வெளிதனிலே — சிதாகாசமாகிய ஞானாகாசத்திலே. வட்டு — கருப்பு வட்டு (வெல்லங்கட்டி). வட்டாகி — இனிமையில் வெல்லங் கட்டி போல்வதாயுள்ள. மதி — சந்திரன். செம்மதிப்பால் — உச்சி வெளியில் ஊறும் அமுதம். (இதை விண்ணிலவு மதியமுதம் என்பர்.) எட்டாத பேரின்பம்—கிடைத்தற்கரிய சிவானந்தம்,

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்குமொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பார் கருத்தில்வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே. (17)

குறிப்பு:— எங்குமொன்றாய் (நிறைந்து)—எவ்விடத்திலும் ஒரே தன்மையாய் நிறைந்து. எங்கும் நிறைந்து பரஞ்சோதியாய் விளங்கும் சிவபெருமானை அகத்திலும் புறத்திலும் தியானித்துச் சுவாநுபூதியையடைய வழிதெரியாமல் நூல்களை மாத்திரங் கற்று வீண் காலம் போக்குகிறார்கள் மூடர்கள் எனவுங் கூறினர்.

மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையுஞ் செந்தீ
யையா நின்மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே (18)

குறிப்பு:— மையாடு கண்ணியும்—மை தீட்டிய கண்களையுடைய மனைவியும். மாயை உருவெளித் தோற்றம்—(நாமரூபமனைத்தும்) மாயையினது பொய்த் தோற்றம். அகிலம்—உலகம். சுவாநுபூதி மேலோங்க மேலோங்க மாயையின் காரியம் அனைத்தும் வெறும் பொய்யாகவும், கேட்ட பழங்கதை ஆகவும், சொப்பனம் ஆகவும், மெல்ல மெல்ல கழிந்து நீங்கும்.

மானார் விழியைக் கடந்தேறி வந்தனன்; வாழ்குருவும்
கோனாகி யென்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுநற்பே றிதுபொய் யன்றுகாண்
ஆனாலும் இந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே.

குறிப்பு:— மானூர்விழியைக் கடந்து—மான்போலும் பார்வையினை யுடைய மாதரின் கண்களுக்குத் தப்பி. குடியேற்றிக் கொண்டனன்—திருவடி நீழலிற் குடியேறச் செய்தனன். போனாலும் பேறு— இத்தேகம் நீங்கினும் அடியேன் அடைவது விதேகமுத்தி. இருந்தாலும் நற்பேறு—தேகத்துடன் சீவித்துக் கொண்டிருப்பினும் அடியேன் சந்ததமும் இருப்பது சீவன் முத்தி நிலையில். விதேகமுத்தி நிலையில் நற்சீடருக்கு உபதேசாதிகள் இல்லை சீவன் முத்திநிலையில் உபதேசாதிகள் உண்டு. ஆதலால் சீவன் முத்தி நிலையை "நற்பேறு" என்று கூறினர்.

விதியார் படைப்பும் அரியார் அளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பும் நம்பால் அணுகாது பரானந்தமே
கதியாகக் கொண்டுமற் றெல்லாந் துயிலிற் கனவெனநீ
மதியா திருமன மேயிது காணன் மருந்துனக்கே. (20)

குறிப்பு:-- விதியார் படைப்பு—பிரமதேவரது படைத்தற்றொழில், அரியார் அளிப்பு—திருமாலுடைய காத்தற்றொழில், பதியார் துடைப்பு—சிவனது அழித்தற்றொழில். நம்பால் அணுகாது—நம்மிடத்தில் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்கள் சாராது. மனமே! சிவானந்த மொன்றுமே நாமடையுங் கதியாக் கருதி மற்றவை யனைத்தும் வெறும் சொப்பனம் போல நீ மதிக்காமல் இருப்பாயாக!

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவினை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். (21)

குறிப்பு:— வித்தகமாய்—சாதுரியமாய். காதி—நீர்க்குடத்தைத் தலைமேல் வைத்து ஆடும் ஒருவகை விளையாட்டு (கரகம்). எந்தத் தொழிலைச் செய்யினும், என்ன உபத்திரவ முற்றாலும் சீவன்முத்தர்களது உள்ளம் மோன நிலையை விடாது நிற்கும். எது போல என்னில் சாதுரியமாய் அசைந்து விளையாடிக்கொண்டு, இரண்டு கைகளை வீசிக்கொண்டு, வந்தாலும் தாதியின் மனமானது தண்ணீர்க் குடத்திலேதான் நிற்கும்.

உ
சிவமயம்

பின்வருஞ் செய்யுட்கள்
பரஞானத்தின் பயன்
என்னும் நூலிலிருந்து தெரிவு செய்யப்பெற்றவை.

சோதிடமும் வைத்தியமுஞ் சொல்லுமிகு மந்திரமும்
பேதிக்குஞ் சன்னதமும் பேயாட்டும் — ஆதியருள்
ஞானமென நம்புதல் தப்பாகும் நம்பாமல்
ஊனமெனக் காண்போம் உணர்ந்து. (1)

குறிப்பு :— பேதிக்குஞ் சன்னதம் — (புத்தியை) மாறுபடச் செய்யுந் தெய்வ ஆவேசம். ஆதியருள் ஞானம் — பரஞானம் (பதிஞானம்). ஊனமென — குற்றமென.

ஊனமிகு ஆவி யுலகின் கதைதன்னை
ஞானமென நம்பிவிடல் நாசங்காண் — ஞானமிகு
சற்குருவைச் சார்ந்துய்யத் தற்பரனைப் பக்தியாற்
பற்றிநில் நெஞ்சே பணிந்து. (2)

குறிப்பு :— ஆவியுலகு — இறந்தபின் உயிர்கள் இருக்கும் உலகு. தற்காலத்தில் இறந்தவர்களுடன் பேசுகிறோம் என்று கட்டை தள்ளிக்கூறும் விபரீதமான கதைகளை மெய்யென்று அனேகர் நம்பி மதிமயங்குகிறார்கள் இதனால் அஞ்ஞானம் மிகுமன்றி மெய்ஞ்ஞானம் உதயமாகாது. தற்பரனை — இறைவனை.

தன்னை யறியார் தலைவனையுந் தானறியார்
பின்னையவர் ஞானம் பிதற்றலே—அன்னவரைச்
சாராது சற்குருவைச் சார்ந்துய்யத் தெய்வமே
பாரா யருட்கண் பதித்து. (3)

குறிப்பு :— தன்னை — ஆன்மாவை. தலைவனை — இன்பசொருபமாக விளங்கும் அகண்ட பூரணத்தை.

தன்னை யறிந்து தனிவெளியுந் தானுகி
இன்பநிலை தேக்கி யிருப்பவரே—மன்னுதவ
ஞானகுரு அன்னவரை நம்பியருள் பெற்றக்கால்
ஈனப் பிறவி யிறும். (4)

குறிப்பு :— தனிவெளி—சிதாகாசம் (ஞானுகாசம்). தேக்கி—நிறைந்து. மன்னு — நிலைபெற்ற. பிறவியிறும் — பிறப்பு நீங்கும்.

அகத்தில் புறத்தில் அருளொளியைக் கண்டு
சுகவெளி தானுன தூயோர் — சகமயக்க
மற்ற அறிஞர்காண் நன்னெஞ்சே அன்னவரை
உற்றதுணை யென்றே யுணர். (5)

குறிப்பு :— அருளொளி — ஆன்மவொளி (ஞானப்பிரகாசம்). சுகவெளி — இன்பமயமாக விளங்குஞ் சிதாகாசம். சகமயக்க மற்ற—பிரபஞ்சத்தால் உண்டாகும் மயக்கம் நீங்கிய.

உள்ளுணர்வை யுற்றுணரில் ஓயாச் சுயஞ்சோதி
உள்ளமதைக் கொள்ளைகொண் டோங்கிநிற்கும்—தெள்ளமுத
மூறியெங்கு மூடிடுமே மோனசிவம் தானெனவே
தேறி யிருத்தல் சிறப்பு. (6)

குறிப்பு :— தேறியிருத்தல்—அநுபவத்தால் தெளிந்திருத்தல்.

பின்வருஞ் செய்யுட்கள்
ஒளவை குறளிலிருந்து
தெரிவுசெய்யப் பெற்றவை.

உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு. (1)

குறிப்பு :— உள்ளம்—மனம். பீடம்—ஆசனம் அல்லது இருப்பிடம். உணர்வு—ஆன்மவுணர்வு (அறிவு). சிவம்—பேரின்ப நிலை. லிங்கம்—அடையாளம். சிவலிங்கம் — சிவனுக்கு அடையாளம்; அந்த அடையாளம் யாதெனில் ஆன்மவுணர்வு. தெள்ளியர்—(ஞான சற்குருவிடம் கேட்டுச் சிந்தித்து நிட்டைகூடித்) தெளிந்தவர்கள். அர்ச்சிக்குமாறு—பூசை செய்யும் வழி. ஞானசற்குவினது கிருபையால் ஆன்மாவின் நிஜ சொருபத்தையறிந்து அதில் சிந்தையற நிற்கில் பேரின்பம் உதயமாகுமென்பது ஆன்றோர் நிச்சயம். தெளிந்தவர்கள் தங்களது உள்ளத்தைப் பீடமாகவும், உணர்வைச் சிவலிங்கமாகவுங் கண்டு அகப்பூசை செய்வார்களென்பது கருத்து.

சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவம் நசிக்கும் பரிந்து. (2)

குறிப்பு :— சீவன்—தேகாதிதத்துவங்களை நான் அல்லது எனது என்று அபிமானிக்கும் உணர்வு; அங்ஙனம் அபிமானியாது தேகாதிதத்துவங்களுக்கு வேறுகிச் சம்பந்தப்படாது நிற்கும் உணர்வைச் சாட்சி அல்லது ஆன்மவுணர்வு என்று கூறுவர். ஞானசற்குருவிடங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர்கள் ஆன்மவுணர்வைச் சிவலிங்கமாக அநுபூதி நிலையிற் காண்பார்கள். அன்னார்களது பாவம் தானுகவே நீங்கி விடுமென்பது கருத்து. மேற்கூறிய கருத்துக் களையே திருமூலநாயனுரும் பின்வருஞ் செய்யுளில் கூறியிருப்பதை அன்பர்கள் உற்றுணர்வது நன்று.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

சைவ சமயத் திருமுறைப்

பாராயணத் திரட்டு

முற்றிற்று.

முப்பத்தாறு தத்துவங்கள்

(1) பிருதிவிமுதல் அகங்காரம் ஈருகவுள்ள
ஆன்ம தத்துவம் — 24

(2) காலமுதல் மாயை ஈருகவுள்ள
வித்தியா தத்துவம் — 7

(3) சுத்தவித்தை முதல் சிவம் ஈருகவுள்ள
சுத்த தத்துவம் — 5

ஆக 36

ஆன்ம தத்துவ விளக்கம்

பூத பஞ்சகம்	5
ஞானேந்திரிய பஞ்சகம்	5
தன்மாத்திரா பஞ்சகம்	5
கன்மேந்திரிய பஞ்சகம்	5
அந்தக்கரண சதுஷ்டயம்	4
ஆக ஆன்ம தத்துவம்	24

ஆன்மதத்துவத்தை அசுத்த தத்துவமென்றும், போக்கிய காண்டமென்றுங் கூறுவர். (போக்கியம்—புசிக்கப்படும் பொருள். காண்டம்—கொத்து அல்லது கூட்டம்)

பூதம் — 5

(1) பிருதிவி (மண்) (2) அப்பு (நீர்) (3) தேயு (நெருப்பு)
(4) வாயு (காற்று) (5) ஆகாயம் (வெளி)

ஞானேந்திரியம் — 5

1. சுரோத்திரம் (செவியிலிருப்பது)
2. துவக்கு (மெய்யிலிருப்பது)
3. சட்சு (கண்ணிலிருப்பது)
4. சிங்நுவை (நாக்கிலிருப்பது)
5. ஆக்கிராணம் (மூக்கிலிருப்பது)

தன்மாத்திரை — 5

(1) சப்தம் (ஓசை) (2) பரிசம் (ஊறு) (3) ரூபம் (உருவம்)
(4) ரசம் (சுவை) (5) கந்தம் (நாற்றம்)

கன்மேந்திரியம் — 5

1. வாக்கு — வசனிக்கும்
2. பாதம் — நடக்கும்
3. பாணி (கை) — இடுதல் ஏற்றல் செய்யும்
4. பாயுரு (குதம்) — மலஜலாதிகளை வெளியே தள்ளும்
5. உபஸ்தம் (குறி) — சுகத்தைப்பண்ணும்

அந்தக்கரணம் — 4

1. மனம் (வாயுபோல் சலிக்கும்)
2. புத்தி (அக்கினியைப்போல் விளக்குவிக்கும்)
3. சித்தம் (அப்புவைப்போல் விடயங்களைப்பற்றிச் செல்லும்)
4. அகங்காரம் (நானென்று அபிமானிக்கும்)

வித்தியா தத்துவ விளக்கம்

1. காலம் — வாழ்வின் எல்லையைக் குறிக்கிறது.
2. நியதி — கருமபலத்தை இவ்வளவென்று நிச்சயஞ்செய்து நிறுத்துவது.
3. கலை — ஆன்மாவின் ஆணவத்தைச் சிறிது நீக்கி அதன்பால் கிரியையை எழுப்புவது.
4. வித்தை — ஆன்மாவின் அறிவை விரியச் செய்வது.

5. அராகம் — விடய போகங்களில் இச்சையை உண்டாக்குவது

6. புருடன் — காலம், நியதி, கலே, வித்தை, அராகம் என்னும் இவ்வைந்தையும் சட்டையாகக் கொண்டு ஆன்மா இந்திரியங்கள் வாயிலாகச் சப்தாதி விஷயங்களே அனுபவிக்கும் சமயம் புருடனெனப் பெயர்பெறும். காலம், நியதி, கலே, வித்தை, அராகம் என்னும் ஐந்தும் கஞ்சுக சரீரம் என்பர். (கஞ்சுகம்—சட்டை).

7. மாயை — உள்ளதை உள்ளவாறு உணரவிடாது மயக்குவது.

மேற்கூறிய ஏழும் வித்தியா தத்துவமெனப்படும். வித்தியா தத்துவத்தை சுத்தாசுத்த தத்துவமென்றும், போக காண்டமென்றும், போசயித்திரு காண்டமென்றுங் கூறுவர். (போசயித்திரு—புசிப்பிப்பவன்)

சுத்ததத்துவ விளக்கம்

1. சுத்தவித்தை 2. ஈசுரதத்துவம் (மகேசுவரம்) 3. சாதாக்கிய தத்துவம் (சதாசிவம்) 4. விந்து தத்துவம் 5. நாத தத்துவம் ஆகிய இவை ஐந்தும் சுத்ததத்துவமெனப்படும். சுத்ததத்துவத்தைச் சிவதத்துவமென்றும், பிரேரக காண்டமென்றுங் கூறுவர் (பிரேரகம்—ஏவுதல் அல்லது செலுத்துதல்)

(1 சுத்தவித்தை

ஞானம் ஏறிநிற்கக் கிரியை குறையவிருப்பது சுத்தவித்தையாம். இது உருத்திரமென்றும் சொல்லப்படும்.

(2) ஈசுர தத்துவம்

கிரியை ஏறிநிற்க ஞானம் குறையவிருப்பது ஈசுர தத்துவமாம். இது மகேசுவரம் என்றும் சொல்லப்படும்.

(3) சாதாக்கிய தத்துவம்

ஞானமுங் கிரியையும் ஒத்திருப்பது சாதாக்கிய தத்துவமாம். இது சதாசிவம் என்றும் சொல்லப்படும். இது அநுக்கிரகத்துக் கிடமாம்.

(4) விந்து தத்துவம்

கிரியை வடிவமாயிருப்பது விந்து தத்துவமாம். இது சத்தி தத்துவமென்றும் சொல்லப்படும். இது காருணியத்திற்கிடமாம்.

(5) நாததத்துவம்

சவிகற்ப ஞானவடிவமாயிருப்பது நாததத்துவமாம் (மாத்திரைப் பிரணவம்). இது சிவதத்துவமென்றும் சொல்லப் படும். இந்நிலை சகள சிவனுக்கு இடமாம். சுத்ததத்துவம் ஐந்தும் சுத்தமாயையின் காரியமாகும். சுத்தமாயையையுங் கடந்து நிற்கும்நிலை சுத்த சிவமாம். சுத்த சிவத்தைத் தரிசித் தலே பதிஞானமாம்.